ஸ்ரீ:

ஸ்ரீ செந்தமிழ்

# மும்மணிக்கோவை

1266

ஸ்ரீமன் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்தது

ஸ்ரீ:

# செந்தமிழ் மும்மணிக்கோவை

(ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளியது)

திருவஹீந்திரபுரம், மஹாமஹோபாத்யாய, ஸ்ரீ தேசிக
தர்சன விஜய த்வஜ, பண்டித பூஷண, பகவத்விஷய,
வித்வான், சேட்டலூர்

**ஸ்ரீ நரஸிம்ஹாசாரிய ஸ்வாமி**

அருளிய உரையுடன் கூடியது

ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமியின் திருவடி அரும்புலி
யூர், கொமாண்டூர் ஸ்ரீ. உப. கோபாலஸ்வாமி
ஐயங்காரின் பொருளுதவியால் ஸ்ரீ சேட்டலூர்
ஸ்வாமியின் அநுஜ்ஞையில் ஸ்ரீ தேசிகதர்சன
துரந்தர உபயபாஷா பண்டித வித்வான்
சேட்டலூர் ஸ்ரீநிவாஸமூர்த்தியால் பரிசோதித்து
வெளியிடப்பட்டது

இரண்டாவது பதிப்பு] 1951 [விலை 1—0—0

## ஸமர்ப்பணம்

ஸ்ரீ தேசிக தர்சனத்தைப் பலவிதத்தாலும் தழைக்கச் செய்து வரும் ஸ்ரீமத் அஹோபில மஹா ஸ்தானத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக வெழுந்தருளி யிருக்கும் ஜ்ஞான அநுஷ்டான வைராக்ய நிதியாகிய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யேத்யாதி பிருதுகளால் அலங்க்ருதரான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன், ஷை மஹாஸ்தானம் 43-வது பட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கும் மேல்கண்ட வைபவங்களோடு கூடிய ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஆகிய இரண்டு ஸ்ரீ அழகிய சிங்கர்கள் ஸந்நிதியிலும் அநந்த கோடி ப்ரணாமங்களோடு ஸமர்ப்பிக்கப் பட்டது.

ஹிந்துஸ்தானி பிரசார் பிரஸ், தியாகராயநகர், சென்னை.

ஸ்ரீ திருவஹீந்திரபுரம்

மஹா மஹோபாத்யாய ஸ்ரீ தேசிக தர்சன விஜயத்வஜ

பண்டித பூஷண பகவத்விஷய வித்வான்

# ஸ்ரீ சேட்டலூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி

MADURAI ... MADURAI



ஸ்ரீமத் ஸ்ரீவாஸ ராமானுஜ குரு கருணா லப்த வேதாந்த யுக்மம்
தத்பாதாம்போஜஸேவா விலஸ தமலதீ சாந்திசுத்தாந்தபூமிம் ।
ஸ்ரீமத் ராமானுஜார்யாத் ஸ்வபிதுரதிகதா சேஷஸத்சாஸ்த்ர ப்நந்தம்
வேதாந்தாசார்ய ஸூக்தி ப்ரவசன சதுரம் ஸ்ரீந்ருஸிம்ஹார்யமீடே ॥

ஸ்ரீ:

# முன்னுரை

ஸ்ரீமதே நரஸிம்ஹார்ய மஹா தேசிகாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச் செய்துள்ள முதல் தமிழ்ப் பிரபந்தம் செந்தமிழ் மும்மணிக் கோவைதானென்பதில் ஒருவருக்கும் அபிப்பிராய பேதமே இல்லை.

ஸ்ரீதேசிகன், தாம் வடமொழி தமிழ் என்னு மிரண்டு மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்று, ஸம்பிரதாய நூல்களை யெல்லாம் நன்கு தெளியக் கற்று, மனதை யடக்கித் தவம் புரிந்து ஸ்ரீஹயக்ரீவப் பெருமானுடைய திருவருளுக்குப் பாத்திர மானபின்பு, திருவஹீந்திரபுரத்து எம்பெருமானிடம் பெரிதும் ஈடுபட்டு, அந்த ஈடுபாடு தம்முள்ளடங்காமல் பெருக்கெடுத்து வர, அவ் வனுபவத்தையே மும்மணிக் கோவை யென்னும் தம்முடைய இந்த முதல் தமிழ்ப் பிரபந்தத்தில் சித்திரித்துத் தந்துள்ளார்.

பக்தியின் ப்ரவாஹத்தை உரை நூலால் வர்ணிக்க முடியாது. உயர்ந்த இந்தக் கருத்தைச் சிறந்த கவிதையால்தான் விளக்க முடியும். கவிதை கவியி னுள்ளத்தைச் சொல்லால் விளக்குவதைக் காட்டிலும் த்வனியினாலும் குறிப்பினாலுந் தான் சிறப்பாக வுணர்த்தும். ஸ்ரீஹயக்ரீவனுடைய அனுக்கிரஹத்தைப் பெற்ற ஸ்ரீதேசிகனுக்குக் கவிதை தம் முயற்சியின்றிப் பெருக்கெடுத்து வந்தது. அவர் தமது முதல் தமிழ்க் கவிதையாகிய இந்த நூலில் தமது உள்ளத்தி லெழுந்த வுணர்ச்சிக ளவ்வளவையும் அழகழகாகச் சித்திரித்துத் தந்து விட்டார்.

தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்க ளிருக்கின்றன. இருந்தும் ஸ்ரீதேசிகன் தம்முடைய இந்தத் தமிழ்க் கன்னிக் கவிதையைத் தொடுக்க மும்மணிக் கோவை யென்னும் இந்தப் பிரபந்தந்தான் மிகவும் ஏற்றதென்று திருவுள்ளம்பற்றி யருளினார்.

அவர் அவ்வாறு திருவுள்ளம் பற்றியதற்குக் காரணத்தை உய்த்துணர வேண்டும்.

MADURAI ★ MADURAI

மும்மணிக் கோவை யென்பது ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் மூன்று விதமான பாக்கள் ஒன்றன் பின் ஒன்று வருமாறு முப்பது பாக்களோடு அந்தாதியாக அமைந்திருக்க வேண்டும். இந்த மூன்று விதமான பாக்களும் நம்மாழ்வாருடைய முதல் மூன்று பிரபந்தங்களை ஞாபகப் படுத்துகின்றன. அவை திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவிருத்தம் என்பவைதான். நம்மாழ்வாரையே எல்லாத் துறைகளிலும் தமக்கு வழிகாட்டியாகத் திருவுள்ளம் பற்றிய ஸ்ரீதேசிகன் தமது முதல் தமிழ்ப் பிரபந்தத்தை யமைக்கும்போதும் ஆழ்வாருடைய முதல் மூன்று நூல்களை வழிகாட்டியாகக் கொண்டருளியதில் வியப்பில்லை. அவர் நம்மாழ்வாருடைய இந்த மூன்று பிரபந்தங்களின் யாப்புக்களை யனுஸரித்துத் தம்முடைய பாசுரங்களின் யாப்புக்களை அமைத்துக் கொண்டதோடு நில்லாமல், ஆழ்வாருடைய நான்கு பிரபந்தங்களின் பொருளையும் தம்பாசுரங்களில் அழகாகக் கையாண்டுள்ளார்.

நம்மாழ்வாருடைய பிரபந்தங்களை யடியொற்றித் தம்முடைய செந்தமிழ் மும்மணிக் கோவையை யமைத்ததனால், ஸ்ரீதேசிகன், தாம் 'மாசில் மனந்தெளி முனிவர் வகுத்த வெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா' வென்று பாசுரமிட்டதைத் தமது செயலினாலும் காட்டியருளினார்.

நம்மாழ்வாருடைய முதல் பிரபந்தம் திருவிருத்தமாகும். இது கட்டளைக் கலித்துறையால் ஆகியது. இதில் ஆழ்வார் பல விதமான அகப்பொருள் துறைகளில் தமக்கு எம்பெருமானிடம் உண்டாகிய ஈடுபாட்டை அழகாக வர்ணித்துள்ளார். அவ்வாறே ஸ்ரீதேசிகனுடைய மும்மணிக்கோவையில் அமைந்துள்ள கட்டளைக்கலித்துறைப் பாசுரங்களும் அகப்பொருள் துறையிலேயே அமைந்திருக்கின்றன.

நம்மாழ்வாருடைய இரண்டாவது பிரபந்தம் திருவாசிரியம். அதில் ஆழ்வார் தமக்கு பகவான் தம்முடைய ஸ்வரூபத்தையும் அப்ராக்ருதமான திருமேனியின் வடிவழகையும், ஒரு புஷ்பக்கடைக்காரன் பலவிதமான வர்ணமும் மண

முங் கொண்ட புஷ்பங்களால் அழகாகத் தொடுக்கப் பட்ட கலம்பகன் மாலையைக் காட்டி நம்மை ஸந்தோஷிக்கச் செய்வதுபோல், காட்டியருள அந்த திவ்ய ஸௌந்தர்யத்தை யனுபவித்து அவ்வனுபவத்தையே வர்ணித்தருளினார். ஸ்ரீ தேசிகனும் இவ்வாறே ஸ்ரீஅடியவர்க்கு மெய்யன் காட்டத் தாம் கண்டு அனுபவித்த பகவத் ஸ்வரூபத்தையும் வடிவழகையும் தம்முடைய ஆசிரியப் பாக்களில் மிகவும் சிறப்பாக வர்ணித்துள்ளார்.

நம்மாழ்வார் வெண்பாவா லாகிய தமது பெரிய திருவந்தாதியில் பகவானிடம் தமக்குள்ள ஈடுபாட்டைப் பல விதமாகப் பேசியும், நினைத்தும் அனுபவித்ததுபோல் ஸ்ரீ தேசிகனும் தமது வெண்பாக்களில் அனுபவிக்கிறார்.

நம்மாழ்வார் பகவானை ஸாக்ஷாத்கரித்து அனுபவித்தமையை விளக்கும் திருவாய்மொழியின் கருத்து மும்மணிக் கோவையின் பத்தாவது பாசுரத்தில் தெளியக் கிடக்கிறது.

ஆக இவ்வாறு நம்மாழ்வாருடைய நான்கு பிரபந்தங்களின் ஸாரமுமாக இந்த மும்மணிக் கோவை விளங்குகிறது.

ஸ்ரீதேவநாதன் ஸ்ரீதேசிகனுக்கு ஸ்வப்னத்தில் தோன்றித் தம்மை விஷயமாக வுடையவையாகவும், வேதங்களின் அர்த்தங்களை விளக்குகிறவையாகவும் நூல்களை இயற்றுமாறு நியமித்தருள, ஸ்ரீதேசிகனும் அந்த நியமனத்தைத் தலையாலேற்று, அவ்வண்ணமே இந்த மும்மணிக் கோவையையும் பிற நூல்களையு மியற்றி 'முந்தை மறைமொய்ய வழிமொழி நீ யென்று முகுந்த னருள்தந்த பயன் பெற்றேன் நானே' என்று மகிழ்ச்சி யடைவதால் இந்த நூல் எல்லா வேதங்களின் கருத்துக்களையும் விளக்குகிறது என்று தேறுகிறது. இது வேதங்களின் கருத்தை விளக்கும் அழகை இந்த வியாக்யானத்தில் நன்றாக அனுபவிக்கலாம்.

இனிக் காவிய மென்பது வியங்கி யார்த்தத்தையே பிரதானமாகக் கொண்டிருக்க வேண்டும். வியங்கியார்த்தமாவது சொல்ல வேண்டும் விஷயத்தை வார்த்தைகளாற் சொல்லாது குறிப்பாகவாவது த்வனியினாலாவது உணர்த்துவது.

இத்தகைய த்வனிப் பொருளை இந்தப் பிரபந்தம் முழுவதும் அங்கங்கே உய்த்துணர வேண்டும்.

உதாரணமாக 'ஆரணங்கள்' என்னும் எட்டாவது பாட்டைக் கவனிப்போம். இதன் பொருள் 'நாராயண சப்தத்துக்குப் பொருளாக இருப்பவரும், உலகத்தை ஸ்ருஷ்டி செய்த ஜகத்காரணவஸ்துவாக இருப்பவரும், கடல்போன்ற கண்ணுக் கினிய நீல வர்ணத்தை யுடையவரும், தம்முடைய கல்யாண குணங்களின் சிறப்பை அளவிடப் புகுந்த வேதங்களுக்கும் எட்டாமல் அப்பா லிருப்பினும் எல்லாரும் கண்டு இன்புறுமாறு ஒரு விலக்ஷணமான ஸூர்யன் உதித்தது போலத் திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளி யிருப்பவருமான எம்பெருமான் முன் த்ரிவிக்ரமனாக ஓங்கி வளர்ந்தபோது, இந்தப் பூமியை யெல்லாம் ஆக்ரமித்துக் கொண்டு மேல் நோக்கி எழுந்த அவருடைய பாதத்தைத் திருமஞ்ஜனம் பண்ணிய தீர்த்தத்தை ஏற்பதற்கு பொன் மலையாகிய மேரு பர்வதமே படிகமாக வமைந்தது. இது பொய்யல்ல. மெய்யே தான்,' என்பது.

இந்தப் பாட்டின் த்வனிப் பொருள் என்ன? பகவானுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை ஏந்தினமையால் அவ்வாறு ஏந்திய படிகமும் பொன் வெற்பாயிற்று. திருவடி தீர்த்தமாவது திருவடியின் தூசியைக் கழுவிய தீர்த்தம். திருவடித் துகள் என்பது பாகவதர்களானமையால் பாகவதர்களுடைய ஸம்பந்தத்தால் எல்லா விதமான பெருமைகளும் உண்டாகும் என்பது த்வனியினால் தேறுகிறது.

இந்தப் பாட்டு பகவானுடைய பரத்துவத்தையும் குறிப்பாக வுணர்த்துகின்றது.

த்ரிமூர்த்திகளும் ஒரு சேர்த்தியில் இருக்கும் பொழுது அவர்களில் ஒருவரான எம்பெருமான் ஆகாசத்தை யளப்பதற்காகத் தமது திருவடியை உயர்த்தியருளினார். அவ்வாறு உயர்த்திய திருப்பாதம் ஸத்ய லோகத்தின் அளவாகச் சென்று அதற்கு மேலும் உயர்ந்தது. பெரியோர்கள் தங்கள் வீடுகளுக்கு வந்தால் அவர்களுடைய பாதங்களைக் கழுவுவது சாஸ்த்திர நியமனமானதால், பிரம தேவன் தமது உல

கத்துக்கு வந்த பகவானுடைய அந்தத் திருவடியைத் தமது குண்டிகையிலிருந்து நீர் சொரிந்து திருமஞ்ஜனம் செய்தார். அந்தத் திருமஞ்ஜன தீர்த்தமே கங்கையாகப் பெருகிற்று. பொன் மலையின் உச்சியாகிய ஸ்வர்க்க லோகம் என்னும் பொன்னுலகமே அதை ஏற்பதற்குத் தகுந்த படிகத்தின் தன்மையை யடைந்தது. பரிசுத்தமான ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்படிகக்திலிருந்து தலைமேல் ப்ரோக்ஷித்துக் கொண்டு பாபம் நீங்கிப் பரிசுத்த மாவதுபோல், அந்தக் கங்கையை பகவானுடைய ஸ்ரீபாத தீர்த்தம் என்னும் பஹுமானத்தினால் சிவ பெருமான் தமது தலைமேல் தாங்கித் தாம் மங்களகரமான தன்மையை யெய்தினார். பகவானுடைய திருவடியைப் பிரமதேவன் கழுவினமையாலும், அந்தத் தீர்த்தத்தை சிவ பெருமான் தமது தலைமேல் தரித்தமையாலும் அவ்விருவரை யுங் காட்டில் பகவானே பரதேவதை என்பது தேறுகிறது.

மேலும், ஆரணங்கள் தேடுவதாலும், ஜகத்காரணமாய் நின்றதாலும், நாராயண சப்தத்துக்குப் பொருளானமை யாலும், திருவடி தீர்த்தத்தை ஏந்துவதற்கு ஏற்றதான படிக மாகப் பொன் வெற்பே யமைந்தமையாலும் த்வனிக்கும் ஸ்ரீதேவநாதனுடைய மஹிமை நம்மைப் பரவச மாக்குகிறது. ஸூரியனைப் போல் தேஜோரூபியாய் அயிந்தையில் பிரகா சிக்கும் எம்பெருமானை வேதங்கள் தேடுவது எவ்வாறு பொருந்தும் என்னும் ஸந்தேஹத்துக்கு நாரணனார் என்பது ஸமாதான மளிக்கிறது. அவருடைய மஹிமைக்கு எல்லையே இல்லாமையால் அவர் பெருமையை முற்றும் அறிய வேதத் தாலுங்கூட முடியாது என்னும் பொருள் த்வனியினால் தேறு கிறது.

காவியத்துக்கு உயிர் நிலையாக இருப்பது ரஸமாகும். இந்த நூல் சாந்தி ரஸத்தைப் பிரதானமாக வுடைய காவியம். இப்பிரபந்தத்தில் 'மொழிவார்', 'ஆர்க்கும் கருணை பொழி வான்,' 'வெற்புட னொன்றி' என்னும் பாசுரங்களில் சிங்கார ரஸம் ததும்புகிறது. 'ஆரணங்கள்' என்னும் பாடலில் அத்புத ரஸம் அனுபவிக்கக் கிடக்கிறது. இவ்வாறே கருணை, வீரம் முதலிய ரஸங்களையும் இப் பிரபந்தத்தில் அனுபவிக்கலாம்.

காவியத்துக்கு சோபையைக் கொடுக்கும் தர்மத்துக்கு அலங்காரம் அல்லது அணி யென்று பெயர். உவமை, உருவகம், விரோதாபாஸம் முதலிய பல அலங்காரங்கள் இந்தச் சிறு பிரபந்தத்திலும் அழகு பெற வமைந்திருக்கின்றன. இவ்வாறே காவியத்துக்குச் சிறப்பைக் கொடுக்கும் செறிவு, தெளிவு முதலிய பத்துக் குணங்களும் இந்நூலில் அமைந்திருக்கின்றன.

ஆக இவ்வாறு சிறப்புடன் விளங்கும் இந்த நூலுக்கு மும்மணிக்கோவை யென்று பெயராகியதும் நமது சிந்தனையைத் தூண்டி விடுகிறது. இது புராண ரத்னம், ஸ்தோத்ர ரத்னம், மந்திர ரத்னம் என்னும் மூன்று ரத்னங்கள் தொடுத்த ஹாரம் என்று இதன் உரையாசிரியர் கூறுகிறார். ஸ்ரீதேசிகன் இந்த நூலின் மூலமாக இந்த மூன்று ரத்னங்களைக் காட்டிக் கொடுத்தது போலும், இவர் தாம் விபவத்தில் நெடுங்காலம் வஸித்தருளிய திருவஹீந்திர புரத்திற்குத் தம்முடைய அர்ச்சாவதாரம், தாம் அமைத்தருளிய திருக்கிணறு, தம்முடைய திருமாளிகை யென்னும் மூன்று ரத்னங்களைக் கொடுத்தருளியது போலும், இந்த நூலின் மூலமாகப் பிரபந்தத்தின் தலைவனாகிய அடியவர்க்கு மெய்யன், பிரபந்தத்தை யமைத்த தாம், அதற்கு அற்புதமாக வியாக்யானங் கண்டருளிய ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமி என்னும் மூன்று ரத்னங்களின் சிறப்பையும் நாம் அனுபவிக்குமாறு நமக்குத் தந்துள்ளார்.

இத்தகைய வியாக்யானத்தைச் செய்தருளிய திருவஹீந்திரபுரம், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ தேசிக தர்சன விஜயத்வஜம், பண்டித பூஷணம், பகவத் விஷயம், வித்வான் சேட்டலூர் ஸ்ரீ நரஸிம்மாசார்யஸ்வாமியைப் பற்றி ஒருவருக்கும் புதிதாக அறிமுகம் செய்து வைக்க வேண்டியதில்லை. இந்த ஸ்வாமி சென்னையில் ஸுமார் முப்பது வருஷங்களுக்கு மேல் இருந்து ஸ்ரீதேசிகன் அருளிய நூல்களைக் காலக்ஷேபம் செய்து வைத்து ஸம்பிரதாயத்தில் அனேகருக்கு ருசியை யுண்டாக்கி வைத்ததை ஒருவரும் மறக்க முடியாது. இன்று நம்மிடையே ஸ்ரீதேசிக பக்தர்களாகவும் ரஸிகர்களாகவும்

அனேகர் இருப்பதற்குக் காரணம் இந்த ஸ்வாமி தான் என்ருல் அது மிகையல்ல. இவர் ஸ்ரீதேசிகனுடைய நூல்களுக்கெல்லாம் அழகழகாக வியாக்யானம் செய்து உபகரித்தமை தான் இதற்குக் காரணம்.

இந்த ஸ்வாமியால் இவ்வளவு நூல்களுக்கு எவ்வாறு வியாக்யானங்கள் எழுதி வெளியிட முடிந்தது என்று நினைக்கும்போது எல்லாரும் ஆச்சரியப்படத்தான் செய்வார்கள். உண்மை என்னவென்ருல் இந்த ஸ்வாமி நூல்களை வைத்துக் கொண்டு பூர்வாவலோகனங்கள் செய்து சிந்தித்துச் சிந்தித்து உரை எழுதவில்லை. இவர் அப்போது தாம் வஸித்து வந்த சென்னைப் புரசைவாக்கத்தில் தம்முடைய திருமாளிகையின் திண்ணைமீதோ அல்லது கூடத்திலோ உட்கார்ந்து கொண்டு பகவானுடைய அனுக்ரஹத்தினுல் தம்முடைய உள்ளத்தில் பெருக்கெடுத்து வரும் அர்த்தங்களை யெல்லாம் கடகடவென்று சொல்லிக்கொண்டே வருவார். பக்கத்தில் ஏடும் எழுதுகோலுமாக நிற்கும் ஸ்வாமியின் சிஷ்யர்கள் அந்தந்த விஷயங்களை சுருக்கெழுத்துக்களாகவும் குறிப்புக்களாகவும் எழுதிக்கொண்டே போவார்கள். இவ்வாறு பட்டோலை கொண்ட வியாக்யானத்தை அப்படியப்படியே அச்சிட்டு அப்போதைக்கப்போது வெளியிடுவார்கள். இத்தகைய வேகத்தில் வந்தமையால்தான் நூற்றுக் கணக்கான பெரிய புத்தகங்களைச் சில வருஷங்களில் வெளியிட ஸாத்யமாயிருந்தது. விஷயங்கள் உணர்ச்சியின் வேகத்தோடு வந்தமையை இந்த வுரைநூல்களின் வாக்ய சைலியிலிருந்து நன்கு அனுபவிக்கலாம். இவ்வாறு அந்த ஸ்வாமி நூற்றுக் கணக்கான புஸ்தகங்களை வெளியிட்டிருந்தும் அந்தப் புஸ்தகங்களெல்லாம் அப்பொழுதைக் கப்பொழுதே செலவாகி விட்டன. அந்த ஸ்வாமியின் காலத்துக்குப் பிறகு அவருடைய உரை நூல்களைவிரும்புகிறவர்களுக்குக் கொடுக்கப் புஸ்தகங்களே இல்லை யென்னும் நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்த வியாக்யானங்களின் சிறப்பையும், இவற்றைப் பல ரஸிகர்கள் மிகவும் ஆவலுடன் விரும்பி நிற்கும் நிலைமை

யையுங் கண்டு, ஸ்வாமியின் நூல்களை மறுபதிப்பாக அச்சிட்டு உதவிபுரிய சில ஆஸ்திகர்களான பிரபுக்கள் முன்வந்தார்கள். ஒவ்வொரு நூலை வெளியிடவும் ஒவ்வொரு ஆஸ்திகர் உதவி வருகிறார். சிறிது காலத்துக்கு முன்பு ஒரு பிரபுவின் உதவியினால் 'பரமபத ஸோபானம்' என்னும் ரஹஸ்ய க்ரந்தம் மூன்றாவது பதிப்பாக வெளியிடப்பட்டது. இப்போது இந்த மும்மணிக் கோவை யச்சாகி வெளிவருகிறது.

இந்தப் புத்தகம் ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமியின் திருவடியான அரும்புலியூர் கொமாண்டூர் ஸ்ரீ. உ.ப. கோபாலஸ்வாமி ஐயங்காரின் த்ரவ்ய ஸஹாயத்தால் வெளிவந்துள்ளது. இந்த ஸ்வாமி மிகவும் வைதிக சிரத்தையுடைய ஆஸ்திகர். இவர் தமது ஆசார்ய பக்தியின் மிகுதியினால் இந்த நூலை வெளியிடுமாறு அடியேனை நிர்ப்பந்தித்து, அதன் பயனாக இந்த நூல் வெளிவந்தது. இவர் இவ்வாறே இன்னும் வேறு சில நூல்களையும் வெளியிட விருப்பமுள்ளவராக இருக்கிறார். ஆசார்யோத்தமனுடைய அனுக்ரஹத்தினால் இந்த ஆசை நிறைவேற வேண்டும். இத்தகைய ஆசார்ய பக்தராகிய இவரையும், இவருடைய குடும்பத்தாரையும் இந்தப் பிரபந்தத்தின் தலைவரும் கருணாநிதியுமான ஸ்ரீ ஹேமாப்ஜ நாயகியின் வல்லபனாகிய ஸ்ரீ அடியவர்க்கு மெய்யன் பூர்ணமாக அனுக்ரஹம் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறே ஸ்ரீதேசிகனுடைய கிரந்தங்களுக்கு ஸ்ரீசேட்டலூர் ஸ்வாமி செய்தருளிய மற்ற வியாக்யானங்களையும் அச்சிட தனிகர்களான ஆஸ்திகர்கள் முன்வந்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

இந்த வியாக்யான கர்த்தாவின் அனுக்ரஹத்தினால் அவருடைய உரை நூல்களை இவ்வாறு ஒவ்வொன்றாக வெளியிடுவதற்கு வியாஜமாக அடியேனை வைத்து, அடியேன் மூலமாகத் தன்னுடைய ஸங்கல்பத்தைத் தானே நிறைவேற்றிக் கொள்ளும் ஸ்ரீ அடியவர்க்கு மெய்யனுடைய மலர்ப்பதங்களை வணங்குகிறேன்.

மாம்பலம்,
விக்ருதிஞ ஸ்ரீ பங்குனி
உத்திரம்.

இங்ஙனம் தாஸன்,
சேட்டலூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி.

श्रीः

॥ श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே
சரணம்

ஸ்ரீமந்நிகமாந்த மகாதேசிகன் அருளிச்செய்த

# மும்மணிக்கோவை

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणं ।
श्रीमद्वेंकटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ||

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

---

அருடரு மடியவர்பால் மெய்யை வைத்துத்
தெருள் தர நின்ற தெய்வநாயக! நின்
அருளெனும் சீரோ ரரிவை யானதென,
இருள் செக வெமக்கோர் இன்னொளி விளக்காய்,
மணிவரை யன்ன நின் திருவுருவில்
அணியமராக அலங்கலா யிலங்கி,
நின்படிக் கெல்லாம் தன்படி யேற்க
அன்புடன் உன்னோ டவதரித் தருளி,
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்கு நின் திருவே. (1)

श्रीः

॥ तरङ्गमुखनन्दिनी हेमाब्ज नायिका समेत
श्रीदेवनाथ परब्रह्मणे नमः ॥

தரங்கமுகநந்திநீ ஹேமாப்ஜ நாயிகா ஸமேத
ஸ்ரீதேவநாத பரப்ரம்மணே நம:

॥ श्रीमते वकुळभूषण महागुरवे नमः ॥

ஸ்ரீமதே வகுளபூஷண மஹாகுரவே நம:

॥ श्रीमते भाष्यकाराय नमः ॥

ஸ்ரீமதே பாஷ்யகாராய நம:

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

श्रीमते श्रीनिवासरामानुज महादेशिकाय नमः ॥

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம:

एकीभूय पुरातनैः परिणतं यस्यात्मना देशिकैः
प्राप्यं प्रापकमप्यनन्य मनसोयत्पादपद्मं मम ।
मग्नानां भवसागरे समुदितं त्राणाय नारायणं
श्रीमच्छ्रीनिधिलक्ष्मणाभिधगुरुं तं सन्ततं चिन्तये ॥ १ ॥

ஏகீபூய புராதனை: பரிணதம் யஸ்யாத்மநா தேசிகை:
ப்ராப்யம் ப்ராபகமப்யநந்ய மநஸோ யத்பாதபத்மம் மம |
மக்நாநாம் பவஸாகரே ஸமுதிதம் த்ராணாய நாராயணம்
ஸ்ரீமத் ஸ்ரீநிதிலக்ஷ்மணாபிதகுரும் தம் ஸந்ததம் சிந்தயே ||(1)

वेलातीतयदाभिरूप्यविवशो वेदान्तविद्यागुरुः
श्रीमाननन्यपराङ्मुखः प्रणयिनीभावं प्रपेदेस्वयम् ।
देवेशोनिरवद्य सद्गुणनिधिः हेयप्रसङ्गोज्झितः
महांस प्रकटीकरोतु सुषुमां सीमातिगामात्मनः ॥ २ ॥

வேலாதீத யதாபிரூப்ய விவசோ வேதாந்த வித்யா குரு: ஸ்ரீமாநந்யபராங்முக: ப்ரணயிநீபாவம் ப்ரபேதே ஸ்வயம்| தேவேசோநிரவத்ய ஸத்குணநிதி: ஹேய ப்ர ஸங்கோஜ்ஜித: மஹ்யம் ஸ ப்ரகடீகரோது ஸூக்ஷ்மாம் ஸீமாதிகாம் ஆத்மந:|| (2)

**यत्सूक्त्यास्वादलुब्धः सखलु सुमनसां अग्रिमोदाससत्यः**
**मन्दोत्कण्ठः प्रियाणामपि कलभणितौ यं किलाऽ-**
**कर्षतिस्म ।**
**खेदं वेदस्य मन्दैः जनितमपनयन् सर्वतन्त्रस्वतन्त्रः**
**भावान् सर्वान् गभीरान् दिशतु मम कृपा यन्त्रितः**
**स स्वसूक्तेः ॥ ३ ॥**

யத்ஸூக்த்யாஸ்வாதலுப்த: ஸகலு ஸுமநஸாம் அக்ரி மோதாஸஸத்ய: மந்தோத்கண்ட: ப்ரியாணாமபி கலபணி தௌ யம்கிலாகர்ஷதிஸ்ம| கேதம்வேதஸ்ய மந்தை: ஜநித மபநயந் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர: பாவாந் ஸர்வாந் கபீராந் திசது மம க்ருபா யந்த்ரித: ஸ்வஸூக்தே:|| (3)

**गुह्यानर्थान्निगमशिरसां व्यञ्जयन्ती समस्तान्**
**क्वासौ काष्ठा कवनसरणेः देशिकेन्द्रस्य सूक्तिः ।**
**क्वाहं मन्दः तदपिकृपया प्रेरितः सद्गुरूणां**
**उद्युक्तोस्मिन् विवरणविधौ भावुकाः तत् क्षमन्तां ॥ ४ ।**

குஹ்யாநர்த்தாந் நிகமசிரஸாம் வ்யஞ்ஜயந்தீ ஸமஸ் தாந் க்வாஸௌ காஷ்டா கவநஸரணே: தேசிகேந்த்ரஸ்ய ஸூக்தி:| க்வாஹம் மந்த: ததபிக்ருபயா ப்ரேரித: ஸத் குரூணாம் உத்யுக்தோஸ்மிந் விவரணவிதௌ பாவுகா: தத்க்ஷமந்தாம்|| (4)

# ஸ்ரீ அவதாரிகை.

இம் மும்மணிக் கோவை என்னும் ப்ரபந்தத்தை யரு ளிச்செய்த இவ்வாசார்யனுகிறார் :—கலியுகத்தின் ஸ்வபா வத்தினால் '**कलौ जगत्पतिं विष्णुं सर्वस्रष्टारमीश्वरं। नार्चयिष्यन्ति मैत्रेय पाषण्डोपहता जनाः**'॥ (கலௌஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீச்வரம்| நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா:||) என்றிவை முதலியவைகளின் படியே இலிங்கத்திட்ட புராணத்தரும் சமணரும் சாக் கியருமாகிய வேதபாஹ்ய குத்ருஷ்டிமதங்களால் மறை குலைந்து, சாதுசனங்கள் அடங்க நடுங்கி, பகவத் ஸ்வரூப குணவிபூதிகளை உள்ளபடி யறியாமல் விபூதி யையும் விபூதிமானையும் அபஹரித்து, நாநா வித நரகம் புகும் பாவஞ் செய்து திரிகிற சேதனர்களை யுஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம் பற்றி, ஸ்ரீய: பதியும் கண் ணவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்குத் தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனுமாகிய ஸ்ரீநிவாஸன் 'அன்றிவ்வுலகினை யாக்கியரும்பொருள் நூல் விரித்து, நின்று தண் நீள் புகழ் வேங்கடமாமலை மேவி, பின்னும் வென்றி புகழ் திருவேங்கட நாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த் தனனே' என்கிறபடியே தான் முன்பு செய்த பொரு ளென்றிவ்வுலகம் படைத்ததுவும், 'வேதமுன் விரித்தான்' என்றும், 'அறிவினால் குறைவில்லா வகல் ஞாலத் தவரறிய நெறியெல்லாமெடுத்துரைத்த' என்றும் சொல்லு கிறபடியே ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நர நாராயண கீதா சார்யாதி ரூபங்களாகத்தானே வெளி நின்று தத்வஹித

புருஷார்த்த ப்ரகாசகங்களான சாஸ்த்ரங்களைப் ப்ரவர்த்திப்பித்ததுவும் சேதனர்களுடைய அந்யதாஜ்ஞாநாதிகளாலே கார்யகரமாகாமல் போனதைக் கடாக்ஷித்தருளி, தன்னுடைய 'सर्वातिशायिषाड्गुण्यं' (ஸர்வாதிசாயிஷாட்குண்யம்) 'पूर्णषाड्गुण्यविग्रहः' (பூர்ணஷாட்குண்யவிக்ரஹ:) 'येयथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहं' (யேயதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்) 'தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம்தானே' இத்யாதிகளில் சொல்லுகிறபடியே ஸர்வ ஸஹிஷ்ணுவாய், வாங்மநஸாபரிச்சேத்யமான ஸௌலப்ய ப்ரகாசகமாய், பூர்ணஷாட்குண்ய ப்ரகாசகமாய், பாவநத்வ போக்யத்வ மோக்ஷப்ரதத்வாதிகளிலும் ஸர்வோத் க்ருஷ்டமான அர்ச்சாவதாரங்களை அங்கீகரித்துத் திருமலை முதலிய திவ்ய தேசங்களில் ஸ்திரப்ரதிஷ்டிதனாய், 'शेष्ये पुरस्तात् शालायाः यावन्मे न प्रसीदति' (சேஷ்யே புரஸ்தாத் சாலாயா: யாவந்மே நப்ரஸீததி) என்று ஸ்ரீபரதாழ்வான் வளைப்புக்கிடந்தாப்போலே ஸம்ஸாரி சேதனர்களை உஜ்ஜீவிப்பித்தாலல்லது பேரேன் என்றிருந்து அதுவும் இவர்களுடைய நாஸ்திக்யம், ஸஹவாஸ தோஷம், ஆஸுரஸ்வபாவம் முதலியவைகளினால் நிஷ்ப்ரயோஜநமானதைத் திருவுள்ளம்பற்றிப் பார்வை வைத்து ம்ருகம் பிடிப்பாரைப்போலே ஸஜாதீயர்களைக் கொண்டே இவர்களைத் திருத்த வேண்டுமென்று பார்த்தருளி, நித்ய ஸூரிகளின் தலைவர்களைப் பராங்குச பர காலாதி ரூபேண அவதரிப்பித்து 'पूर्वोत्पन्नेषु भूतेषु तेषु तेषु कलौ प्रभुः। अनुप्रविश्य कुरुते यत्समीहितमच्युतः॥' (பூர்வோத் பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு:| அநுப்ரவிச்ய குருதே யத்ஸமீஹித மச்யுத: ||)

என்கிறபடியே அவர்களுக்குள் அநுப்ரவேசித்து நின்று அபிநவ தசாவதாரங்களைப்பண்ணி ஸத்ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பிக்க, அதுவும் ப்ரச்சன்ன பௌத்தாதிகளாலே கலக்கப்பட்ட புத்தியையுடைய இச்சேதனர்கள் விஷயத்தில் பலபர்யந்தமாகாததைத் திருவுள்ளம் பற்றி இந்த அத்யாத்ம சாஸ்த்ர ஸம்ப்ரதாயத்தைப் பரவாதிகள் கலக்கமுடியாமல் ஸ்தாபிப்பதற்கு ஸ்ரீமந் நாத யாமுந யதி வராதி பூர்வாசார்ய ரூபேண அவதரித்தும் ஆந்தர பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய உபரோதங்கள் நிஸ்ஸேஷங்களாக சாந்தமாகாமல் வ்ருத்தியடைவதைக்கண்டு தன்னுடைய திருமணி யாழ்வார் என்கிற அபதேசத்தினால் தானே ஸ்வயமாகவே அவதரித்தவராகிறார்.

இவர் படிகளை ஆராய்ந்தால், 'बृन्दावनं भगवता कृष्णेनाक्लिष्टकर्मणा। शुभेन मनसाध्यातं गवां वृद्धिमभीप्सता॥' (ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணா | சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திம் அபீப்ஸதா ||) என்று ப்ருந்தாவனத்தைக் கண்ணன் கடாக்ஷித்தாற்போலே ஸத்ஸம்ப்ரதாய வ்ருத்தியை யபேக்ஷித்த ஸ்ரிய: பதியாலே ஸம்யக் கடாக்ஷித ராயிருப்பர். இது 'அன்றே அடைக்கலங்கொண்ட நம்மத்திகிரித் திருமால்' என்றும், 'தெருள்தர நின்ற தெய்வநாயக' என்றும் சொல்லுகிற ஸ்வ வாக்யத்தாலும் ஸித்தம். மேலும் புலஸ்த்ய வஸிஷ்ட வரப்ரதாந லப்த பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞாநவானாகிய ஸ்ரீ பராசர ப்ரம்மர்ஷியைப் போலே ஸ்ரீ நடாதூர் அம்மாள், கிடாம்பி அப்புள்ளார் இவர்களுடைய விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்ரராயிருப்பார். இத்தை 'श्रीमद्भ्यां स्यादसावित्यनुपथिवरदाचार्य रामानुजाभ्यां

**सम्यक्दृष्टेन**' (ஸ்ரீமத்ப்யாம் ஸ்யாதஸா வித்யநுபதி வரதா சார்ய ராமாநுஜாப்யாம் ஸம்யக் த்ருஷ்டேந) என்றிவர் தாமே அருளிச்செய்தார்.

அத்திக்காயில் அறுமான்போலே இருக்கிற சதுர்முக வரப்ரஸாதத்தாலே அடையப்பட்ட திவ்ய ஜ்ஞாநத்தை யுடைய வால்மீகி மகர்ஷியைப் போலல்லாமல் 'வசையில் நான் மறைகெடுத்த வம்மலரயற்கருளி முன் பரிமுகமா யிசைகொள் வேதநூலென்றிவை பயந்தவன்' என்கிற படியே அந்த ப்ரம்மாவுக்கும் வேதம் முதலியவற்றை உபதேசித்த ஸ்ரீஹயக்ரீவனுடைய விசேஷ கடாக்ஷத்தினுல் அடையப்பட்ட ஸர்வஜ்ஞத்வத்தை யுடையவராயிருப்பார். சுகமகர்ஷியைப் போலே ஜன்மம் தொடங்கி பரமவிரக்தராய், '**निर्विष्टयतिसार्वभौम वचसामावृत्तिभिर्यौवनं**' (நிர்விஷ்டம் யதிஸார்வ பௌம வசஸாம் ஆவ்ருத்திபிர் யௌவநம்) என்கிறபடியே விஷய ஸங்காதிகள் அற்றவராய், பரீக்ஷித்து மகாராஜாவின் ஸபைக்குச் சென்ற அந்தருஷியைப் போலல்லாமல் '**दुरीश्वरद्वारबहिर्वितर्दिकादुरासिकायै रचितोयमञ्जलिः**' (துரீச்வரத்வார பஹிர்விதர்திகாதுராஸிகாயை ரசிதோயமஞ்ஜலிஃ ||) '**भजन्ति विबुधा मुधाह्यहहकुक्षितः कुक्षितः**' (பஜந்தி விபுதா முதாஹ்யஹஹகுக்ஷிதஃ குக்ஷிதஃ) என்கிறபடியே ராஜ ஸபாப்ரவேச மில்லாதவராய் இருப்பார்.

ஸ்ரீவேதவ்யாஸ பகவானைப்போல சாரீரக சாஸ்த்ரத்துக்கு உபயுக்தமான 'ந்யாய விஸ்தரம்' என்கிற வித்யா ஸ்தானத்தில் வேதபாஹ்யமான ஸூத்ரங்களைத் தள்ளி வேதத்திற்கநுகுணமாக ஸூத்ரங்களை ப்ரணயநம் பண்ணவல்லா ரொருவராயிருப்பார். இது 'யாது

மிகழ்ந்து ஒரு நீதியை யாமே வகுக்கவுமாம்' என்கிற ஸ்வஸூக்தியினாலும், ஸ்ரீமந் ந்யாய பரிசுத்தியில் அப்படியே ஸூத்ரங்களை யருளிச் செய்திருப்பதனாலும் ஏற்படும். திருமாலால் அருளப்பட்ட சடகோபனைப் போல 'தெருள் தர நின்ற தெய்வநாயக' என்று இவர் தாமே பேசும்படி அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வ நாயகனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவராய் இருப்பார்.

'ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே' என்கிறபடியே அர்ச்சாவதாரத்தில் போர மண்டின திருமங்கையாழ்வாரைப் போல இவரும் '**वैकुण्ठ वासेऽपि नमेभिलाषः**' (வைகுண்ட வாஸேபி நமேபிலாஷ:) என்று இருப்பாராவர்.

பிராட்டிமார் தசையை யடைந்து அநுபவிக்கும் விஷயத்தில் 'எம்மை யொன்றும் நினைக்கிலளே' என்றும், 'பெற்றதாயரை விட்டகன்று' என்றும் சொல்லுகிறவளவன்றிக்கே 'பற்பில் மறந்த செய்யாள் படிகாட்டிய பண்புடை' என்று தம்முடைய ஜன்மபூமியிலுள்ள க்ருஹம் முதலிய ஸர்வத்தையும் மறந்திருப்பார் ஒருவராய் நிற்பர்.

ஸ்ரீய:பதி 'இன் கவி பாடும் பரமகவிகளால் தன் கவி தன்னைத்தான் பாடுவியாது' என்று ஆழ்வாரைக் கொண்டு தன் கவி பாடுவித்துக் கொண்டாப்போலே இவரைக்கொண்டும் தன் கவி பாடும்படி நியமித்துப் பாடுவித்துக் கொண்டான் என்பது 'முந்தை மறை மொய்ய வழி மொழி நீ என்று முகுந்தனருள் தந்தபயன் பெற்றேனே' என்றருளிச் செய்திருப்பதனால் ஏற்படும்.

'சொல்மாலைகள் நன்று சூட்டும் விதி எய்தினன் என்ன குறை நமக்கே' என்று தாமே யருளிச் செய்யும் படி ஆழ்வார் ப்ரபந்தத்தை ஸ்ரீய: பதி தனக்கு அலப்ய லாபமாக அங்கீகரித்துக் கொண்டாப் போலே, அடிய வர்க்கு மெய்யன் 'இம்மணிக்கோவையுடன் ஏற்கின்றார் எந்தன் இம்மும்மணிக் கோவை மொழி' என்று இவரே ஹ்ருஷ்டராம்படி இவர் ஸ்ரீஸூக்தியை அங்கீகரித் தருளினான்.

'தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்று பாகவதப்ரீத்யர்த்தமாகக் க்ரந்தங்களை யருளிச் செய்த ஆழ்வாரைப் போல இவரும் '**अङ्गीकृत्य सतां प्रसक्तिं**' (அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸக்திம்) '**शिष्या-शिक्षितबुद्धयश्श्रुतिपथे येषां वयं येच नः तत्सन्तोष समर्पणक्षममिदं साडम्बरैः किंपरैः**' (ஶிஷ்யாஶ்ஶிக்ஷிதபுத்தய: ஶ்ருதிபதே யேஷாம் வயம்யேச ந: தத்ஸந்தோஷ ஸமர்ப்பண க்ஷம மிதம் ஸாடம்பரை: கிம்பரை: ||) '**श्रीमद्वेङ्कटनायकेन वहता शेषामिवाज्ञां सतां**' (ஸ்ரீமத்வேங்கட நாயகேந வஹதா சேஷாமிவாஜ்ஞாம் ஸதாம்) என்றிவை முதலியவைகளிற் படியே இவரும் பாகவத ப்ரீத்யர்த்த மாகவே க்ரந்தங்களை யருளிச் செய்தார்.

ஸ்ரீபரதாழ்வானைப்போல ஸ்ரீய: பதியின் பாதுகை யையே தமக்கு ஆராத்ய தேவதையாகப் பரிக்ரஹித்து '**त्वामेव साक्षात् भरताधिदेवतां**' (த்வாமேவ ஸாக்ஷாத் பரதாதி தேவதாம்) என்றத்தையே அங்கீகரித்தருளினார்.

'**अहं सर्वं करिष्यामि**' (அஹம்ஸர்வம் கரிஷ்யாமி) என்று ஸர்வவித கைங்கர்யத்தையும் ஆசைப்பட்ட இளைய பெருமாளைப்போலே, '**अविश्रान्तश्रद्धाशतकलहकल्लोल कलुषाः**

**ममाविर्भूयासुः मनसि मुनिसिद्धादि सुलभाः। मधुक्षीरन्यया स्वगुणविभवा संजनकनन्महानन्द ब्रह्मानुभवपरीवाहाबहुविधाः॥** (‘அவிச்ராந்த ச்ரத்தா சதகலஹ கல்லோல கலுஷா மமாவிர்ப்பூயாஸுः மநஸி முநிஸித்தாதி ஸுலபாः| மது க்ஷீரந்யாய ஸ்வகுணவிபவா ஸஞ்ஜநகநந் மஹாநந்தப்ரம் மாநுபவபரீவாஹா பஹுவிதாः॥’) என்றும் ‘ஆமறிவால் ஆர்ந்தடிமை யாகின்றோம்’ என்றும் ப்ரார்த்தித்துத் தாம் குணோர்தாஸ்ய முபாகதரான படியையும் அருளிச் செய்தார்.

ஓரவஸரத்திலே தான் பிரிந்து எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் பிரிவை ப்ரஸங்கித்து அதற்குப் பரிஹாரம் பண்ணுகையன்றிக்கே ஸர்வாவஸ்தையிலும் பிரிவில்லா மையை ஸ்தாபித்தருளினார்.

பகவத் விஷயத்தில் மண்டாமல் பாகவத விஷயத் திலேயே ஊன்றி நின்ற சத்ருக்நாழ்வானைப்போல் இவரும் பாகவத விஷயத்தில் போரமண்டியிருப்பார். இது ‘துன் பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல் வழிகள் துணிவார்கட்கே’ என்றும் ‘**नाथेनस्तृणमन्यदन्य दपिवा तन्नाभिनालीकिनी नालीकस्पृहणीयसौरभमुचा वाचा नयाचामहे। शुद्धानां तु लभेमहिस्थिरधियां शुद्धान्तसिद्धान्तिनां मुक्तैश्वर्यदिनप्रभातसमयासत्ति प्रसत्तिमुहुः**’॥ (நாதேநஸ்த்ருண மந்ய தந்ய தபிவா தந்நாபிநாளீகிநீ நாளீகஸ்ப்ருஹணீய ஸௌரபமுசா வாசா நயாசாமஹே| சுத்தாநாந்து லபே மஹி ஸ்திரதியாம் சுத்தாந்த ஸித்தாந்திநாம் முக்தைச் வர்யதிநப்ரபாத ஸமயா ஸத்திம் ப்ரஸத்திம் முஹுः॥) இத்யாதிகளில் ப்ரஸித்தம். ‘**मां नयेद्यदि काकुत्स्थः तत्तस्य सदृशं भवेत्**’ (மாம்நயேத்யதி காகுத்ஸ்தः தத்தஸ்ய

ஸத்ருசம் பவேத்) என்றிருந்த பிராட்டியைப் போலே **'शेषिदंपतिदया दीक्षामुदीक्षामहे'** (சேஷிதம்பதிதயா தீக்ஷா முதீக்ஷாமஹே) என்று இவரும் பகவத்ஸங்கல்பத்தையே எதிர் பார்த்திருந்தார். 'பொன்னுலகாளீரோ புவனி முழு தாளீரோ' என்று உபய விபூதியையும் கடகருக்குப் ப்ரத்யுபகாரமாக நினைத்திருந்த ஆழ்வாரைப் போலன்றிக்கே, **'अपश्यन्ती ब्राह्मणस्य प्रियमन्यत् ननाम सा'** (அபஶ்யந்தீ ப்ராம்மணஸ்ய ப்ரியமந்யத் நநாமஸா) என்றிருந்த ருக்மணிப் பிராட்டியைப் போலே இவரும் 'ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை இருளனைத்தும் மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான்' என்று கடகர் விஷயத்தில் ப்ரத்யுபகாரமே இல்லை என்று அநுஸந்தித்திருப்பார்.

பள்ளியிலோதிய சிறுவனாகிய ப்ரஹ்லாதாழ்வான் தம்மோடு ஓதிவந்த அஸுரப்பிள்ளைகளைத் தம்முடைய உபதேசத்தினாலே நாராயண நாமம் சொல்லும்படி திருத்தினதைப்போல இவரும் ஆஸுரஸ்வபாவத்தாலே பகவத்த்வேஷிகளாய் **'ममेदं' 'अहं मम'** (மமேதம், அஹம் மம) என்றிருக்கும் லோகத்தாரை பகவத்தாஸ்ய பாரதந்த்ர்யாதிகளை உணரும்படி திருத்தி அருளினர். ஆகையினாலேயிறே இவரை 'வென்றிபுகழ் திருவேங்கட நாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே' என்று தூப்புல் நயினர் அருளிச் செய்தது. இங்கு நோய்கள் என்றது அஹங்காரமமகாரங்களை. ஆகவிப்படி **'उपमानमशेषाणां साधूनां यः सदाभवत्'** (உபமாநமசேஷாணும் ஸாதூநாம்ய: ஸதாபவத்) என்கிறபடியே இவர் தம்முடைய படிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு

வரையே கதிர் பொறுக்கிச் சொல்லும்படி ஸர்வகுணநிதி யாக வீறு பெற்றிருந்தவர் ஒருவராகிறார். இத்தைத் திரு வுள்ளம் பற்றியே '**भगवन्तमिवानन्तकल्याण गुणवारिधिं। वेङ्कटेशं गुरुं नौमि**' (பகவந்தமிவாநந்த கல்யாண குணவாரி திம் வேங்கடேசம் குரும் நௌமி) என்று பூர்வர்கள் அரு ளிச் செய்தார்கள்.

'**इक्ष्वाकु वंशप्रभवो रामो नाम जनैः श्रुतः**' (இக்ஷ்வாகு வம்சப்ரபவோ ராமோநாம ஜநைః ச்ருதః) என்றும், '**पितरं रोचयामास तदा दशरथं नृपं**' (பிதரம்ரோசயாமாஸ ததா தசரதம் ந்ருபம்) என்றும் சொல்லுகிறபடியே பெரு மாள் வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றினதோபாதி இவரும் கோத்ர ப்ரவர்த்தகர் முதல் கொண்டு தன் திருத்தகப்பனார் அளவும் பரமைகாந்தி களாய் இருந்து வந்த தூப்புல் குலத்துக்கு ஓர் விளக்காய் அவதரித்தருளினார்.

இவர் தம்மாதுலரான அப்புள்ளாரிடத்தில் ஸர்வ சாஸ்த்ரார்த்தங்களையும் '**विंशत्यब्दे विश्रुत नानाविध विद्यः**' (விம்சத்யப்தே விச்ருத நாநா வித வித்யః) என்கிறபடியே அப்யஸித்து, அவரால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீவைநதேய மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்வதற்கு உசிதமான ஸ்தல விசேஷத்தை அந்வேஷித்துக் கொண்டிருந்து, பின்பு ஒவ் வொன்றே, ஸித்திஹேதுவாகக் கூடிய மஹாநதி, புண்ய கிரி, திவ்யதேசம் (பகவத் க்ஷேத்ரம்) ஆகிய இவை மூன் றும் ஓரிடத்தில் சேர்ந்ததாகிய திருவஹீந்த்ர புரத்தில் ஔஷதாத்ரியில் ஸோமஸவநத்தைப் போன்ற ஓர் அச் வத்த விருக்ஷத்தின் கீழே கருட மந்த்ரத்தை ஆவ்ருத்தி

செய்ய, பெரிய திருவடிநயினாரும் ஸுப்ரஸந்நராய் எழுந்தருளி ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தைப் ப்ரஸாதித்தருள, இவர் அத்தையும் அங்கேயே ஆவ்ருத்தி செய்யப் பண்ணுகலே நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய பரமனும் ப்ரஸந்நனாய், தம்முடைய லாலாம்ருதத்தைப் பாநம் பண்ணும்படி நியமிக்க இவரும் அப்படியே செய்து அந்த லக்ஷ்மீஹயக்ரீவனுடைய கடாக்ஷத்தாலே புகரூட்டின மாணிக்கம் போலே தேஜிஷ்டராய் '**तुरगवदन तेजो ब्रह्मिताश्चर्यशक्तिः**' (துரகவதந தேஜோ ப்ரம்மிதாஸ்சர்ய சக்திः) என்று பின்புள்ளார் அநுஸந்திக்கும்படி வசம்வத ஸகலகலா கலாபராய் ஸ்ரீதெய்வநாயகன், செங்கமலத் தாயார் இவர்களைத் திருவடி தொழுது காஞ்சீபுரம் எழுந்தருளுகைக்காகப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கும் மார்க்கத்தில் 'துஞ்சா நீர்வளம் சுரக்கும்' பெண்ணையாற்றங்கரையில் ஓரிரவு தங்கியிருக்கும் ஸமயத்தில் ஸ்ரீதெய்வநாயகனும் 'வைகுந்தனைப் புகழ' என்கிறபடியே இவருடைய மங்களா சாஸனத்தால் தான் விசேஷமான அதிசயத்தைப் பெறவேணுமென்று திருவுள்ளம் பற்றி, இவரை வழிமறித்துத் திரும்ப அழைத்துக் கொண்டுவந்து தம் விஷயமாக வேதாந்த ரஹஸ்யார்த்தங்களைப் ப்ரகாசம் செய்யும் க்ரந்தங்களை யருளிச் செய்யும்படி அருளிப்பாடிட்டருள, அந்நியமனத்தை சிரஸா வஹித்து 'ஸ்ரீதேவநாயக பஞ்சாஶத்' என்கிற ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரத்தையும், 'ஸ்ரீ அச்யுதசதகம்' என்கிற ப்ராக்ருத ஸ்தோத்ரத்தையும், மும்மணிக்கோவை, பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசற்பா, ஏசற்பா, நவரத்னமாலை என்கிற ப்ரபந்தங்களையும் அருளிச் செய்தார்.

இது 'அந்தமில் சீர் ஆயிந்தைநகர் அமர்ந்தநாதன் அடியிணைமேல் அடியுரையால் ஐம்பதேத்தி, சிந்தை கவர் பிராகிருதம் நூறு கூறிச் செந்தமிழ்மும் மணிக் கோவை செறியச் சேர்த்து, பந்துகழல் அம்மானை ஊசலேசல் பரவு நவமணிமாலை இவையும் சொன்னேன், முந்தை மறைமொய்ய வழி மொழி நீ என்று முகுந்தனருள் தந்தபயன் பெற்றேனனே' என்றருளிச் செய்திருப்பதனால் ஸித்தம்.

"அந்தமில் சீர்" இத்யாதியால் இப்படி விஷயீகரித்ததற்குக் காரணமான ஸ்ரீதெய்வ நாயகனுடைய அபரிச்சின்னமான ஸௌசீல்யத்தை விவக்ஷித்தபடி. '**संरक्षणीय ममराधिपते त्वयैवदूरं प्रयातमपि दुस्त्यज गाढबन्धम्। आकृष्टवानिति भवाननुकंपमानः सूत्रानुबद्ध शकुनिक्रमतस्स्वयं मां॥**' (ஸம்ரக்ஷணீய மமராதிபதே த்வயைவ தூரம் ப்ரயாதமபி துஸ்த்யஜ காட பந்தம்| ஆக்ருஷ்டவாநிதி பவாநநுகம்பமாநः ஸூத்ராநுபத்த சகுநிக்ரமதः ஸ்வயம்மாம் ||) என்றும் அருளிச் செய்திருக்கிறார்.

இப்படி ஸ்ரீ தெய்வநாயகன் தம்மை வழிமறித்துத் திருப்பிக் கொண்டுவந்து தம் விஷயமாக ஸ்தோத்ராதிகளை அருளிச்செய்யும்படி நியமித்தருள, அந்த நியமனத்தை ப்ரஸாவஹித்து ஸ்தோத்ரங்களை அருளிச் செய்ய உபக்ரமித்து முற்படத்தானை தன்மையையடைந்து ஸம்ஸ்க்ருதபாஷையில் 'ஸ்ரீதேவநாயக பஞ்சாசத்' என்னும் ஸ்தோத்ரத்தை யருளிச்செய்தார்.

அதில் '**प्रत्यङ्गपूर्णसुषुमासुभगं वपुस्ते**' (ப்ரத்யங்க பூர்ணஸுஷுமா ஸுபகம் வபுஸ்தே) இத்யாதிகளிற்படியே ஸ்ரீதேவநாதனுடைய திவ்ய வடிவழகை ஸமுதாயமாகவும், தனித்தனியாகவும் அநுபவித்து அவ்வநுபவ ஜநிதமான

நிரவதிக ப்ரீதியாலே 'पाञ्चालीगात्रशोभाहृतहृदयवधूवर्ग पुंभावनीत्या' (பாஞ்சாலீ காத்ரசோபாஹ்ருத ஹ்ருதய வதூ வர்க்க பும்பாவநீத்யா) என்று தாமே யருளிச்செய்திருக் கிறபடியே ஸ்த்ரீ பாவத்தை யடைந்தவராய், ப்ராக்ருத பாஷையாலே 'ஸ்ரீஅச்யுத சதகம்' என்னும் ஸ்தோத்ரத்தை யருளிச்செய்தார்.

இப்படி ஸ்த்ரீ பாவத்தை யடைந்தாரேயாகிலும் அது தீவ்ரமான ச்ருங்காரமாகப் பரிணமிக்கும்படியான பக்தி ரஸ பரிபாகம் பெருமையாலே, தன் பர்த்தாவின் வியோ கத்தைக் காரணமாகக் கொண்டு நிந்திக்க வந்த பாவத்தை மறந்து, தாரை முதலியவர்கள் பெருமாளை 'त्वमप्रमेयश्च दुरासदश्च' (த்வமப்ரமேயஶ்ச துராஸதஶ்ச) இத்யாதிகளில் காமுகையான நாயிகாபாவத்தை யடையாமல் கேவலம் பரத்வ ஸௌலப்யாதி குணங்களை ஸ்தோத்ரம் பண்ணினுப் போலே, இவரும் தாமான தன்மையை மறந்து ஸ்த்ரீ பாவத்தை யடைந்தவராய்க் கேவலம் பரத்வ ஸௌலப் யாதிகளைப் பரக்க அநுபவித்துப் போந்தார்.

இப்படி குணநுஸந்தாநத்தினல் உண்டான ப்ரீதி 'भक्तिः शृङ्गारवृत्त्या परिणमति मुनेः भावबन्धप्रथिम्ना' (பக்திஃ ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி முநேஃ பாவபந்த ப்ரதிம்நா) என்று தாம் அருளிச்செய்திருக்கிறபடியே பாவபந்தம் முதிர்ந்து ச்ருங்கார ரூபமாகப் பரிணமித்து, அதற்கநுரூபமாக 'सद्यः परमात्मनि चित्तरञ्जकतमैः' (ஸத்யஃ பரமாத்மநி சித்தரஞ்ஜகதமைஃ) என்கிறபடியே ஸ்வாமி யிடத்தில் அதிகமான சித்த ரஞ்ஜநம் பிறப்பிக்கைக்கு ஹேதுக்களாயும், வேதாந்தார்த்த வைசத்யாதிசயத்துக்

குக் காரணங்களாயும், ஸ்ரீபராங்குச பரகாலாதி திவ்ய ஸூரிகளால் அங்கீகரிக்கப்பட்டதாயும், பூமிகாபேத யோக்யங்களாகையாலே ஸ்ரீமந்நாதமுநி ப்ரப்ருதி பூர்வா சார்யர்களினுல் விசேஷித்து ஆதரிக்கப்பட்டதாயும், 'கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ் சொல்லே' என்கிறபடியே கேட்டவர்களுக்கு **'संश्रवेमधुरं वाक्यं'** (ஸம்ஶ்ரவே மதுரம் வாக்யம்) என்னும்படி ஸுகாதிசயத்தைக் கொடுக்கக் கூடியதாயும் இருக்கிற ஸ்வாதுதமங்களான த்ரமிட ஸ்ரீஸூக்திகளை அருளிச் செய் கிருர். இவர் அருளிச் செய்திருக்கும் த்ரமிட ஸ்ரீஸூக்தி கள் எல்லாவற்றிற்கும் இம் மும்மணிக்கோவையே முற் பட்டதாகையால், இதில் முதலில் தமக்கு இவ்வளவு பக வத்கடாக்ஷ விசேஷம் உண்டானதற்குக் காரணம் ஸதா சார்ய கடாக்ஷமும், அதடியாக உண்டான திருமுகப் பாசுரமுமாகையால் அதை முதலில் நிரூபித்தருளுகிருர். அதிலும் மந்த்ர ரத்னம், புராணரத்னம், ஸ்தோத்ர ரத் னம், இவைகளில் பரதத்வத்தைப் ப்ரதிபாதிக்குமிடத்து லக்ஷ்மீ ஸம்பந்தத்தை முன்னிட்டே உபக்ரமித்திருப்பதை யும், இத்தத்வத்தை **'भिक्षोचितं प्रकटयन् प्रथमाश्रमित्वं कृष्णाजिनं यवनिकां कृतवान् प्रियायाः व्यक्ताकृतेस्तव समीक्ष्य भुजान्तरेतां'** (பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரதமாஶ்ரமித்வம் க்ருஷ்ணாஜிநம் யவநிகாம்க்ருதவாந் ப்ரியாயா: | வ்யக்தாக்ருதேஸ் தவ ஸமீக்ஷ்ய புஜாந்தரே தாம்) என்கிற படியே ப்ரத்யக்ஷத்தில் ஸாக்ஷாத்கரித்த ஸ்ரீபேயாழ்வாரும் 'திருக்கண்டேன்' என்று நிரூபித்திருக்கிற படியையும் அநுஸந்தித்துத் தாமும் முதலில் அந்தப் பிராட்டியை முன்னிட்டு மங்களா சரணம் அருளிச்செய்கிருர் 'அருள்

தரும்' என்றாரம்பித்து. இதுவே இப் ப்ரபந்தங்களுக்கெல்லாம் மங்களா சரணமாகவும் ஆயிற்று.

'विशेषज्ञप्तये भर्तुरभिगम्यत्वसिद्धये। महिष्ठमङ्गलावाप्त्यै प्रथमं श्रीरिहोदिता ॥' (விசேஷ ஜ்ஞப்தயே பர்து ரபிகம்யத்வ ஸித்தயே| மஹிஷ்ட மங்களாவாப்த்யை ப்ரதமம் ஸ்ரீரிஹோதிதா ||) என்று ஸ்ரீமத் தாத்பர்ய சந்த்ரிகையில் அருளிச் செய்திருக்கும் அர்த்த விசேஷங்கள் இங்கும் அநுஸந்தேயங்கள்.

மும்மணிக்கோவை என்பதற்கு 'ஈண்டிய முப்பதா யிரெண் கலிவண்ணம் மூண்டதொலி யந்தாதி முப்ப தாம்—ஆண்டகவல் முன்முறையே வெண்பா கலித்துறை யந்தாதி மும்மணிக் கோவைக்கு முதல்' என்று லக்ஷணம் தமிழர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஆசிரியப்பாவும், வெண்பாவும், கலித்துறையும் ஒன்றன் பின் ஒன்றாய் அந்தாதியாகக் கொண்ட முப்பது பாட்டுக்கள் அடங்கினதாகும். ஆகையால் இப் ப்ரபந்தத்தில் இப்பொழுது பத்துப் பாட்டுக்களே காணப்பட்டாலும் 'அருள் தரும்' என்றாரம்பித்து, 'காரணமே' என்று முடிவதனால் அந்தாதி பூர்த்தி யாகவில்லை யாகையாலும், மேல் நிரூபிக்கப்படுகிறபடி அநுபவ பூர்த்தியும் பூர்ணமாக அருளிச் செய்யப் படாமையாலும், மிகுதியான இருபது பாட்டுக்களும் பந்துப்பா முதலிய ப்ரபந்தங்களைப்போல் லுப்தமாகி விட்டன என்று அறியத்தக்கது.

நிற்க, இப் ப்ரபந்தாரம்பத்தைக் கவனித்தால் இது தமிழர்களால் கொண்டாடப்படும் லக்ஷணங்கள் நிறைந்ததாயிருக்கிறது. எங்ஙனே என்னில், 'எண்ணுங் குறிலாண்' என்கிறபடியே குற்றெழுத் தெல்லாம் ஆண்பா

லாகையினுலும் இங்கு அகாரத்தில் ஆரம்பித்திருக்கிறபடியி ஞுலும் இப் ப்ரபந்தத்துக்கு விஷயம் புருஷோத்தமனுன ஸ்ரீயஃபதி என்பது ஸூசிப்பிக்கப் பட்டதாகிறது. 'உதித் தமைந்த நாற்குற்றுயிரும் துதிக்கமுது' என்கிறபடியே அ, இ, உ, எ என்கிற நாலெழுத்துக்களும் அமுதவெழுத் துக்களாகையினுலும், ப்ரபந்தத்தை அகாரத்தில் உபக்ரமித் திருப்பதனுலும் அம்ருதாக்ஷர ப்ரயோகம் செய்தாராயிற்று. 'தப்பாத மூன்றைந் தேழொன்பான்' என்கிறபடியே மூன்று எழுத்துக்களுடன் கூடிய பதத்தைக் கொண்டு ஆரம்பம் செய்வது ச்லாக்யமானதால் 'அருள்' என்றப் படியே உபக்ரமித்திருக்கிருர். 'ஆதியிடையிறுதி முற்று நேரா நிரை யென்றேதுவர்' என்கிறபடியே முற்றும் நிரையசையா யிருப்பது கணப் பொருத்த மாகையால் 'அருடரு மடியவர்' என்று அந்நிரை யசையில் ஆரம்பித் தார். 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்று கொண்டா டப்பட்ட அகாரத்தினுல் உபக்ரமித்ததும் விசேஷமாகும்.

'अष्टाक्षरशरीराङ्गप्रणवाद्यक्षरेणतु। अकारेणाखिलाधारः परमात्माभिधीयते॥ समस्तशब्दमूलत्वात् अकारस्य स्वभावतः। समस्तवाच्यमूलत्वात् ब्रह्मणोऽपि स्वभावतः॥ वाच्यवाचक संबन्धः तयोरर्थात् प्रतीयते।' (அஷ்டாக்ஷர சரீராங்க ப்ரண வாத்யக்ஷரேணது | அகாரேணுகிலாதாரஃ பரமாத்மாபி தீயதே || ஸமஸ்த சப்த மூலத்வாத் அகாரஸ்ய ஸ்வ பாவதஃ | ஸமஸ்த வாச்ய மூலத்வாத் ப்ரம்மணோபி ஸ்வ பாவதஃ || வாச்ய வாசக ஸம்பந்தஃ தயோ ரர்த்தாத் ப்ர தீயதே |) என்றும், 'अ निषेधे पुमान् विष्णौ' (அ நிஷேதே புமாந் விஷ்ணௌ) என்றும், 'अकारो विष्णुवाचकः' (அகாரோ விஷ்ணு வாசகஃ) என்றும், 'अइति भगवतो नारा-

यणस्य प्रथमाभिधानं अभिदधता किंनाम मङ्गलं न कृतम्' (அஇதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாநம் அபித ததா கிம்நாம மங்களம் ந க்ருதம்) என்றும் சொல்லுகிற படியே பகவந் நாமமென்று ப்ரஸித்தி பெற்ற அகாரத்தி ஞல் உபக்ரமித் திருப்பதனுல் ஸர்வ வித மங்களமும் செய் யப்பட்டதாகிறது.

பதவுரை.

'அருள் தரும்' என்பது க்ரியாபதம். அடியவர் பால் - தாஸர்கள் விஷயத்தில், மெய்யை - ஸத்யமாயிருக் கையை, அன்றிக்கே தாஸர்களிடத்தில் ஸத்ய வசனத்தை, வைத்து, தெருள் - ஜ்ஞாநத்தை, தர - தருவதற்காக, நின்ற - நிற்கின்ற, தெய்வ நாயக!, நின் - உன்னுடைய, அருள் எனும் - க்ருபை என்று சொல்லப்படுகிற, சீர் - கல்யாண குணமே, ஓர் - ஒரு, அரிவை யானதென - பெண்ணாக வடிவு கொண்டது என்று சொல்லும்படியும், இது மேலே 'நிற்கும்' என்பதோடந்வயிக்கிறது; எமக்கு - அஜ்ஞர்களான எங்களுக்கு, இருள் அஜ்ஞாநமாகிற அந்த காரம், செக - நசிக்கும்படி, ஓர் - ஒப்பற்ற, இன் - போக்யமான, ஒளி - ப்ரகாசத்தை யுடைய, விளக்காய் - தீபமாகியும், இதுவும் மேல் 'நிற்கும்' என்பதோடந்வயிக் கிறது; மணிவரை - நீல ரத்னமயமான பர்வதத்துக்கு, அன்ன - ஸத்ருசமான, நின் - உன்னுடைய, திருவுருவில் - திவ்ய ரூபத்திலே, திவ்ய விக்ரஹத்திலே யென்றபடி; அணி - கௌஸ்துபம் முதலிய அலங்காரங்கள், அமர் - அமர்ந்திருக்கிற, எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருக்கிற என்றபடி; ஆகம் - திருமார்புக்கு, அலங்கலாய் - புஷ்ப மாலையாக, அதைப்போல் சோபையைக் கொடுக்கக் கூடி

யவளாய் என்றபடி ; இலங்கி - ப்ரகாசித்துக்கொண்டும், இதுவும் மேல் நிற்கும் என்பதோடந்வயிக்கிறது ; நின் - உன்னுடைய, படிக்கெல்லாம் - ப்ரகாரங்க ளெல்லாவற்றிற்கும், ஸ்வரூப குணாதிகள் எல்லாவற்றிற்கும் என்றபடி ; தன் - தன்னுடைய, படி - ப்ரகாரங்கள், ஏற்க - அநுரூபமாக, இதுவும் மேல் ' நிற்கும் ' என்பதோடந்வயிக்கிறது; அன்புடன் - ப்ரீதியுடன், உன்னோடு - (இராம க்ருஷ்ணாத்யவதாரங்களைச் செய்த) உன்னுடன், அவதரித்து - தானும் அவதாரங்களைச் செய்து, அருளி - சேதனர்களிடத்தில் க்ருபையைச் செய்து, வேண்டுரை - சேதனர்கள் வேண்டுகிற உரையை, அதாவது ப்ரார்த்திக்கிற வார்த்தையை, கேட்டு - தான் கேட்டு, மீண்டு - திரும்பவும், அவை - அந்த வார்த்தைகளை, கேட்பித்து - உன்னைக் கேட்கும்படி செய்து, ஈண்டிய - திரளாகச் சேர்ந்த, வினைகள் - பாபங்கள், மாண்டிட - நசிக்கும்படி, முயன்று - தான் ப்ரயத்நம் செய்து, தன்னடி சேர்ந்த - தன் திருவடிகளை ஆச்ரயித்தவர்களான, தமர் - தாஸர்கள், உனை யணுக - உன்னைக் கிட்டும்படி, 'உன்னை' என்பது நடுக்குறுகி 'உனை' என்றாகியிருக்கிறது ; நின்னுடன் - உன்னோடு, சேர்ந்து-எப்பொழுதும் பிரிவில்லாமல் சேர்ந்து, நிற்கும் - நிற்கிற, நின் - உன்னுடையவளாகிய, திருவே - பெரிய பிராட்டியாரே, அருள் தரும் - க்ருபையைத் தருவாள்.

## வ்யாக்யாநம்.

அடியவர்பால் மெய்யை வைத்து - ப்ரம்ம ருத்ர ப்ருகு மார்க்கண்டேயாதிகளான தன்னை யாச்ரயித்தவர்கள் விஷயத்தில் தான் தன்னுடைய மெய்யான வார்த்

த்தையை வைத்து, அதாவது தான் ஸத்ய ப்ரதிஜ்ஞன் என்கிற விஷயத்தை ஆச்ரிதர் திறத்தில் ப்ரகாசம் செய்து கொண்டு, எல்லா ப்ராணிகளுக்கும் தன்னுடைய ஸ்வரூப ரூப குணாதிகளின் ப்ரகாசத்தைக் கொடுப்பதற்காக, ஸதா ஸாந்நித்யத்தைப் பண்ணி இருக்கிற என்றபடி. 'मुने ब्रह्मादि देवानां मया दत्तः पुरा वरः। भूतले कृतसान्निध्यः भविष्यामि सदाह्यहम् ॥ त्वयापि प्रार्थितश्चाहं तथा ब्रह्मविदांवर। सत्यव्रतोस्मि दासानां' (முநே ப்ரம்மாதி தேவாநாம் மயா தத்தஃ புரா வரஃ| பூதலே க்ருத ஸாந்நித்யஃ பவிஷ்யாமி ஸதாஹ்யஹம் || த்வயாபி ப்ரார்த்திதஶ்சாஹம் ததா ப்ரஹ்மவிதாம் வர| ஸத்யவ்ரதோஸ்மி தாஸாநாம்) இத்யாதி பகவத் வாக்யம் ஸ்தல புராணத்தி லிருப்பது இங் கநுஸந்தேயம். அன்றிக்கே, 'स्वनिगममपहाय मत्प्रतिज्ञामृतमधिकर्तुं अवप्लुतो रथस्थः। धृतरथचरणोभ्ययाच्चलद्गुः हरिरिव हन्तुमिभं गतोत्तरीयः॥' (ஸ்வநிகம மபஹாய மத்ப்ரதிஜ்ஞாம் ருத மதிகர்த்தும் அவப்லுதோ ரதஸ்தஃ| த்ருத ரத சரணோப்யயாத் சலத்குஃ ஹரி ரிவ ஹந்து மிபம் கதோத்தரீயஃ||) என்றும், 'नत-प्रतिज्ञानुपरोधहेतोः आत्मप्रतिज्ञामजहत्स्वतन्त्रः' (நதப் ப்ரதிஜ்ஞாநுபரோத ஹேதோஃ ஆத்ம ப்ரதிஜ்ஞா மஜஹத்ஸ்வதந்த்ரஃ) என்றும் சொல்லுகிறபடியே வேதம் போல் பொய்யாகாததான ஆயுத மெடுப்பதில்லை யென்று தான் பண்ணின ப்ரதிஜ்ஞையை யழித்துக் கொண்டாகிலும் 'ஆயுதம் எடுக்கப் பண்ணுகிறேன்' என்று ஸ்ரீபீஷ்மர் செய்த ப்ரதிஜ்ஞையை மெய்யாக்கி என்றுகவுமாம். இத்தால் பகவானுடைய ஆச்ரித பக்ஷபாதாதிசயம் வ்யஞ்ஜிதம். இப்படி மெய் வாக்கியத்தை ஆச்ரிதர்களுடைய கூறுக்கினபடியால் 'பொய் நம்பி புள்ளுவம் கள்வம்

பொதியறை' என்கிறபடியே தான் பொய்யையே தன் கூறுகப் பற்றினுர் என்பது த்யோதிதமாகிறது. தன் வார்த்தையாகில் பிறபட்டார் ஒருக்கால் இது பொய் யாகுமோ என்று ஸந்தேஹிக்க வடுக்கும் என்றே பகவான் அர்ஜுனனைக் குறித்து '**कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति**' (கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்தঃ ப்ரணச்யதி) என்றருளிச் செய்தது.

அன்றிக்கே, 'பால்' என்பதற்கு விஷயத்தில் என் றர்த்தமாய் 'மெய்யனுகும் விரும்பித் தொழுவார்க் கெல் லாம் பொய்யனுகும் புறமே தொழுவார்க் கெல்லாம்' என் கிறபடியே அநந்ய ப்ரயோஜநராய்த் தன்னை ஆச்ரயித்த வர்கள் விஷயத்தில் தான் தன்னை உள்ளபடியே காட்டிக் கொடுக்கும், அப்படி யல்லாதவர்களுக்குத் தன்னைக் காட்டிக் கொடான் என்றதாகவுமாம். அதுவு மன்றிக்கே அடியவர்களான நடாதூர் அம்மாள், அப்புள்ளார் முத லியவர்களிடத்தில் மெய் வார்த்தையைத் திருவுள்ளத்தில் வைத்து என்றதாகவுமாம். அதாவது '**प्रतिष्ठापितवेदान्तः प्रतिक्षिप्तबहिर्मतः**' (ப்ரதிஷ்டாபித வேதாந்தঃ ப்ரதிக்ஷிப்த பஹிர்மதঃ) என்று அவர்கள் அநுக்ரஹித்ததை மெய்யாக்க வேண்டுமென்று கொண்டு என்றபடி.

தெருள்தர நின்ற—ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ ரூபியாய் ஸர்வ சாஸ்த்ரார்த்தங்களையும் உபதேசிப்பதற்காக முன்பே பாரித்துக் கொண்டு நின்ற, இத்தையே மேலும் 'அயிந் தைமா நகரி லமர்ந்தனை யெமக்காய்' என்றருளிச் செய்தி ருக்கிருர். இத்தால் தமக்கு ஸர்வ ச்ரேயஸ்ஸுக்கும் முதல் காரணமான ஆசார்ய கடாக்ஷ விசேஷ மநுஸந்திக்கப் பட்டு, அப்படிப்பட்ட ஆசார்ய ஸ்மரண ரூபமான மங்க

ளம் செய்யப்பட்டதாகவுமாயிற்று. இத்தால் த்ருவனுடைய தபஸ்ஸினால் ஸந்துஷ்டனாய் பகவான் அவர் எதிரில் நின்று ஸேவை ஸாதித்தபொழுது, **'सतं विवक्षन्तमतद्विदं हरिः ज्ञात्वास्य सर्वस्य च हृद्यवस्थितः। कृताञ्जलिं ब्रह्ममयेन कंबुना पस्पर्श बालं कृपया कपोले ॥'** (ஸ தம் விவக்ஷந்தமதத்விதம் ஹரிః ஜ்ஞாத்வாஸ்ய ஸர்வஸ்ய ச ஹ்ருத்யவஸ்திதः| க்ருதாஞ்ஜலிம் ப்ரம்மமயேந கம்புநா பஸ்பர்ஶ பாலம் க்ருபயா கபோலே ||) என்கிறபடியே ஸ்தோத்ரம் செய்யத் தெரியாமல் பாலனாகையாலே திகைத்து நின்ற த்ருவனைக் கடாக்ஷித்து ஜ்ஞாந ப்ரதமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தினால் அவருடைய கபோலத்தைத் தடவ அவர் அப்பொழுதே பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபவாதிகளை உள்ளபடியே யறிந்து நின்றாலும், முதலில் தமக்குண்டான அந்த உபகாரத்தையே **'योन्तः प्रविश्य'** (யோந்தः ப்ரவிஶ்ய) என்றாரம்பித்து ஸ்தோத்ரம் செய்தாப் போலே, இவரும் தமக்கு ஸ்ரீஹயக்ரீவ ரூபியாய் ஜ்ஞாந ப்ரதாநம் பண்ணின உபகாரத்தைப் பேசுகிறார் என்பது தெரிவிக்கப் பட்டதாயிற்று.

நின்னருளெனும் சீர் ஓர் அறிவை யானதென— **'देव्या कारुण्यरूपया'** (தேவ்யா காருண்ய ரூபயா) என்று ப்ரமாணங்கள் முறையிடுகிறபடியே பகவானைப் போல் நிக்ரஹ ஸங்கல்பம் கலசாமல் **'नित्यमज्ञातनिग्रहां। अनुग्रहमयीं'** (நித்ய மஜ்ஞாத நிக்ரஹாம், அநுக்ரஹமயீம்) என்றிருக்கிறபடியால் பகவானுடைய காருண்யமே மூர்த்தீகரித்திருக்கிறப்போல என்று தாத்பர்யம்.

'இருள்செக' என்பதற்கு 'காரார்ந்த வானமரு மின்னிமைக்கும்............தேனமரும் பூமேல் திரு' என்

கிறபடியே கருமுகில் போன்ற பகவானுடைய திருமேனி நிறத்துக்குப் பரபாகமான தன் நிறத்தாலே ப்ரகாசம் செய்கிருள் என்று தாத்பர்யம். அன்றிக்கே பகவானு டைய இருளன்ன மாமேனியின் நிறத்தைத் தன் திரு மேனி நிறத்தால் மறைத்து **'आप्रणखात् सर्व एव हिरण्मयः'** (ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஹிரண்மய:) என்னும்படி செய்கி ருள் என்ருகவுமாம். அதுவு மன்றிக்கே, 'இருள்' என்றது அஜ்ஞாநாந்தகாரமாய் பரதத்வ விஷயத்தில் அந்யதாஜ் ஞாந விபரீத ஜ்ஞாந ஸம்சய விபர்யயங்கள் இல்லாமல் நிர்த்தாரணம் பண்ணிக் கொடுக்கிருள் என்ருகவுமாம். **'वेदान्ताः तत्वचिन्ताम्मुरभिदुरसि यत्पादचिन्हैः तरन्ति'** (வேதாந்தாஸ் தத்வ சிந்தாம் முரபிதுரஸி யத் பாத சிந் நைஸ் தரந்தி), **'व्यक्ताकृतेस्तव समीक्ष्य भुजान्तरे तां त्वामेव गोपनगरीश जना विदुस्ते'** (வ்யக்தாக்ருதேஸ் தவ ஸமீக்ஷ்ய புஜாந்தரே தாம் த்வாமேவ கோபநகரீஶ ஜநா: விதுஸ்தே), 'திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு' இத்யாதிகளிற் படியே ஶ்ரிய: பதித்வ சிந்நமன்ருே தேவதாந்தர வ்யாவர்த் தக தர்மங்களில் ப்ரதானமானது.

இன்னொளி விளக்காய் - விளக்காய், ஒளி விளக்காய், இன்னொளி விளக்காய், விளக்கு - ஸ்வயம் ப்ரகாசமான ஜீவாத்ம ஸ்வரூபம், ஒளி விளக்கு - ஸர்வதேச காலாவஸ் தைகளிலும் அஸங்குசித ஜ்ஞாந ஸ்வரூபமான பரமாத்ம ஸ்வரூபம், இன்னொளி விளக்கு - பித்ருத்வ ப்ரயுக்தமான ஊஷ்மளத்வம் (வெப்பம்) தட்டாமல் ஸர்வதா அநுக்ரஹ மய மாகையாலே மிகவும் ஸுக ரூபமான பிராட்டியின் ஸ்வரூபம், ஓர் இன்னொளி விளக்கு - பூமி நீளாதிகளில் வ்யாவ்ருத்தமாய் **'यथा सर्वगतो विष्णुः तथैवेयं द्विजोत्तम'**

(யதா ஸர்வ கதோ விஷ்ணுः ததைவேயம் த்விஜோத்தம) இத்யாதிகளிற்படியே பகவானுடைய ஸ்வரூப ரூப குணாதிகளில் பிரிவில்லாமல் சேர்ந்திருக்கும் பிராட்டியின் ஸ்வரூபம். 'எமக்கு' என்பதற்கு 'अस्मादृशामपकृतौ चिरदीक्षितानां' (அஸ்மாத்ருஶாம் அபக்ருதள சிர தீக்ஷிதாநாம்) என்கிறபடியே எப்பொழுதும் பகவதபசாரங்களைப் பண்ணி அதனால் பீதரான நமக்கு என்றர்த்தம். இத்தால் ஸாபராதரான நமக்குப் பிராட்டியை யொழியத் தஞ்சமில்லை என்று நிஷ்க்கர்ஷித் தருளினாராயிற்று. 'ஓர்' என்பதற்கு புருஷகார பாவத்திலும், உபாய பாவத்திலும் அந்விதையா யிருக்கிறபடியாலே எம்பெருமானை விட வ்யாவ்ருத்தியைத் தெரிவிக்கிற தாகவுமாம்.

'மணிவரை' இத்யாதி - 'கருமாணிக்க மலைமேல் மணித்தடந் தாமரைக் காடுகள் போல்' என்றும், 'விட்டிலங்கு செஞ்சோதி தாமரை பாதங் கைகள் கண்கள் விட்டிலங்கு கருஞ்சுடர் மலையே திருவுடம்பு' என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீ தேவநாதனுடைய திருமேனியின் போக்யதையையும் மஹத்வத்தையும் விவக்ஷித்தபடி. 'धत्ते शोभां हरिमरतके तावकी मूर्तिराद्या तन्वी तुङ्गस्तनभरनता तप्तजांबूनदाभा' (தத்தே சோபாம் ஹரிமரதகே தாவகீ மூர்த்திராத்யா தந்வீ துங்க ஸ்தநபர நதா தப்த ஜாம்பூநதாபா) என்றிவர்தாமே ஸ்ரீஸ்துதியில் அருளிச் செய்திருப்பது இங்கநுஸந்தேயம். 'அணியமராகம்' என்பதனால் 'முடிச்சோதி' யிற்படியே திவ்யாபரணங்களுக்கும், திவ்யாவயவங்களுக்கும் அந்யோந்யம் விவேகித்தறிய முடியாததான சேர்த்தி யருளிச் செய்யப்பட்டது. 'सुश्लिष्टाकल्पमङ्गैः' (ஸுஶ்லிஷ்டா கல்பமங்கைः) என்றிறே

ஸ்ரீமத் த்மிரடோபநிமிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும் ஸங்க்ரஹித்தருளினது. அன்றிக்கே, '**भूषायुधैरधिगतं निजकान्तिहेतोः**' (பூஷாயுதை ரதிகதம் நிஜகாந்திஹேதோः) என்கிறபடியே திவ்யாபரணங்கள், கோலமாமணியாரம், முத்துத் தாமம், ஸ்ரீ கௌஸ்துபம், முதலியவை தந்தாம் சோபை பெறுவதற்காக இத் திரு மேனியை விட்டுப் பிரியாம லிருக்கின்றன என்றதாகவுமாம். கேவலம் ஆபரணங்களாய் நின்றவை திரு ஆபரணங்க ளாவதற்காகத் திருவுடன் சேர்ந்து இருக்கின்றன. அலங்கலா யிலங்கி - 'உன் திருமார்வத்து மாலை' என்கிறபடியே புஷ்பமாலை போலே போக்யமாய் இருக்கிற என்றபடி.

'நின்படி' இத்யாதி - பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளுக்கு அநுரூபமான ஸ்வரூப ரூப குண விபூதிகளை யுடையவளான. '**भगवन्नारायणाभिमतानुरूपस्वरूप**' (பகவந் நாராயணாபிமதாநுரூப ஸ்வரூப) இத்யாதியிறே அருளிச் செய்யப்பட்டது. அன்றிக்கே '**देवत्वे देवदेहेयं**' (தேவத்வே தேவ தேஹேயம்) '**राघवत्वेऽभवत्सीता**' (ராகவத்வேபவத்ஸீதா) இத்யாதிகளிற்படியே பகவானுடைய அவதார விக்ரஹங்களுக்கு அநுரூபமான விக்ரஹங்களை யுடையவளாய் என்றபடியாகவுமாம். '**यद्भावेषु पृथग्विधेषु अनुगुणान् भावान् स्वयम् बिभ्रती यद्धर्मैरिह धर्मिणी विहरते नानाकृतिर्नायिका**' (யத் பாவேஷு ப்ருதக் விதேஷ் வநுகுணாந் பாவாந் ஸ்வயம் பிப்ரதீ யத் தர்மை ரிஹ தர்மிணீ விஹரதே நாநாக்ருதிர் நாயிகா) என்றிறே இவர் தாமும் ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரத்தில் அருளிச்செய்தது. 'அன்புடன்' இத்யாதி - '**भर्तृस्नेहबलात्कृता**' (பர்த்ரு ஸ்நேஹ பலாத்க்ருதா) என்கிற

படியே பகவானிடத்தில் உண்டான ப்ரீத்யதிசயத் தாலே திவ்ய விக்ரஹத்தில் ப்ரம்மசர்யாவஸ்தையை அபி நயிக்கும் தசையிலும் 'कृष्णाजिनेन संवृण्वन् वधूं वक्षस्थलालयां' (க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷஸ்தலா லயாம்), 'भिक्षोचितं प्रकटयन् प्रथमाश्रमित्वं कृष्णाजिनं यवनिकां कृतवान् प्रियायाः' (பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரதமாச்ர மித்வம் க்ருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா:) என்கிறபடியே கிருஷ்ணாஜினத்தினால் மறைத்துக் கொள் ளும்படி க்ஷணகால விச்லேஷத்தையும் பொறுக்காத ப்ரீதி விசேஷத்தால் என்றபடி. அன்றிக்கே, ஸாது பரித்ராணத் திற்காகத் தேவரீர் அவதரித்தருளும் பொழுது அவர்க ளுடைய அபராதாதிகளைப் பார்த்து நிக்ரஹ ஸங்கல்பத் தைச் செய்யாதிருப்பதற்காக ஆச்ரிதர்களிடத்தில் வாத் ஸல்யத்தினாலே உம்மை விட்டுப் பிரியாத என்றபடி யாகவுமாம்.

'पितेव त्वत्प्रेयान् जननि! परिपूर्णागसि जने हितस्रोतोवृत्त्या भवतिच कदाचित् कलुषधीः। किमेतन्निर्दोषः क इह जगतीति त्वं उचितैरुपायैः विस्मार्य स्वजनयसि माता तदसिनः॥' (பிதேவ த்வத் ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே ஹிதஸ்ரோதோ வ்ருத்யா பவதிச கதாசித் கலுஷதீ:| கிமேதந் நிர்தோஷ: க இஹ ஜகதீதி த்வ முசிதை ருபாயை: விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந: ||) என்பது இங் கநுஸந்தேயம். இப்படி 'என்னடியார் அது செய்யார்' என்கிறபடியே அவனை அதிசங்கை பண்ணிக் கொண்டிருக்கும் பகவானும், இவனை அதிசங்கை பண்ணி விட்டுப் பிரியாமல் இருக்கும் பிராட்டியுமாகிய மிதுநமே ஜீவாத்மாவுக்கு உத்தேச்ய மாயிற்று.

'இப்படி விலக்ஷணமாக விளங்கும் இம் மிதுநத்தையே உத்தேஶ்ய மென்று பற்றி யிருப்பார்க்கு ஒரு குறை யுண்டோ? இவர்களைத் தனித் தனியே பற்றுவார்க்கு விநாசமிறே' என்றார்கள் அபியுக்தர்களும்.

அன்றிக்கே, 'இருதலையன்பு தன்னால்' என்றிவர் தாமே யருளிச் செய்தபடி அத்தலையில் வால்லப்யத்தாலும், இத்தலையில் வாத்ஸல்யத்தாலும் பர்த்தாவின் படுக்கை யையும் ப்ரஜையின் தொட்டிலையும் விடாத தாயரைப் போல பகவான் அவதரிக்கும்போ தெல்லாம் தானும் '**अशेषरूपेष्वनुरूपरूपादेवी**' (அசேஷ ரூபேஷ் வநுரூப ரூபா தேவீ) என்கிறபடியே ஒக்க அவதரித்தருளி என்றாகவு மாம். அன்றிக்கே, ஆஸுரப் ப்ரக்ருதிகளிடத்தில் நிக்ரஹ ஸங்கல்பத்தினால் மோஹிப்பிப்பதற்காகத் தூக்காதிகளை அபிநயித்துக் கொண்டிருக்கிற உம்மைப் போலன்றிக்கே ப்ராதிகூல்யத்திலே மிகவும் வ்யவஸிதர்களான ராவணாதி களுக்குங் கூட '**तेन मैत्री भवतु ते**' (தேந மைத்ரீ பவது தே) என்று ஹிதோபதேசம் செய்யும்படியான கேவல அநுக்ரஹ விசேஷத்துடன் என்றபடியாகவுமாம்.

இதற்குமேல் பிராட்டியின் உத்கர்ஷத்தை நிரூபித் தருளப் போகிறவராய், பகவத் வாசகமான திருநாமங் களுக்குள் நாராயண சப்தம் போலே பிராட்டி வாசகமான திருநாமங்களுக்குள் அவளுடைய அஸா தாரணமான மஹிமைகளைப் ப்ரகாசம் செய்கிற படியாலே மஹாப்ரபாவ முடையதாய் '**भगवन्नारायण**' (பகவந்நாராயண) என்கிற நேரிலே '**भगवतीं श्रियं**' (பகவ தீம் ஶ்ரியம்) என்று கத்யத்தில் ப்ரயோகிக்கப் பட்டிருப்ப தால் '**श्रीरित्येवच नामते**' (ஶ்ரீரித்யேவச நாமதே) என்றும்,

'**श्रीरसि यतः**' (ஸ்ரீரஸி யதஃ) என்றும் கொண்டாடப் பட்டதான ஸ்ரீசப்தத்தின் ஆறு விதமான நிர்வசனங்களால் ஏற்பட்ட அர்த்தத்தை அடைவே நிரூபித்தருளுகிறார்.— 'வேண்டுரை' என்றாரம்பித்து.

'வேண்டுரை' இத்யாதி - ஸம்ஸாரி ஜனங்களால் அபேக்ஷிக்கத் தகுந்த உபதேசங்களை, அதாவது '**अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिं**' (அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்), '**मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन**' (மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந) இத்யாதிகளை அவ்வோ அவஸரங்களிலே அவனிட மிருந்து கேட்டு அவைகளை மிகவும் ப்ரதிகூலர்களான ராவணாதிகளுக்கும் உள்பட உபதேசித்துக் கொண்டு. அன்றிக்கே, எம்பெருமானிடத்தில் '**आनृशंस्यं परो धर्मः**' (ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்மஃ) இத்யாதியைத் தான் கேட்டுவைத்து, கபோதி கபோதத்தை '**शृणुष्वावहितः कान्त यत्ते वक्ष्याम्यहं हितम्**' (ஶ்ருணுஷ்வாவஹிதஃ காந்த யத்தே வக்ஷ்யாம்யஹம் ஹிதம்) என்று கேட்பித்தாப்போலே, அவனையே '**त्वत्त एव मया श्रुतः**' (த்வத்த ஏவ மயா ஶ்ருதஃ) என்று கேட்பிக்கும் என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே, ஜனங்கள் ப்ரார்த்திக் கிற வார்த்தையைத் தான் கேட்டு, அவைகளை எம்பெருமான் கேட்கும்படி செய்யும் என்றாகவுமாம். '**मातस्त्वमम्बुरुहवासिनि किंचिदेतत् विज्ञाप्यते मयि कुरुष्व तथा प्रसादं। आकर्णयिष्यति यथा विबुधेश्वरस्ते प्रेयानसौ पृथुक जल्पितवन्मदुक्तिं॥**' (மாதஸ்த்வ மம்புருஹவாஸிநி கிஞ்சிதேதத் விஜ்ஞாப் யதே மயி குருஷ்வ ததா ப்ரஸாதம் | ஆகர்ணயிஷ்யதி யதா விபுதேஶ்வரஸ்தே ப்ரேயாநஸௌ ப்ருதுக ஜல்பிதவந் மதுக் திம் ||) என்றிறே இவர் தாமே ஸ்ரீதேவநாயக பஞ்சாஶத்தில்

அருளிச்செய்திருப்பது. இது 'श्रुणोति' (ச்ருணோதி) கேட்கிறாள், 'श्रावयति' (ப்ராவயதி) கேட்பிக்கிறாள், என்கிற நிர்வசனங்களை யநுஸரித்து நிரூபித்தருளின அர்த்தம்.

'ஈண்டிய' இத்யாதி - அநாதியாக இடைவிடாமல் செய்து கொண்டிருப்பதனாலே 'நெய்க்குடத்தைப் பற்றி யேறும் எறும்புகள் போல் நிறைந்தெங்கும் கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்' என்றும், 'செடியார் வினைகள்' என்றும், 'கொடுவினைத் தூற்றுள் நின்று' என்றும், சொல்லுகிறபடியே வேறொன்றினால் அடி கண்டுபிடிக்க முடியாதபடி தூறு மண்டிக் கிடக்கிற வினைகள் நசிக்கும் படி க்ருபை பண்ணி, அதாவது உபாய விரோதியாயும் ப்ராப்ய விரோதியாயும் இருக்கிற ஸர்வ பாபங்களையும், புருஷகாரமாயும் ஸித்தோபாயத்துக்கு விசேஷணமாயும் இருந்து, போக்கடித்தருளி என்றபடி. இவ்வர்த்தம் 'வேரி மாறாத பூமே லிருப்பாள் வினை தீர்க்குமே' என்று மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வாரால் அருளிச் செய்யப்பட்டது. 'இத்திருவாய் மொழியை வல்லாருடைய ஸமஸ்த துக்கங்களையும் பகவ தாஸ்ரித வாத்ஸல்யாதி கல்யாண குணைக போகையான பெரிய பிராட்டியார் போக்கடிக்கும் என்கிறார்' என்று திருக்குருகைப்பிரான் பிள்ளானும் வ்யாக்யானம் செய்தருளினார். இதன் வ்யாக்யானமான இருபத்து நாலாயிரப்படியிலும், 'இத் திருவாய்மொழி கற்றாரைத் தனக்கே பரமாக்கிக்கொண்டு இவர்களுடைய பகவதநுபவ விரோதி ஸமஸ்த துக்கங்களையும் தீர்க்கு மென்றபடி' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இது 'शृणाति' (ச்ருணாதி) பரிசுத்தப் படுத்துகிறாள் என்கிற நிர்வசனத்தை யநுஸரித்து நிரூபித்த அர்த்தம்.

'தன்னடி சேர்ந்த' இத்யாதி—தன்னைப் புருஷகார மாக ஆச்ரயித்தவர்கள் பகவதாபிமுக்யம் பெற்று பக வானை யடையும்படிக்கு. உனையணுக - உன்னைப் பரிபூர்ண மாக வநுபவித்து யதா மநோரதம் கைங்கர்யாதிகளைச் செய்து கிட்டி யநுபவிக்க. அணுகுதல் - கிட்டுதல், இவ் விடத்தில் உபாயமாக ஆச்ரயிப்பதையும், யதாமநோரதம் அநுபவிப்பதையும் சொல்லுகிறது. பகவதநுபவ பூர்த்தி, கைங்கர்ய பூர்த்தி முதலிய பரிபாகங்களை யுண்டாக்கி என்ற படி. இது '**श्रीयते**' (ஸ்ரீயதே) அடையப்படுகிருள், '**श्रीणाति**' (ஸ்ரீணுதி) ஆனந்திப்பிக்கிருள், என்கிற நிர்வசனங்களை யநுஸரித்து நிரூபித்த அர்த்தம். நின்னுடன் சேர்ந்து - இது '**श्रयते**' (ச்ரயதே) அடைகிருள், என்கிற நிர் வசனத்தை யநுஸரித்த அர்த்தம்.

நிற்கும்—இப்படிப் பட்ட ஸ்வபாவங்களை யுடையவ ளாய்க் கொண்டு இருக்கிற, அன்றிக்கே, நின்னுடன் சேர்ந்து நிற்கும் - உன்னுடன் சேர்ந்திருந்தாலல்லது தரிக்க முடியாத ஸ்வபாவத்தை யுடையவளான. '**अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा**' (அநந்யா ராகவேணுஹம் பாஸ்கரேண ப்ரபா யதா) என்றும், 'அகலகில்லே னிறை யும்' என்றும் சொல்லுகிற படியே பகவானுடன் ஒரு க்ஷணகாலம் விப்லேஷமுண்டாகில் தரிக்க மாட்டாத ஸ்வபாவத்தை யுடையவள் என்றபடி. '**पश्यतां सर्व देवानां ययौ वक्षस्थलं हरेः**' (பஶ்யதாம் ஸர்வ தேவாநாம் யயௌ வக்ஷஸ்தலம் ஹரே:) என்கிறபடியே க்ஷீராப்தி மதந காலத் தில் ஸர்வதேவர்களும் தம்தாம் மார்பைப் பார்த்துக் கொண்டிருக்க அவர்களை அநாதரித்து விட்டு கலசப்பானை ஏந்துவார்க்கும் அஞ்சவேண்டுமோ என்று நினைத்துக்

கூசாதே பகவானுடைய திருமார்பிலே அடியிட்டேறின பிறகு கால்தரிப்புண்டு நற்றரிக்க இருந்தாள் என்ருகவுமாம். **'अस्या देव्या मनस्तस्मिन् तस्य चास्यां प्रतिष्ठितम्'** (அஸ்யா தேவ்யா மநஸ் தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்) என்கிறபடியே ஒருவர்க்கொருவர் சேர்த்தியினலேயே ஜீவித்திருக்கிறது இம்மிதுநம் என்ருனிறே மஹர்ஷியும்.

நின் திரு—**'तव श्रिया'**(தவ ஶ்ரியா)'உன் திரு' **'सम्पद्दिव्या मधुविजयिनः'** (ஸம்பத் திவ்யா மதுவிஜயிநঃ) **'अप्रमेयंहि तत्तेजोयस्य सा जनकात्मजा'** (அப்ரமேயம்ஹி தத்தேஜோயஸ்ய ஸா ஜநகாத்மஜா) 'வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை' இத்யாதிகளிற்படியே உன் திவ்யாத்மஸ்வரூபத்துக்குத் தேஜஸ் முதலியவற்றை வ்ருத்தி செய்யக் கூடியவளாயும், திவ்யமங்கள விக்ரஹத்துக்குப் பரபாகமான நிறத்தை யுடையவளாகையாலே சோபாவஹையாயும், அதனல் உனக்கு நிரவதிக ஸம்பத்து என்று சொல்லக் கூடியவளாயு மிருக்கும் பெரிய பிராட்டியார் என்றபடி. அருள்தரும்—**'अलमेषा परित्रातुं राघवात् राक्षसीगणं'** (அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்) என்கிறபடியே பெரிய பிராட்டியாரே ஸர்வாநிஷ்டங்களையும் போக்கடித்து, ஸர்வேஷ்டங்களையும் கொடுக்கும்படியான க்ருபையைச் செய்யும் என்றபடி. அன்றிக்கே, 'தெருள்தர நின்ற தெய்வநாயக........நின்திருவே அருள்தரும்'—நீ எனக்கு ஜ்ஞாநாதிகளைக் கொடுப்பதற்காகப் பாரித்துக் கொண்டு நிற்க, அதற்கு முன்னமேயே அதற்கநுகுணமான க்ருபையைப் பிராட்டியே பண்ணு நிற்கும் என்ருகவுமாம். 'திருவே அருள்தரும்' என்பதற்கு அடியிலே தொடங்கி சைதந்ய ஸ்தந்ய தாயிநியாய், பிறகு புருஷகார

பூதையாய், '**अस्तुते**' (அஸ்துதே) என்கிற அநுக்ரஹ விசேஷத்தினால் உபாய பூர்த்தியை உண்டாக்கு மென்று தாத்பர்யம். இப்படி இவள் செய்யும் க்ருபா ப்ரவாஹங்கள் உம்மாலும் செய்யக் கூடியவைகள் அல்ல என்றதாயிற்று. அதுவுமன்றிக்கே ஸாபராதரான நமக்குப் பித்ருத்வ ப்ரயுக்தமான ஊஷ்மளத்வ தண்டதரத்வாதிகளையுடைய உம்மைப் போலன்றியே மாத்ருத்வ ப்ரயுக்த நிரவதிக வாத்ஸல்யாதிகளை யுடையவளான பிராட்டியே க்ருபை செய்பவள் என்றாகவுமாம். '**वात्सल्यनिर्भरतया जननी कुमारं स्तन्येन वर्धयति दष्टपयोधरापि**' (வாத்ஸல்ய நிர்ப்பரதயா ஜநநீ குமாரம் ஸ்தந்யேந வர்த்தயதி தஷ்ட பயோதராபி) என்று ஸ்ரீ கோதாஸ்துதியில் அருளிச் செய்திருப்பது இங் கநுஸந்தேயம்.

இத்தால் ஸ்ரீ ப்ரபத்திக்குக் கரண மந்த்ரமான '**चन्द्रां प्रभासां**' (சந்த்ராம் ப்ரபாஸாம்) இத்யாதி ச்ருதியும் வ்யாக்யாதமாயிற்று. எங்ஙனே யென்னில் 'இன்னொளி' '**चन्द्रां**' என்பதன் அர்த்தம். '**चदिआह्लादे**' என்றிறே தாது. '**प्रभासां**' என்பது 'இருள் செக.........விளக்காய்' என்பதனால் விவ்ருதமாயிற்று. பகவத் ஸ்வரூபத்துக்கு அதிசயாவஹையாய் இருந்துகொண்டு ப்ரகாசிக்கிறாள் என்றன்றோ அப்பதத்துக்குத் தாத்பர்யம். '**यशसा ज्वलन्तीं**' (யசஸா ஜ்வலந்தீம்) என்றது 'நின்னருள்.........ஆனதென' என்பதால் வ்யாக்யாதம். நிக்ரஹம் கலந்த பகவானுடைய குணங்களைக் காட்டிலும் அஜ்ஞாத நிக்ரஹையான இவளுடைய யசஸ் மேலானது என்றல்லவோ அப்பதங்களுக்குத் தாத்பர்யம். ஸ்ரீசப்த வ்யுத்பத்திகளை நிரூபித்துச் சொல்லுகிற 'வேண்டுரை.........நின் திரு' என்

பதனால் 'श्रियं' என்பதன் அர்த்தம் சொல்லப்பட்டதா யிற்று. 'நின்படிக் கெல்லாம் ........ அருளி', 'நின்திரு' என்பதனால் 'लोके देव जुष्टां' (லோகே தேவ ஜுஷ்டாம்) என்னும் பதங்களின் அர்த்தங்கள் நிரூபிக்கப்பட்டதா கிறது. இந்த வுலகத்தில் பகவான் அவதரிக்கும் பொழு தெல்லாம் தானும் அவதரிக்கிறாள் என்றும், அவனுடைய ப்ரீதிக்கு விஷயமாயிருக்கிறாள் என்றுமல்லவா ச்ருதிக்குத் தாத்பர்யம். 'திருவே அருள் தரும்' என்பதனால் 'उदारां' (உதாராம்) என்பது வ்யாக்யாதமாயிற்று. 'அலங்கலா யிலங்கி' என்பதனால் 'पद्मनेमिं' (பத்ம நேமிம்) என்பதன் அர்த்தமும், 'தன்னடி சேர்ந்த தமர்' என்பதனால் 'शरणमहं प्रपद्ये' (சரண மஹம் ப்ரபத்யே) என்பதன் அர்த்தமும், 'இருள் செக', 'ஈண்டிய ........ முயன்று' என்பதனால் 'अलक्ष्मीर्मे नश्यतां' (அலக்ஷ்மீர்மே நச்யதாம்) என்பதன் அர்த்தமும், 'தன்னடி சேர்ந்த தமர்' என்பதனால் 'त्वां वृणे' (த்வாம் வ்ருணே) என்பதன் அர்த்தமும் ஸூசித மாயிற்று.

ஸர்வ சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹமாய் மயர்வற மதி நல மருளப்பெற்ற நம் ப்ரபந்ந ஜந ஸந்தான கூடஸ்தரான ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய் மொழியின் ஸாரமான முதற் பாட்டாகிய 'உயர்வற' இத்யாதியின் அர்த்தமும் இந்தப் பாட்டால் ஸங்க்ரஹிக்கப் பட்டதா கிறது. எங்ஙனே யென்னில்:—அங்கு 'மயர்வற மதி நல மருளினன் அயர்வறு மமரர்கள் அதிபதி' என்றது 'தெருள் தர நின்ற தெய்வ நாயக' என்று இங்கருளிச் செய்யப்பட்டது. ஆழ்வாருக்குக் கேவலம் பகவான் தன் னுடைய க்ருபையினாலே அநுக்ரஹித்தான்; இவரோ

ஆசார்ய க்ருபா மூலமான பகவத் க்ருபையினால் மயர் வற மதிநல மருளப் பெற்றார், என்பது 'அடியவர் பால் மெய்யை வைத்து' என்கிற விசேஷணத்தால் ஏற்படு கிறது. இத்தால் ஸம்யக் ஜ்ஞாநத்துக்குக் காரணங்களாக '**अस्तु मे**' (அஸ்து மே) என்றபேக்ஷித்தால் '**अस्तु ते तयैव सर्वं संपत्स्यते**' (அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே) என்கிற திருமுகப் பாசுரமும், ஸதாசார்யாநுக்ரஹமும், ஸத்ஸம்ப்ரதாய ஸித்தியும்' என்றிவர் தாமே ஸ்ரீமத்ரஹஸ் யத்ரய ஸாரத்தில் அருளிச்செய்தவை தமக்குப் பூர்ணமா யுண்டென்றருளிச் செய்தாராயிற்று.

'**वृषगिरिगृहमेधिगुणा बोधबलैश्वर्यवीर्यशक्तिमुखाः। दोषा भवेयुरेते यदि नाम दये त्वया विना भूताः॥**' (வ்ருஷகிரி க்ருஹ மேதி குணா போதபலைச்வர்ய வீர்ய சக்திமுகாः| தோஷா பவேயு ரேதே யதிநாம தயே த்வயா விநாபூதாः||) என்கிற படியே பகவானுடைய ஸர்வஜ்ஞத்வம், ஸர்வ சக்தித்வம் முதலியவற்றைத் தோஷங்களாகப் பர்யவஸியாதபடி தன் னுடைய ஸம்பந்தத்தினால் குணங்களாக்கிக் கொண்டிருக்கி றது என்கிற தயையின் மேன்மையைத் திருவுள்ளத்தில் கொண்டு, அனேகம் குணங்க ளிருக்க அவற்றை விட்டு விட்டு, 'நின்னருளெனும் சீர்' என்றருளிச் செய்தபடியி னால் உயர்வற வுயர்நல முடையவன் இத்தெய்வநாயகனே என்றதாயிற்று. இத்தால் பகவானுடைய கல்யாண குணங் கள் உயர்வற உயர்ந்தமைக்குக் காரணம் அவை தயை யோடு கூடியிருக்கை தானென்பதும் ஸூசிதமாயிற்று. தயை இல்லாவிடில் பரத்வாதிகள் பாதகங்களாக வன்றோ நிற்கும்படியாம்.

'गुणास्सत्यज्ञानप्रभृतय उत त्वद्गततया शुभीभूयंयाता इति हि निरणैष्म श्रुतिवशात्' (குணஸ் ஸத்ய ஜ்ஞாந ப்ரப்ருதய உத த்வத் கததயா ஶுபீபூயம் யாதா இதி ஹி நிரணைஷ்ம ச்ருதிவசாத்) என்கிறபடியே இக்குணங்களுக் கெல்லாம் நிறம் கொடுக்கிறதாய், 'எவன் எவன்' என்னும் பதங்களி ஞல் நிர்தேசிக்கப்பட்ட ஸ்வரூபோத்கர்ஷத்தை 'நின்' என்றருளிச்செய்தார்.

ஸ்ரீநிவாஸனுடைய க்ருபை 'इक्षुसारस्रवन्त्येव यन्मूर्त्या शर्करायितम्' (இக்ஷுஸார ஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா சர்க்கராயிதம்) என்கிறபடியே கேவலம் ஒரு அசேதன மான மலையாய்ப் பரிணமித்தது என்றருளிச் செய்து, இங்கு 'ஓர் அரிவை யானதென' என்றருளிச் செய் திருப்பதனுல் ஸ்ரீதேவநாதனுடைய க்ருபையின் உத்கர் ஷாதிசயம் த்யோதிதமாயிற்று.

'துயரறு' இத்யாதி துரீயபாதத்தின் அர்த்தம் 'வேண்டுரை கேட்டு' இத்யாதியால் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது. இங்கு 'சுடர்' என்னும் பதம் 'भास्करेण प्रभा यथा' (பாஸ்கரேண ப்ரபா யதா) என்றும், 'प्रभावान् सीतया देव्या' (ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா) என்றும், 'अनपायप्रभान्वितः' (அநபாய ப்ரபாந்வித:) என்றும் சொல்லுகிறபடியே ப்ரபா ஸ்தாநீயையான லக்ஷ்மியையும் குறிக்கிறது என்பது தம்முடைய திருவுள்ளம் என்று நிரூபித்தருளினுராயிற்று. (1)

அவதாரிகை.

இப்படிப் புருஷகாரபூதையான பெரிய பிராட்டியா ரிடத்தில் ப்ரபத்திபண்ணி 'मातस्त्वमंबुरुहवासिनि किंचिदेतत्

विज्ञाप्यते मयि कुरुष्व तथा प्रसादं। आकर्णयिष्यति यथा विबुधेश्वरस्ते प्रेयानसौ पृथुक जल्पितवन्मदुक्तिम् ॥' (மாதஸ் த்வ மம்புருஹ வாஸிநி கிஞ்சிதேதத் விஜ்ஞாப்யதே மயி குருஷ்வ ததா ப்ரஸாதம்| ஆகர்ணயிஷ்யதி யதா விபுதேச்வரஸ் தே ப்ரேயாநஸௌ ப்ருதுக ஜல்பிதவந் மதுக்திம்) என்று ப்ரார்த்தித்து நின்றாராயிற்று கீழ். 'मातः'—பிதாவைப் போல் ஹித ப்ரவ்ருத்திக்காக ஊஷ்மளத்வாதிகள் கலசாமல், 'वात्सल्यनिर्भरतया जननी कुमारं स्तन्येन वर्धयति दष्टपयोधरापि' (வாத்ஸல்ய நிர்ப்பரதயா ஜநநீ குமாரம் ஸ்தந்யேந வர்த்தயதி தஷ்டபயோதராபி) என்கிறபடியே ப்ரஜை அபசாரப்பட்ட போதிலும் அதை யிட்டு அநாதரியாமல், அதைக் காப்பாற்றும் தாயைப் போலப் பரிபூர்ண வாத்ஸல்ய முடையவ ளல்லையோ என்கிறார். 'त्वं' (த்வம்)—'पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम। कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति ॥' (பாபாநாம்வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம| கார்யம் கருண மார்யேண நகஶ்சிந் நாபராத்யதி) என்கிற ஸ்வபாவமுடையவளான நீ. 'अंबुरुहवासिनी' (அம்புருஹ வாஸிநீ)—'तस्याः शिखायामध्ये' (தஸ்யாஃ சிகாயா மத்யே), 'य एषोऽन्तरादित्ये' (ய ஏஷோந் தராதித்யே) இத்யாதிகளில் சொல்வதுபோல் ஒரு ஸூர்ய னும், ஒரு அக்னியுமன்று உனக்கு வாஸ ஸ்தானம். 'பாவியேன் தோன்றிப் பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் நாவு மிரண்டுளவாயிற்று நாணிலியேனுக்கே' என்று ஸம்ஸர்க்க தோஷத்தைக் கொண்டு உன் பர்த் தாவை சங்கித்தவர்களும் உண்டு. அக்னி முதலியவை களின் சேர்க்கையினுல் திருவுள்ளத்தில் வெப்பம் தட்டி இருக்கும் என்று உன் பர்த்தா விஷயத்தில் சங்கிக்க இட

மூண்டு. ஆனால் கம்பீராம்பஸ் ஸம்பூதமாய், ஸௌகந்த்ய, ஸௌகுமார்ய, லாவண்ய, ஸௌரப்ய, சீதளத்வாதிகளுக்கு இருப்பிடமாய் இருக்கும் தாமரஸ புஷ்பமன்றோ உனக்கு வாஸஸ்தானம். '**पद्मेस्थितां**' (பத்மேஸ்திதாம்), '**पद्मवनालयां**' (பத்மவநாலயாம்), '**पद्मप्रिये**' (பத்மப்ரியே), '**पद्महस्ते**' (பத்மஹஸ்தே) என்றன்றோ ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. வாஸ ஸ்தானமாகிய தாமரைப் பூவினுடைய சீதளத்வாதிகள் உம்முடைய திருவுள்ளத்திலும் இருக்குமன்றோ என்று த்யோதிதமாயிற்று. '**किंचिदेतत्**' 'பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு' என்றிருக்கிற எம்பெருமான் விஷயத்தில் இப்பொழுது என்னால் ப்ரார்த்திக்கப்படும் கார்யம் அரவிந்த லோசந மநஃ காந்தையான உன் வால்லப்யாதிசயத்தால் மிகவும் ஸுகரம். '**आकर्णयिष्यति**' இத்யாதியால் அதை விவரித்தருளுகிறார். '**विबुधेश्वरः**' என்று பரத்வமும், '**तेप्रेयान्**' (தே ப்ரேயாந்) என்று மறுக்க வொண்ணாத புருஷகாரத்வமும் சொல்லப்பட்டது. '**असौ**' (அஸௌ) என்றது எம்பெருமானுடைய ஆபிமுக்யத்தைத் தாம் பெருமையால் அவரை விப்ரக்ருஷ்டராய் வைத்தருளிச் செய்தபடி. '**मदुक्ति**'—'**अस्मादृशामपकृतौ चिरदीक्षितानां**' (அஸ்மாத்ருசாமபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்) என்கிறபடியே அநாதி காலமாக ஆஜ்ஞாதிலங்கனத்தைப் பண்ணிப் போந்தபடியாலே அந்தத் திருவோலக்கத்தில் ப்ரவேசிக்கக்கூட யோக்யதை இல்லாத அடியேனுடைய வார்த்தையை, அதாவது திருவோலக்கத்தில் ப்ரவேசிக்க யோக்யதை இல்லாமையாலே ஸமீபத்தில் போய் நிற்கையும், அவன் அபிமுகத்தில் விண்ணப்பம் செய்கையும், எம்பெருமான் செவி தாழ்த்திக் கேட்கையும் மிகவும் அஸம்

பாவிதம் என்றபடி. 'पृथुकजल्पितवत्' (ப்ருதுக ஜல்பிதவத்)—வார்த்தை யறியாத முக்தனை புத்ரனுடைய மழலைச் சொற்களை அவை அஸம்பத்த ப்ரலாபமா யிருந்தாலும் பிதா போக்யமாகக் கேட்குமாப்போலே. அன்றிக்கே, 'पृथुकवदन शङ्खस्पर्शनीत्या' (ப்ருதுக வதந சங்கஸ்பர்ச நீத்யா) என்கிற விடத்திற் போல் 'ப்ருதுக' சப்தம் த்ருவனைச் சொல்லுகிறதாகவுமாம். இதனால் த்ருவனுக்குத் தன்னை ஸ்தோத்ரம் பண்ண சக்தியைத் தானே கொடுத்து அவன் ஸ்தோத்ரத்தையும் தானே கேட்டு உகந்தாப் போலே தம்மையும் அநுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்தாராயிற்று.

இப்படி இவர் ப்ரார்த்தித்ததால் உண்டான பிராட்டியின் ப்ரஸாத விசேஷத்தாலே ஸுப்ரஸந்நனை எம்பெருமான் இவருடைய ஸ்தோத்ரத்தை 'मनोरथपथदूरवर्तिनमिव' (மநோரத பத தூரவர்த்திநமிவ) என்கிறபடியே தனக்கும் பெறுப்பேறாக நினைத்து அங்கீகரித்தபடியை ப்ரத்யக்ஷ ரூபாபந்ந ஜ்ஞாநத்தினலே ஸாக்ஷாத்கரித்து 'வீற்றிருந்தேழுல' கிற்படியே தம்முடைய க்ருதார்த்ததையையும் எம்பெருமானுக்கு இது மிகவும் ப்ரேமாஸ்பதம் என்பதையும் அருளிச் செய்கிறார்—'திருமால்' என்றாரம்பித்து.

நேரிசை வெண்பா.

திருமா லடியவர்க்கு மெய்யனார் செய்ய
திருமாமகள் என்றுஞ் சேரும்—திருமார்பி
லிம்மணிக் கோவையுட னேற்கின்றா ரென்றனிம்
மும்மணிக் கோவை மொழி. (2)

## பதவுரை.

திருமால் - திரு என்று சொல்லப்படுகிற பிராட்டிக்கும் பெரியவன், அன்றிக்கே திருவினிடத்தில் வ்யாமோஹத்தை யுடையவன், அதுவுமன்றிக்கே திருவுக்கும் மாலை உண்டாக்குகிறவன், அடியவர்க்கு - தாஸர்களுக்கு, மெய்யனார் - ஸத்யனானவன், செய்ய - சிவந்த நிறமுள்ள, அல்லது ஆர்ஜவமுடைய, திருமாமகள் - லக்ஷ்மி என்று சொல்லப் படுகிற மஹாமஹிமையை யுடைய பெண், என்றும் - எப்பொழுதும், சேரும் - ஆச்ரயித்திருக்கிற, திருமார்பில் - சோபையோடு கூடிய வக்ஷஸ்தலத்தில், இ - இந்த, மணிக் கோவையுடன் - ரத்னஹாரங்களுடன், எந்தன் - என்னுடைய, இ - இந்த, மும்மணிக் கோவை மொழி - மும்மணிக்கோவை என்கிற ப்ரபந்தத்தையும், மொழி - மொழியப்பட்ட ப்ரபந்தம் என்றபடி; ஏற்கின்றார் - அங்கீகரிக்கின்றார்.

## வ்யாக்யாநம்.

திருமால் - 'திருவுக்கும் திருவாகிய செல்வா', '**कः श्रीः श्रियः**' (க ஸ்ரீః ஸ்ரியః), '**श्रियः श्रीश्च भवेदग्र्या**' (ஸ்ரியః ஸ்ரீஶ்ச பவேதக்ர்யா) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே லக்ஷ்மிக்கும் ஸ்ரீத்வத்தைக் கொடுக்கக் கூடிய நிருபாதிக மங்களகரமான ஸ்வரூபத்தையுடையவன். அன்றிக்கே லக்ஷ்மியையும் பிச்சேற்ற வல்ல திவ்ய ஸௌந்தர்ய முடையவன் என்றபடியாகவுமாம். 'அகலகில்லே னிறையும் என்றலர்மேல்மங்கை யுறைமார்ப'னல்லையோ அவன்? அகலகில்லே னிறையும் என்று - க்ஷண காலமும் இந்தத் திரு மார்பை விட்டுப் பிரிய சக்தியுள்ளவ ளல்லேன்

என்று சொல்லிக் கொண்டு என்றபடி. இது பிரிந்திருந்து சொல்லும் வார்த்தையல்ல. திருமார்பில் வஸித்துக் கொண்டிருக்கச் செய்தே பிரிவு வரில் செய்வதென் னென்று அஸ்தாந பய சங்கையாலே சொல்லும் வார்த்தை. இப்படி அவளைப் பிச்சேற்றும்படி செய்யு மவன் என்றதனால் ஸர்வ குணங்களுக்கும் நிதியான பிராட்டியும் பிச்சேறும்படியான ஸௌந்தர்யாதிசயத்தை யுடையவன் என்றபடி. 'यस्य सीता भवेत् भार्या यंच हृष्टा परिष्वजेत्। अतिजीवेत् स सर्वेषु लोकेष्वपि पुरन्दरात्॥' (யஸ்ய ஸீதா பவேத் பார்யா யஞ்ச ஹ்ருஷ்டா பரிஷ் வஜேத் | அதிஜீவேத் ஸ ஸர்வேஷு லோகேஷ்வபி புரந் தராத் ||) என்றும், 'अप्रमेयं हि ततेजः यस्य सा जनकात्मजा' (அப்ரமேயம் ஹி தத்தேஜঃ யஸ்ய ஸா ஜநகாத்மஜா) என்றும் சத்ருக்கள் கூட ஸ்ரிய: பதித்வத்தாலே யன்றோ பரத்வத்தை நிரூபித்தது. 'लक्ष्मीसहायित यौवनश्रीः' (லக்ஷ்மீ ஸஹாயித யௌவந ஸ்ரீ:) என்றிறே அபியுக்தரும் அருளி யிட்டது. 'மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்' என்றிறே கூடஸ்தரின் வார்த்தை. ஆக இத்தால் பரத்வம் சொன்னபடி.

அடியவர்க்கு மெய்யனார்—இது ஸௌலப்யத்தைக் காட்டுகிறது. அன்றிக்கே, திருவினிடத்தில் மாலையுடைய வனா யிருந்தாலும் அடியவர்க்கு மெய்யன், அதாவது பிராட்டியிடத்தில் வ்யாமுக்தனா யிருக்கச்செய்தேயும் தன் மெய்யான அன்பை தாஸர்களிடத்திலே பாராட்டுபவன் என்றபடி. 'त्वयि किंचित् समापन्ने किंकार्यं सीतया मम' (த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம்கார்யம் ஸீதயா மம) என் பதன்றோ அவன்படி. அதாவது இன்று ஆச்ரயித்ததொரு

திர்யக்குக்கு ஒரு வாட்டம் வரில் நித்யாச்ரிதையான பிராட்டியாலும் ஒரு கார்யமில்லை. அன்றீன்ற கன்றின் பக்கல் வாத்ஸல்யாதிசயத்தாலே முன்னணைக் கன்றைக் கொம்பிலும் குளம்பிலும் கொள்ளுமாப்போலே இருக்கிற அவனுடைய ஆச்ரித வத்ஸலத்வம் சொல்லிற்றாயிற்று. அன்றிக்கே, 'பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு' என்கிறபடியே திருவினிடத்தில் வ்யாமுக்தனாகையாலே அடியவர்க்கு மெய்யனார் என்றாகவுமாம். பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு ஆச்ரயித்தவர்களுக்கு ஸத்யமானவன் என்றபடி. **'पितेव त्वत्प्रेयान्'** (பிதேவ த்வத் ப்ரேயாந்) இத்யாதி அநுஸந்தேயம். திருமால்—திருவினிடத்தில் வ்யாமோஹமே ஒரு வடிவு கொண்டாப் போன்றவன். 'அல்லிமலர் மகள் போக மயக்குகளாகியு நிற்கு மம்மான்' என்றாரிறே.

செய்ய—ஆச்ரிதர்களிடத்தில் தோஷ தர்சநம் பண்ணித் தண்டதரனாகையாலே நிக்ரஹ ஸங்கல்பத்தைச் செய்துகொண்டு நிற்கிற பெருமாளைப் போலில்லாமல், **'अज्ञातनिग्रहां'** (அஜ்ஞாத நிக்ரஹாம்) என்றிருக்குமவள். **'नकश्चिन्नापराध्यति'** (நகஶ்சிந் நாபராத்யதி) என்று எல்லாரிடத்திலும் ஸமமான அபிப்ராயத்தை யுடையவள் என்றாகவுமாம். அதாவது ராஜாவின் உத்திரவின்படி நடந்த ராக்ஷஸிகள் அபராதிகளென்னில் ஸுக்ரீவன் உத்திரவுப்படி நடந்த நீ குற்றவாளி யல்லவோ. எல்லாருடைய தோஷத்தையும் போக்குகிறவராகிய பெருமாளும் 'அகலகில்லே னிறையும்' என்றிருக்கும் என்னைப் பத்து மாதம் விட்டுப் பிரிந்தமையால் குற்றவாளியன்றோ? அத்யந்த பாரதந்த்ரதையாலே அவர் கைபார்த்திருக்க வேண்டி

யிருக்க இதை எடுத்துச் சொல்லுகிற நான் குற்றவாளி யில்லையோ? என்று எல்லாரிடத்திலும் ஸமமான அபிப்ரா யத்தைக் காட்டினளிறே பிராட்டி. அன்றிக்கே சிவந்த நிறமுள்ள என்று **'हिरण्यवर्णा'** (ஹிரண்ய வர்ணாம்) என் கிற ஶ்ருத்யர்த்தத்தை விவக்ஷித்தபடி யாகவுமாம். இத் தால் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்துக்கு சோபாதிசயத்தை யுண்டுபண்ணிக்கொண்டு இருக்கு மவள் என்றதாயிற்று. 'வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை', **'धत्ते शोभां हरिमरतके'** (தத்தே ஶோபாம் ஹரிமரதகே) என்று சொல்லுகிறபடியே பரஸ் பரம் சோபாவஹமாய்ச் சேர்ந்திருக்கிறபடி யாகவுமாம். இத்தால் இவ்விருவர்களுடைய நிறமும் இவர்களுடைய கண்ணில் காணலாம் என்பது த்யோதிதம். அஞ்ஜந வண் ணனை அடுத்தடுத்து அநுபவிப்பதனால் அவள் மைய கண்ணா ளாயினள். செய்யாளைச் சற்றேனும் சோராமல் பார்ப்பதனால் அவன் செந்தாமரைக் கண்ணனானன்.

திருமாமகள்—திரு என்கிற சப்தத்துக்கு வாச்யமா யிருக்கிற மஹிமையை யுடைய பெரிய பிராட்டியார் என்றபடி. எம்பெருமானுக்கு நாராயண சப்தம் போலே இவளுக்கு ஸ்ரீசப்தம் அநிதர ஸாதாரணமான மஹிமை யைத் தெரிவிக்கிறது என்று திருவுள்ளம். **'श्रीरित्येव च नाम ते'** (ஸ்ரீரித்யேவ ச நாம தே), **'श्रीरसि यतः'** (ஸ்ரீரஸி யதஃ) இத்யாதி அநுஸந்தேயம்.

**என்றும் சேரும் திருமார்பில்** - இந்தத் திருமார்பி னுடைய போக்யதா ப்ரகர்ஷத்தினாலே தனக்கு வாஸ ஸ்தானமாகிய தாமரைப் புஷ்பத்திலும் அடிபொருந்தாத

படி யாயிற்று. பிராட்டி பெருமாள் கைப்பிடித்த பிறகு ஸ்ரீஜநகராஜன் திருமாளிகையையே நினைத்தாள் இல்லை.

இம்மணிக் கோவை—என்பதனால் இவருக்கு திவ்ய மங்கள விக்ரஹம் ப்ரத்யக்ஷிதமானபடி தோற்றுகிறது.

உடனேற்கின்றார்—திருவுடன் வந்த செழுமணியா கையாலே ஸ்ரீ கௌஸ்துபத்தில் பண்ணும் ஆதரத்தை அவள் பரிக்ரஹமான என்னிடத்திலும், அவள் அநுக்ர ஹத்தினால் உண்டான இப் ப்ரபந்தத்திலும் பண்ணி அதற்கு ஸமமாக இதை அங்கீகரித்தருளினார் என்ற தாயிற்று. ஸ்ரீகௌஸ்துபத்தைத் தனக்கு அஸாதாரணமா கத் திருவுள்ளம் பற்றினாற்போலே ஸ்ரீதெய்வநாயகன் இவருடைய இப் ப்ரபந்தத்தையும் அஸாதாரணமாகத் திருவுள்ளம் பற்றினபடி த்யோதிதமாயிற்று. 'வைகுந்தனை கப் புகழ வண்டீங்கவி' என்னுமாப்போலே தன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹம் இத்தால் புகர் பெற்றதாக அவன் நினைத்தபடி தெரிவிக்கப் பட்டதாகிறது.

எந்தன்—சீர்கண்டு கொண்டு திரிந்த நல்லீன் கவி நேர்பட யான் சொல்லும் நீர்மையில்லாத என்னுடைய என்றபடி. 'மும்மணிக்கோவை' யாவது ஆசிரியம், வெண்பா, கலித்துறை, என்கிற மூன்று விதங்களான வ்ருத் தங்களை வைத்து முறையாக அந்தாதியாகப் பாடப்பட்ட முப்பது பாட்டுக்கள் அடங்கிய ப்ரபந்தம். அன்றிக்கே மந்த்ர ரத்னம், புராண ரத்னம், ஸ்தோத்ர ரத்னம் ஆகிய மூன்று ரத்னங்களின் தாத்பர்யத்தைப் ப்ரகாசம் செய் கிறபடியினால் மூன்று ரத்னங்கள் அமைந்த ஒரு ஹாரம் போன்ற தம்முடைய ஸ்ரீஸூக்தியை என்றாகவுமாம். ஒரு மணியை மிகவும் ஆதரத்துடன் தரித்துக் கொண்டிருப்

பவருக்கு அதைப்போல் அநர்க்கமாய் மூன்று ரத்னங்கள் அமைந்த ஹாரம் கிடைத்தால் ஆய்சர்யப்படுவது ஸஹஜமல்லவோ.

'திருமார்பில் உடன் ஏற்கின்றூர்'—என்பதனுல் நாய்ச்சியார் சூடிக் கொடுத்த மாலையை **'चूडापदेन परिगृह्य तवोत्तरीयं मालामपि त्वदळकैरधिवास्यदत्तां'** (சூடா பதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம் மாலாமபி த்வதளகை ரதிவாஸ்ய தத்தாம்) என்கிறபடியே தாம் மாத்திரம் சிரஸா வஹித்து ஆனந்தித்ததைப் போலில்லாமல் பிராட்டியும் தானுமாய்ச் சேர்ந்தநுபவிக்கும் ஏற்றம் த்யோதிதமாயிற்று. இத்தால் பெருமாள் தனியே இருந்து திருச்செவி சாற்றியருளின ஸ்ரீராமாயணத்தைக் காட்டிலும் 'மைய கண்ணுள் மலர்மேல் உறைவாள் உறைமார்பினன் செய்ய கோலத் தடங்கண்ணன் விண்ணுளார் பெருமான் தன்னை' என்கிறபடியே இருவருமான சேர்த்தியில் அங்கீகரிக்கப்பட்ட ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி போல இதுவும் திவ்ய தம்பதிகளுக்கு மிகவும் ஆதரணீயம் என்றதாயிற்று. இத்தால் மிகவும் உத்க்ருஷ்டமான வஸ்துவைக் கண்டால் ரஸிகராயிருப்பார் முதலில் தங்களுடைய அபிமத விஷயத்துக்கு அதைக் காட்டுமாப்போல் இவருடைய ப்ரபந்தத்தைப் பிராட்டியின் திருக்கோயிலான தம் திருமார்பி லணிந்தபடியினுல் மிகவும் ஆதரவிஷயம் த்யோதிதமாயிற்று. (2)

அவதாரிகை.

இப்படிப் பிராட்டி புருஷகாரமாய் ஆச்ரயித்ததனுல் ஸுப்ரஸந்நனுன ஸ்ரீதெய்வநாயகன் தம்முடைய ஸ்வரூப

ரூப குண விபூத்யாதிகளை யதாவத்தாகப் ப்ரகாசிப்பித்தருள அதை ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகனுக்குத் தம்மிடத்தில் உண்டான வாத்ஸல்யாதிசயத்தையும் பார்த்து, கௌஸ்துபம், லக்ஷ்மி முதலியவைகளோடு சேர்ந்த அஸாதாரணமான நிரதிசய ஔஜ்வல்ய, ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்ய, யௌவநாத்யநந்த குணங்களுக்கு இருப்பிடமான திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு 'भूषायुधैरधिगतं निजकान्तिहेतोः भुक्तंप्रियाभिः अनिमेषविलोचनाभिः। प्रत्यंग-पूर्णसुषुमासुभगं वपुस्ते दृष्ट्वा दृशौ विबुधनाथ न तृप्यतो मे॥' (பூஷாயுதை ரதிகதம் நிஜகாந்தி ஹேதோர் புக்தம் ப்ரியாபிঃ அநிமேஷ விலோசநாபிঃ। ப்ரத்யங்க பூர்ண ஸுஷுமா ஸுபகம் வபுஸ்தே த்ருஷ்ட்வா த்ருஶௌ விபுதநாத ந த்ருப்யதோமே ||) என்கிறபடியே தமக்குப் பர்யாப்தி பிறவாமல் நிரந்தரமாக வநுபவிக்க வேணுமென்கிற அபிநிவேசாதிசயத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

'पाञ्चाल्याः पद्मपत्राक्ष्याः स्नायन्त्या जघनं घनं। याः स्त्रियो दृष्टवत्यस्ताः पुंभावं मनसा ययुः॥' (பாஞ்சால்யாঃ பத்மபத்ராக்ஷ்யாঃ ஸ்நாயந்த்யாঃ ஜகநம் கநம்| யாஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தாঃ பும்பாவம் மநஸா யயுঃ||) என்கிறபடியே ஓர் அபலையின் வடிவு தன்னேடொத்த ஸ்த்ரீகளையும் ஆணுடை யுடுக்கும்படி செய்ததென்ருல் புருஷோத்தமனுடைய நிரதிசய லாவண்யம் பக்திமான்களைப் பெண்ணுடை யுடுக்கும்படி செய்வது ஓர் ஆச்சர்யமன்று. 'एकीभवद्भिः अयुतैरपि मन्मथानां यत्कान्तिसिन्धु पृषता-नुकृतिर्नशक्या। उद्वीक्ष्य तं यदुपतिं यमिनोपी नूनं स्त्रीभावमेव मनसा बिभरांबभूवुः॥' (ஏகீபவத்பி ரயுதைரபி மந்மதாநாம்

யத்காந்தி ஸிந்து.ப்ருஷதாநுக்ருதிர் நஸக்யா | உத்வீக்ஷ்ய தம் யதுபதிம் யமிநோபி நூநம் ஸ்த்ரீ பாவமேவ மநஸா பிப ராம் பபூவு: ||) என்று இவர்தாமே அருளிச் செய்தார். 'यमिनोऽपि' (யமிநோபி) என்றது ஸ்ரீமத் பராங்குச பரகாலாதிகளை.

சிலர், ஆழ்வார்கள் தங்களிடத்தில் இல்லாத ஸ்த்ரீ பாவத்தை ஆரோபித்தோ ப்ரமித்தோ சொல்லியிருக்க வேண்டும். ஆரோபமாவது இல்லையென்று தெரிந்திருக்கச் செய்தே இருக்கிறதாகப் பாவித்துக்கொண்டு சொல்வது. ப்ரமமாவது இல்லாததை இருப்பதாகத் தெரிந்து கொள்வது. ஆகையால் ஸ்த்ரீ பாவத்தை யடைந்து அருளிச் செய்திருப்பதெல்லாம் ஆஹார்யஜ்ஞாநத்தினுலாவது ப்ரமத்தினுலாவது உண்டாயிருக்க வேண்டுமாகையாலே அவை ப்ரமாணமாக மாட்டா வென்று நினைக்கிறுர்கள்.

இது மிகவும் அயுக்தமானது. எங்ஙனே யென்னில், திருவாய் மொழியின் அவதாரிகையில் 'பரமபுருஷனை உள்ளபடியே ஆழ்வார் தம்முடைய திருவுள்ளத்தாலேயநுபவித்து, அவ்வநுபவ ஜநிதமான நிரவதிக ப்ரீதியாலே அவனை யநுபவித்த படியே பேசுகிறுர்' என்றும், 'அஜ்ஞாநகந்தமில்லாதபடி தன்னை உள்ளபடியே அறிவித்து' என்றும், 'பொய்யில் பாடல்' என்கிற விடத்தில்' இப்படி எம்பெருமான் நிரவதிகமான அபிநிவேசத்தோடே கூட என்னோடுகூடக் கலந்து பரிமாறின பரிமாற்ற மித்தனையும் மெய்யென்கிறுர்' என்றும் திருக்குருகைப்பிரான் பிள்ளானல் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆசார்யனும் ஸ்ரீப்ரதான சதகத்தில் 'தொண்டர்க் கமுதுண்ணலாய்ப் பொய்யில் பாடலான ஆழ்வார்கள் அருளிச்செயல் ப்ரதா

னம்' என்றும், ஸ்ரீத்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் **'तत्रासौ सत्त्वसीम्नः शठमथनमुनेः संहिता सार्वभौमी'** (தத்ராஸௌ ஸத்வஸீம்நஃ ஶடமதநமுநேஃ ஸம்ஹிதா ஸார்வ பௌமீ) என்றும் அருளிச் செய்தார். இப்படிப் ப்ரமாண தமமாகப் பூர்வாசார்யர்களால் பரிக்ரஹிக்கப் பட்டதை அப்ரமாண மென்பது அதிஸாஹஸமே யாகும். மேலும், தாம் பகவானை யநுபவிப்பதில் தமக்குண்டான அபிநிவேசத்தினுல் சொல்லுகிற பாசுரங்களை விரஹிணியான நாயிகா வார்த்தையால் அந்யாபதேஶத் தாலே பேசுகிருர் என்று அங்கங்கே ஆருயிரப் படியில் அவதாரிகை அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு சமத்கார விசேஷத்தை உண்டாக்குவதற்காகத் தமிழ் பாஷையில் அனேக விதமாகத் துறைகளும், அவற் றுக்கு லக்ஷணங்களும் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. அந்தத் துறைகள் இவற்றிற்கு அநுகுணமாகவும் இருக் கின்றன. **'भक्तिः शृङ्गारवृत्त्या परिणमति मुनेः भावबन्धप्रथिम्ना'** (பக்திஃ ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி முநேஃ பாவபந்த ப்ரதிம்நா) இத்யாதி ஸமாதானமும் அருளிச்செய்யப்பட் டிருக்கிறது. **निगीर्याध्यवसानं** (நிகீர்யாத்யவஸாநம்), **रूपका-तिशयोक्ति** (ரூபகாதிசயோக்தி) முதலிய அலங்காரங்களும் அப்ரஸ்துத ப்ரசம்ஸாதிகளும் பரிக்ரஹிக்கப் பட்டிருக்கின் றன. ஶ்ருதியிலும் **'द्वासुपर्णा'** (த்வாஸுபர்ணு) இத்யாதி வாக்யத்திஞல் ஜீவாத்ம பரமாத்மாக்களைப் பக்ஷிகளாகவும், சரீரத்தை வ்ருக்ஷமாகவும் நிரூபித்திருக்கிறது. **'अजामेकां'** (அஜாமேகாம்) இத்யாதி வாக்யத்திஞல் அப்ரஸ்துத ப்ர சம்ஸையும் செய்யப்பட்டிருக்கிறது. **'आत्मानं रथिनं विद्धि'** (ஆத்மாநம் ரதிநம் வித்தி) இத்யாதியிலும் ரூபணம் செய்

யப்பட்டிருக்கிறது. இவைகளைப் ப்ரமமென்று சொல்ல முடியாதது போல ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையும் ப்ரமமென்று கூறமுடியாது என்று ஸஹ்ருதயர் தெளியக் கடவது. சில விடங்களில் பக்தி ப்ரகர்ஷத்தினால் நாயிகா பாவத்தை அவலம்பித்து நாயகியின் வார்த்தையாலே தம்முடைய அநுபவத்தை யருளிச் செய்திருக்கிறார் என்பதும் ஆறாயிரப்படியில் ஆங்காங்கு ஸ்பஷ்டமாய் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ஸ்த்ரீபாவாதிகளைக் கொண்டு பேசியிருப்பதை மாத்திரம் கொண்டு அப்ராமாண்யம் கல்பிக்கப் புக்கால் ஆசார்யாபராதத்திலேயே பர்யவஸிக்கும்.

இப்பாட்டு பக்தி யென்றும், 'ஆர்க்கும் கருணை' யென்கிற பாட்டு பரபக்தி என்றும், 'வெற்புடன் ஒன்றி' என்கிற பாட்டு பரம பக்தி என்றும் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்வார்கள். இவற்றிற்கு நடுவிலுள்ள பாட்டுக்கள் பக்திக்குக் காரணமான பரஜ்ஞானத்தைச் சொல்லுகின்றன. இங்கு பரபக்தி ஸ்தாநத்தில் ப்ரபத்தி விஹிதையாகையாலே உபாஸகனுக்குப் பரபக்திக்குமேல் வரும் அவஸ்தைகள் பரபக்தியின் கார்யமாக ஸ்வயமே வருகிறுப்போலே ப்ரபந்நனுக்கும் ப்ரபத்தி கார்யமாக மேல் பல பரம்பரைகள் வருகின்றன என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் 'अनुग्रहविशेषेण केनचित् परमात्मनः। कुरुकाधीशनाथाद्याः प्रागप्यन्वभवन् प्रभुम् ॥' (அநுக்ரஹவிசேஷேண கேநசித் பரமாத்மந꞉ | குருகாதீச நாதாத்யா꞉ ப்ராகப் யந்வபவந் ப்ரபும் ||) என்று நிரூபித்திருக்கிற க்ரமம் ஆழ்வார் ப்ரப்ருதிகளுக்குப்போலத் தமக்கு உண்

டாயிற்று என்று இப் ப்ரபந்தத்தில் அருளிச் செய்யப் படுகிறது.

இப் ப்ரபந்தத்தில் 'அருள் தரும்' என்கிற முதல் பாட்டில் பிராட்டியைப் புருஷகாரமாகக் கொண்டு பகவானிடத்தில் ப்ரபத்தி செய்தருளினர். அதனல் உண்டான பரஜ்ஞாநத்தை இரண்டாவது பாட்டில் அருளிச் செய்தார். 'மொழிவார்' என்கிற மூன்ருவது பாட்டில் பரமபக்தியை நிரூபித்தருளினர். இந்தப் பரம பக்தியும் பரபக்தி ஸ்தானத்தில் நின்று மேல் விசததரமான ஸாக்ஷாத் காரமுண்டானமையை 'மழையில் எழுந்த' என்கிற பாட்டில் அருளிச் செய்தார். அதில் தமக்குண் டான வ்யவஸாயத்தை 'ஆரணங்கள்' என்று தொடங்கும் பாட்டில் அநுபவித்தார். ஆகையால் இதுவும் பரஜ்ஞாநத் திற்குள்ளடங்கி நின்றதாயிற்று. இத்தால் உண்டான க்ஷண கால விச்லேஷத்தையும் பொறுக்க முடியாத தீவ்ர தமமான அபிநிவேசமாகிற பரமபக்தியை 'வெற்புடன்' இத்யாதியால் அருளிச் செய்தார். இப்படிப்பட்ட தீவ்ர அபிநிவேசத்தினல் ஸந்துஷ்டனை பகவான் இவருடைய அபிநிவேசம் தீரும்படி தோன்றியருளி இவரோடு செய் தருளின சில உக்தி ப்ரத்யுக்திகளைப் 'பெற்றனே' இத்யாதி யால் அருளிச்செய்தார். இந்தக் க்ரமத்தை விஸ்தாரமாக மேல் பாட்டுக்களின் அவதாரிகையிலும் வ்யாக்யா னத்திலும் கண்டு கொள்வது.

இப்படி இவருக்குப் பரம பக்தி பரபக்தி ஸ்தானத்தில் நின்று மறுபடியும் பரம பக்தி உண்டாகும் க்ரமத்தைப் பராமர்சித்தால் **'उपर्युपर्यब्जभुवोऽपि पूरुषान् प्रकल्प्य ते ये शतमित्यनुक्रमात्।'** (உபர்யுபர் யப்ஜ புவோபி பூருஷாந்

ப்ரகல்ப்ய தே யே சத மித்யநுக்ரமாத்) என்கிறபடியே சதுர்முகனுடைய ஆனந்த பர்யந்தமான ஆனந்தத்தை மறுபடியும் புருஷனுடைய ஆனந்தமாக வைத்து மேலே புநஃ புநஃ கணக்கிட்டுக் கணக்கிட்டுப் பகவானுடைய ஆனந்தத்தின் அத்யந்த நிரதிசயத்வம் ப்ரகாசித மாகிறுப் போலே இவருடைய பக்தி அத்யந்த நிரதிசய தசையை அடைந்திருக்கிற தென்பது ஸூசிப்பிக்கப் படுகிறது. இப்படி இவருக்கு அபிநிவேசாதிசயம் மென்மேலும் விஞ்சியிருக்கு மென்பது அந்தந்தப் பாட்டிலேயே தோன்றுகிறது. அதில் பரமபக்தியை நிரூபிக்கு மிடங்களில் 'பக்திஃ ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி' என்கிற ந்யாயத்தை யநுஸரித்து இவருடைய பக்தி ச்ருங்காரமாகப் பரிண மிக்க, அதனுல் இவர் நாயிகாபாவத்தை யடைந்து அந்யாபதேசத்தாலே பேசுகிறுர்.

கட்டளைக் கலித்துறை.

மொழிவார் மொழிவன மும்மறை யாக மயிந்தையில்வந்
திழிவா ரிழிகவென் றின்னமு தக்கட லாகின்ற [மேல்
விழிவா ரருள்மெய்யர் மெல்லடி வேண்டிய மெல்லியள்
பொழிவா ரநங்கர்தம் பூங்கரும் புந்திய பூமழையே. (3)

பதவுரை.

மொழிவார் - சொல்லக்கூடியவர்களால், மொழி வன - சொல்லக் கூடியவைகளான, மும்மறை - ருக், யஜுஸ், ஸாமம் என்கிற மூன்று வேதங்களுடைய, ஆகம் - தாத்பர்யார்த்த மாகிற, அகம் என்பது ஆகம் என்று நீண்டு கிடக்கிறது; இது 'மெய்யர்' என்பதோ

டந்வயிக்கிறது; 'மும்மறையாகும்' என்றும் பாடாந்தரம்; அப்பொழுது பேசுமவர்கள் பேசும் வார்த்தையெல்லாம் த்ரிவேதங்களாக நிற்கிற என்று பொருள். அது 'அயிந்தை' என்பதோ டந்வயிக்கிறது. அயிந்தையில் - திருவஹீந்திரபுரத்தில், வந்து - ஆவிர்பவித்து, இழிவார் இழிக - ஆச்ரயிக்க வேண்டுமென்கிற ஆசையுடையவர்கள் ஆச்ரயியுங்கள், என்று - என்று ஸங்கல்பித்துக்கொண்டு, இன்னமுதக் கடலாகி நின்ற - போக்யதமமான அம்ருதஸாகரமாகி எப்பொழுதும் ஸ்திரப் ப்ரதிஷ்டிதராய் நின்ற, விழிவார் அருள் - கடாக்ஷங்களினால் ப்ரவஹிக்கும் க்ருபையையுடைய, மெய்யர் - அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகனுடைய, மெல்லடி - ம்ருதுவான திருவடிகளை, வேண்டிய - விரும்பின, மெல்லியள்மேல் - ஸ்த்ரீயின் மேல், அநங்கர் - மன்மதன், தம் - தனக்கு அஸாதாரணமான, பூங்கரும்பு - அழகான கரும்பாகிய தநுஸ்ஸினால், உந்திய - தள்ளப்பட்ட, பூமழை - புஷ்பங்களாகிற பாண வர்ஷங்களை, பொழிவார் - வர்ஷிப்பார்.

வ்யாக்யாநம்.

மொழிவார் மொழிவன மும்மறை ஆகும் - த்ரைவர்ணிகர்கள் மாத்திரம் உச்சரிக்கக் கூடியவைகளான ஸகல வேதங்களுக்கும் தாத்பர்ய பர்யவஸாந பூமியான என்றபடி. இதனால் பரத்வம் சொன்னபடி. 'வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:,' 'பரவு மறைகளெல்லாம் பதஞ்சேர்ந்தோன்ற நின்றபிரான்' முதலியவை இங்கு அநுஸந்தேயம். அன்றிக்கே, 'ஆகும்' என்கிற பாடாந்தரத்தில் 'क्रीडार्थ

मपि यत् ब्रूयुः सधर्मः परमो मतः' (க்ரீடார்த்தமபி யத்ப்ரூயு: ஸதர்ம: பரமோ மத:) முதலியவற்றின்படியே இவ்வூரி லுள்ளவர் சொல்லுவ தெல்லாம் வேதம்போல ஆதரணீய மாய் இருக்கும் என்றபடி. 'சொல்லுமவிடு சுருதியாம்' என்பதும் இவ்வூரி லுள்ளவரையே ப்ரதானமாகக் குறிக் கிற தென்று இவர் திருவுள்ளம் என்பது இத்தால் த்யோ திதமாகிறது. அன்றிக்கே 'மொழிவன' என்று மனுஷ்யர் களை மாத்திரம் நிர்தேசிக்காமல் பொதுவில் அருளிச்செய் திருப்பதனால் இவ்வூரிலுள்ள கிளி முதலிய பக்ஷிவிசேஷங்க ளெல்லாம் வேதங்களையே உச்சரிக்கும்போலே காணும். 'காலை யெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல் மேன்மை கொலோ, சோலை மலைப் பெருமான் துவராபதி எம்பெருமான் ஆலினிலைப் பெருமான் அவன் வார்த்தை யுரைக்கின்றதே', 'கூட்டி லிருந்த கிளி யெப்பொழுதும் கோவிந்தா கோவிந்தா வென் றழைக்கும்', 'मुनिपरिषदि गीतं गौतमी रक्षणं ते मुहुरनुकलयन्तोमञ्जुवाचः शकुन्ताः। उषसि निजकुलायात् उत्थिता दण्डकेषु स्वयमपि पदरक्षे स्वैरमाम्रेडयन्ति॥' (முநி பரிஷதி கீதம் கௌதமீ ரக்ஷணம் தே முஹுரநுகலயந்தோ மஞ்ஜுவாச: சகுந்தா:। உஷஸி நிஜகுலாயாத் உத்திதா தண்டகேஷு ஸ்வயமபி பதரக்ஷே ஸ்வைர மாம்ரேடயந்தி॥) முதலியவை கள் இங்கு அநுஸந்தேயம். 'अजातजनसंबाधे हरेरभिमतास्पदे। अहीन्द्रनगरे वस्तुं आकाङ्क्षीत् वत्सरान् बहून्॥' (அஜாத ஜநஸம்பாதே ஹரே ரபிமதாஸ்பதே। அஹீந்த்ர நகரே வஸ்தும் ஆகாங்க்ஷீத் வத்ஸராந் பஹூந்॥) என்கிற படியே மஹா ப்ரபாவசாலியான இவ்வாசார்யன் இருந்த இவ்வூரிலுள்ள பக்ஷிகளும், ஆழ்வார் அவதரித்த தேசத்தில்

ஊரு நாடு முலகமும் தன்னைப்போல் அவனுடைய பேருந் தார்களுமே பிதற்றக் கற்றனபோல் வேதாந்தங்களையும், பகவந் நாமங்களையுமே சொல்லி உத்கோஷிக்கின்றன வென்று தாத்பர்யமாகவுமாம். இப்படி ஸர்வோத்க்ருஷ்ட மாய், வேதத்தினுலேயே அறியப்படக் கூடியதாய் 'आअम मेत्तपमाणो' (ஆகம மாத்ர ப்ரமாண:) என்கிறபடியே ஓலைப் புறத்திலேயே கேட்டுப் போகும்படியான வஸ்து என்றபடி.

இப்படிப் பரத்வத்தை நிரூபித்து, மேலே 'உபநிஷ தர்த்த முலூகலே நிபத்தம்' என்கிறபடியே விளங்கும் ஸௌலப்யத்தை நிரூபித் தருளுகிறார், 'அயிந்தையில் வந்து' என்று. 'सर्वसमाश्रयणीयत्वाय भूमावनतीर्यावतीर्य' (ஸர்வ ஸமாச்ரயணீயத்வாய பூமா வவதீர்யாவதீர்ய) என்று கொண்டாடப்பட்ட விபவாவதாரமும் காலத்தி னால் பிற்பட்டவருக்கு உதவாமையை நினைத்துக் கால தேச விப்ரகர்ஷ மில்லாமல் அர்ச்சாவதாரங் கொண்டி ருக்கை பூமியி லுள் ளா ரும் பிற்பட்டுள்ளாருமாக எல்லாரும் ஆச்ரயிக்கவேண்டும் என்கிற திருவுள்ளத்தி னாலே என்றபடி. அயிந்தையில் வந்து - பகவானுடைய இத்தனை ஸௌலப்யமும் ஸபலமாவது இந்த க்ஷேத்திரத் தின் மஹிமையாலேயே யாகையால் 'கண்ண னடி யிணை யெமக்குக் காட்டும் வெற்பு', 'ஸ்வபகம் சித்ர கூடோஸௌ' என்கிறபடியே தமக்கு நேர்ந்த உபகா ராதிசயத்திற்கு ஸ்துதி பண்ணினபடி. அன்றிக்கே, 'प्रसीदन्तु भवन्तो मे ह्रीरेषा हि ममातुला। यदीदृशैरहं विप्रै रुपस्थेयैः उपस्थितः॥' (ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீ ரேஷா ஹி மமாதுலா| யதீத்ருசை ரஹம் விப்ரை: உபஸ்

தேயை ருபஸ்திதஃ||) என்று ஒரு ஸமயத்தில் ஆச்ரிதர்கள் தன்னைத் தேடி வருவதைப் பற்றித் தான் லஜ்ஜிக்கும்படி நேர்ந்ததைத் திருவுள்ளம்பற்றி, இனி ஸாவதானமாயிருக்க வேண்டும் என்று இவருக்காகத் தான் முன்னாலேயே இந்த க்ஷேத்ரத்தை நாடி வந்திருக்கிறான் என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே, பரமபதநாதன், க்ஷீராப்திநாதன் என்னு மிவர்களைப்போல் ஆச்ரிதர்கள் தானிருக்கு மிடம் தேடி வருவதன்றிக்கே அவர்கள் இருந்த இடத்தைத் தேடித் தான் வந்து என்றாகவுமாம். அன்றிக்கே, 'அயிந்தை யில் வந்து இழிவார் இழிக' என்று அந்வயிக்கவுமாம். அப்பொழுது பரமபதத்திற் போல ஸௌலப்யம் குமரி ருந்து போகாதபடி இருட்டறையில் விளக்கேற்றினது போல இந்த க்ஷேத்ர விசேஷத்தில் ஸர்வ ஸுலபனாகத் தான் வந்திருந்து ஸாந்நித்யம் பண்ணுகையாலே தன்னை எல்லோரும் வந்து ஆச்ரயிக்கட்டும் என்று திருவுள்ளம் பற்றித் தன்படிகளை யெல்லாம் காட்டிக்கொண்டு நின்றான் என்றபடி. என்று - என்று தெரிவித்துக்கொண்டு.

இன்னமுதக் கடலாகி நின்ற— 'பயில வினிய நம் பாற்கடல் சேர்ந்த பரமன்' என்கிறபடியே அநுபவிக்க வநுபவிக்க போக்யதை விஞ்சிவாராநிற்கிற அம்ருத ஸமுத்திரமாய் நின்ற ஆராவமு தென்றார் ஆழ்வார். அது போதாது என்று திருவுள்ளம்பற்றி இவர் 'இன்ன முதக் கடலாகி' என்றருளிச் செய்தார். அநுபவிக்க வநுபவிக்கப் போது மென்கிற த்ருப்தி பெறுமையை யும் போக்யதையையும் மாத்திரம் திருவுள்ளத்தில் கொண்டார் அவர். இவரோ வெனில் அநுபவிக்க வநு பவிக்க ருசி அதிகமாக வளரும்படியையும் அப்படி ருசி

யுள்ள வஸ்துக்கள் கால தத்வமுள்ள வரையில் அபரிச்சின்னமாய் இருக்கும் படியையும் திருவுள்ளம் பற்றினார். இதனால் தேவதைகளுக்கு போக்யமான கேவல அம்ருதத்தைவிட இதன் மேன்மை காட்டப்பட்ட தாகிறது. அன்றிக்கே, 'அயிந்தையில் வந்து இன்னமுதக் கடலாகி' என்று அந்வயிக்கவுமாம். ஸ்ரீ வைகுண்டத்தில் ஸௌலப்யம் ப்ரகாசிக்க இடம் இல்லாமல் பரத்வம் மாத்திரம் தோன்றும்படி நிற்கையால் அது அமுதக் கடலாயிற்று. இந்த திவ்ய தேசத்திற்கு வந்த பிறகு ஸௌலப்யமும் பரத்வமும் சேர்ந்து ப்ரகாசிக்கிறபடியால் 'இன்னமுதக் கட' லானார் என்று திருவுள்ளம். அதுவுமன்றிக்கே, 'நின்ற' என்பது 'விழி' என்பதோடு அந்வயிக்கிற தாகவுமாம். அப்போது **'आलक्ष्य सत्वं अतिवेलदयोत्तरङ्गं अभ्यर्थिनां अभिमतप्रतिपादनार्हम्। स्निग्धायतं प्रथिमशालि सुपर्वनाथ दुग्धांबुधेः अनुकरोति विलोचनं ते ॥'** (ஆலக்ஷ்ய ஸத்வம் அதிவேல தயோத்தரங்கம் அப்யர்த்திநாம் அபிமத ப்ரதிபாதநார்ஹம் | ஸ்நிக்தாயதம் ப்ரதிமசாலி ஸுபர்வநாத துக்தாம்புதேः அநுகரோதி விலோசநம் தே ||) என்றிவர்தாமே ஸ்ரீ தெய்வநாயகனை யநுபவித் திருக்கிறபடியே, போக்யதையினாலும், தாபத்தைப் போக்கடிப்பதனாலும், எல்லா இஷ்ட பலங்களையும் ஆச்ரிதருக்குக் கொடுப்பதனாலும், ப்ரகாசத்தினாலும் க்ஷீர ஸமுத்திரத்திற்கு ஸத்ருசமாக விளங்கும் திருக் கண்கள் என்றபடி. வார் அருள் - ப்ரவஹியா நின்ற க்ருபையை யுடையவராகிய, அதாவது 'அதிவேல தயோத்தரங்கம்' என்றும், **'आर्द्री भवास्यमृत वर्ष निभैः अपाङ्गैः'** (ஆர்த்ரீ பவாம் யம்ருத வர்ஷ நிபைः அபாங்கைः) என்றும் அருளிச் செய்திருக்கிறபடியே

பெருக்கெடுத்துக் கரையை அதிக்ரமித்துக் கடைக் கண்க ளாகிற போக்கு வீடுகளாலே ப்ரவஹியா நின்றுள்ள க்ருபை என்றபடி.

மெல்லடி - 'வடிவிணை யில்லா மலர்மகள் மற்ற நிலமகள் பிடிக்கும் மெல்லடியை' என்றும், **'लक्ष्मी भूम्योः करसरसिजैः लालितं रङ्गभर्तुः पादांभोजं'** (லக்ஷ்மீ பூம்யோ: கரஸரஸிஜை: லாளிதம் ரங்கபர்த்து: பாதாம் போஜம்)என்றும், 'மலர்மகள் கைவருட மலர்போதிற் சிவந் தன' என்றும் சொல்லப்படும் திருவடிகளே என்றபடி. வேண்டிய—சிரஸா வஹிக்க வேண்டுமென்று ஆசைப் பட்ட; 'அடிச்சியோம் தலைமிசை நீயணியா யாழியங் கண்ணாவுன் கோலப்பாதம்' என்கிறபடியே தலையில் அணியப் பெறவாதல், **'फणि फणार्पितं ते पदांबुजं कृणु कुचेषु नः कृन्धि हृच्छयम्'** (பணி பணார்ப்பிதம் தே பதாம்புஜம் க்ருணு குசேஷு ந: க்ருந்தி ஹ்ருச்சயம்) என்கிறபடியே மார்பில் அணியவாதல், 'கேசவ நம்பியைக் கால்பிடிப்பா ளென்னும் இப்பேறெனக்கு அருள்செய் கண்டாய்' என்கிறபடியே பள்ளி கொள்ளுமிடத்து அடி கொட்டிட வாதல் விரும்பிய என்றபடி.

மெல்லியள் மேல்—விரஹ க்லேசம் பொறுக்க முடி யாத ஸௌகுமார்யத்தை யுடைய இப்பெண்பிள்ளைமேல்; ஸ்வயமே விரஹ க்லேசம் பொறுக்க முடியாத ஒரு அபலை யின்மேல் மன்மதனும் தன்னுடைய புஷ்ப பாணத்தை வர் ஷித்தான் என்பதனால் விசேஷமான அபிநிவேசம் சொல் லப்பட்டதாகிறது. அநங்கர்—'ஸாக்ஷாத் மந்மத மந்மத:' என்னப்பட்ட பகவான். பூங்கரும்பு—**'यमेवैष वृणुते तेन लभ्यः तस्यैष आत्मा विवृणुते तनूं स्वां'** (யமேவைஷ

வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்) என்கிறபடியே பகவான் தன்னுடைய ஸ்வரூபாதிகளை யதாவத்தாக ப்ரகாசிப்பிப்பதற்குக் காரண மாகிய வரண ப்ரகாரம். பூமழை - 'புகழுநல்லொரு வனி' ற்படியே அவன் தன் ஸ்வரூப ரூப குண விப வாதிகளை இடைவிடாமல் மெல்மேலென ப்ரகாசிப்பித் தல். இவ்விடத்தில் ஸர்வ அநிஷ்ட நிவர்த்தனமும் செய்து ஸர்வேஷ்டங்களையும் கொடுக்கும்படிக் கீடான அடிய வர்க்கு மெய்யனுடைய பரம காருணிகத்வத்தை நினைத்து அவனுடைய திருவடிகளை யாச்ரயித்த இப்பெண்பிள்ளைக்கு மன்மத பாணங்களுக்கு இலக்காகும்படியான தசை நேரிட்டது என்று அந்யாபதேசத்தில் விரோதமும் ஸ்வாப தேசத்தில் அப்படிப்பட்ட ப்ரீதிவிசேஷம் சொல்லப்பட்ட படியினுல் ஸமாதானமும் தெரிவிக்கப் பட்டதாகிறது. விரும்பியதுவும் மெல்லடி, விரும்பினவளும் மெல்லியள், பாணங்களும் மென்மலர்கள் என்று தாத்பர்யம் த்வனிக் கிறது. (3)

அவதாரிகை.

இப்படி இவருக்குத் தன் விஷயத்தில் உண்டான அபிநிவேசாதிசயத்தைக் கடாக்ஷித்து ஸ்ரீதெய்வநாயகன் தன்னுடைய ஸ்வரூப ரூப குண விபவைச்வர்யாதிகளை யெல்லாம் ஒருமிக்கப் ப்ரகாசிப்பிக்க இவரும் அவைகளை யெல்லாம் உள்ளபடியே யநுபவித்துத் தாமநுபவித்த படியை அருளிச்செய்கிறுர், 'மழையில்' என்றுரம்பித்து. **'झंझामारुतधूतचूतनयतः सांपातिकोयं क्रमः'** (ஜஞ்ஜ்ஜா மாருத தூத சூதநயத: ஸாம்பாதிகோயம் க்ரம:) என்கிற படியே பெருங்காற்றி லடிபட்டு மாங்கனிகள் விழுவதைப்

போல ஓரே காலத்தில் எம்பெருமான் படிகள் எல்லாம் ப்ரகாசித்தபடியினுல் இவர் அவை எல்லாவற்றையும் ஒரு மிக்கச் சேர்த்தே யநுபவிக்கிருர். கீழ் பரஜ்ஞாநபரமான 'திருமால்' என்னும் பாட்டில் உண்டாகிய ஸாக்ஷாத் காரம் திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பற்றியது. அந்த ஸௌந்தர்யாதிகளை இடைவிடாமல் அநுபவிக்க வேண்டு மென்கிற அபிநிவேசமாகிற பரமபக்தி 'மொழிவார்' என்ருரம்பிக்கும் பாட்டில் அருளிச் செய்யப்பட்டது. இப்படி இவருக்கு உண்டான அபிநிவேசாதிசயத்தைப் பார்த்து எம்பெருமான் தானும் இவரோடு ஸம்ஶ்லேஷிக்க வேண்டுமென்று மிகவும் ஆவல் கொண்டவனுய் 'அந்தா மத்' திற்படியே தன்னுடைய படிகள் எல்லாவற்றையும் இவருக்குப் ப்ரகாசிப்பிக்க இவர் அவைகள் எல்லா வற்றையும் இப்பாட்டால் அநுபவித்தருளுகிருர். ஆகை யால் கீழ்ப்பாட்டில் உண்டான பரஜ்ஞாநத்திற்கும் இங் குண்டாகுமதற்கும் வித்தியாஸம் அறியத்தக்கது.

நிலமண்டிலவாசிரியப்பா.

மழையி லெழுந்த மொக்குள்போல் வைய
மழியவொன் றழியா வடியவர் மெய்ய!
அருமறை யின்பொரு ளாய்ந்தெடுக் குங்கால்
திருவுட னமரும் தெய்வநா யகனீ;
தின்திரு தனக்கு நீதிரு வாகி
இந்துதன் நிலவுட னிலங்குதன் மையினே;
நந்துத லில்லா நல்விளக் காகி
யந்தமி லமுத வாழியாய் நிற்றி;
பாற்கடல் தன்னில் பன்மணி யன்ன

MADURAI UNIVERSITY MADURAI

சீர்க்கணம் சேர்ந்த சிலமெல் லேயிலே ;
அடியவர் பிழைகள் நின்கருத் தடையா
தடையவாண் டருளு மரசனும் நீயே ;
உயர்ந்தநீ யுன்னை யெம்முடன் கலந்தனை ;
அயிந்தைமா நகரி லமர்ந்தனை யெமக்காய் ;
சித்திர மணியெனத் திகழுமன் னுருவில்
அத்திர மணியென வனைத்துநீ யனுகி
விண்ணினு ளமர்ந்த வியனுரு வதனல்
எண்ணிய வீரிரண் டுருக்களு மடைதி ;
பன்னிரு நாமம் பலபல வுருவா
யென்னுரு வெங்கு மெய்திநீ நிற்றி ;
மீனே டாமை கேழல்கோ ளரியாய்
வானர் குறளாய் மழுப்படை முனியாய்ப்
பின்னு மிராம ரிருவராய்ப் பாரில்
துன்னிய பரந்தீர்த் துவரைமன் னனுமாய்க்
கலிதவிர்த் தளிக்கும் கற்கியாய் மற்றும்
மலிவதற் கென்றும் வல்வினை மாற்ற
நானு வுருவங் கொண்டுநல் லடியோர்
வானு ரின்ப மிங்குற வருதி ;
ஒருயி ருலகுக் கென்றுநீ திருவோ
டோருயி ரெல்லா மேந்தியின் புறுதி ;
யாவரு மறியா தெங்குநீ கரந்து
மேவுருச் சூழ்ந்து வியப்பினன் மிகுதி ;
கொண்டிட வெம்மை யடைக்கல முலகில்
கண்டிலங் கதியுனை யன்றிமற் றென்றும்
பல்வகை நின்ற நின்படி யனைத்தும்
தொல்வகை காட்டும் துணிந்துநூ மறையே. (4)

## பதவுரை.

மழையில் - மழை பெய்யும் பொழுது, எழுந்த - உண்டாகிய, மொக்குள் போல் - குமிழிகள் போல், வையம் - இந்த உலகங்களெல்லாம், அதாவது கணக்கில்லாத அண்டங்க ளெல்லாம் என்றபடி; அழிய - அழிந்திருக்கச் செய்தே, ஒன்று - அத்விதீயமாய், அழியா - அழியாதவனாகிய, அடியவர் மெய்ய - தாஸர்களுக்கு ஸத்யனாகிய தெய்வநாயகனே! 'அழியவன்று' என்று பாடாந்தரம், அழிந்து கொண்டிருக்கிற அந்தப் ப்ரளய காலத்தில் என்றபடி; அரு - அல்பஜ்ஞர்களால் அறிய முடியாத, மறையின் - வேதத்தின், இது ஜாத்யேக வசனம்; ஸகல வேதங்களினுடைய என்றபடி; பொருள் - அர்த்தத்தை, ஆய்ந்தெடுக்குங்கால் - விவேகித்து ஸாராம்சத்தை நிஷ்க்கர்ஷித்து எடுக்கும்போது, திருவுடன்-லக்ஷ்மியோடு கூட, அமரும் - ஸ்திரமாக நிற்கிற, தெய்வநாயகன் - ப்ரம்மாதி ஸகல தேவதைகளுக்கும் நாதன், நீ - நீயே, நீ - இப்படிப்பட்ட நீ, நின்திரு தனக்கும் - உனக்கும் அதிசயத்தைப் பண்ணக் கூடியவளாகையாலே உனக்கு ஸம்பத்து என்று சொல்லக் கூடிய பெரிய பிராட்டிக்கும், திருவாகி - அதிசயத்தைக் கொடுக்கக் கூடிய ஸம்பத்தாகி, இந்து—சந்திரன், தன் நிலவுடன் - தனக்கு அஸாதாரணமான நிலாவோடுங் கூட, இலங்கும் தன்மையினை - ப்ரகாசிக்கும் ஸ்வபாவத்தைப் போன்ற ஸ்வபாவம் உடையவனா யிருக்கிறாய், நந்துதல் - நசித்தல், இல்லா - இல்லாத, நல் - நல்ல, கெட்ட குணங்கள் இல்லாத என்றபடி; விளக்காகி - ஜ்ஞாந ஸ்வரூபனாகி, அந்தம் - முடிவு, அதாவது அளவு, இல் - இல்லாத, தேசம்,

காலம், வஸ்து இவைகளினுல் அளவில்லாத என்றபடி; அமுத ஆழியாய் - அம்ருத ஸமுத்திரமாய், நிற்றி - நிற்கிருய், பாற்கடல் தன்னில் - க்ஷீர ஸமுத்திரத்தில் இருக்கிற, பன்மணி யன்ன - அனேக விதமான ரத்னங்களுக்கு ஸத்ருசமான, சீர் - கல்யாண குணங்களின், கணம் - கூட்டங்கள், சேர்ந்த - கூடினதான, சீலம் - ஸௌசீல்ய குணத்துக்கு, எல்லை யிலே - எல்லே இல்லாதவனுகை இருக்கிருய், (ஆகையினுல்) அடியவர் - தாஸர்களுடைய, பிழைகள் - அபராதங்கள், நின் - உன்னுடைய, கருத்து - மனதை, அடையாது - அடையாமல், திருவுள்ளத்தில் பட்டு அதன் காரியமான நிக்ரஹ ஸங்கல்பம் உண்டாகாமல் என்றபடி; அடைய - எல்லா வுலகங்களேயும், ஆண்டருளும்—ரக்ஷித்தருளும், அரசனும் - ராஜாவும், நீயே, உயர்ந்த நீ - இப்படி எல்லாப் படிகளாலும் ஸர்வோத்க்ருஷ்டனை நீ, உன்னே - கீழும் மேலும் சொல்லப்படுகிற எல்லாப் ப்ரகாரங்களோடும் கூடிய உன்னே, எம்முடன் - அகிஞ்சனை என்னேடு, கலந்தனே - கலந்தாய், எமக்காய் - என்னேடு ஸம்ஶ்லேஷிப்பதற்காகவே, அயிந்தை மாநகரில் - திருவஹீந்திர புரத்தில், அமர்ந்தனே - ஸ்திரமாக நிற்கிருய்.

சித்திர மணி என - விசித்திரமான நீல ரத்னம் என்று சொல்லும்படி, திகழும் - ப்ரகாசிக்கிற, மன் - நித்யமான, உருவில் - ரூபத்தில், பரவாஸுதேவ விக்ரஹத்தில் என்றபடி; அத்திரம் - அஸ்த்ரம், அணி - பூஷணம், என - என்னும்படி, அஸ்த்ர பூஷணங்களாக என்றபடி; அனைத்தும் - ஸர்வ தத்வங்களேயும், நீ, அணுகி - கிட்டி, தரித்துக் கொண்டு என்றபடி; விண்ணினுள் - பரமபதத்தில், அமர்ந்த - ஸ்திரமாக இருக்கிற, வியன் - ஆச்சர்யகா

மான, உருவதனுல் - ரூபத்தைக் கொண்டு, பாரூபத்தி லிருந்து என்றபடி; எண்ணிய - பாஞ்சராத்ர சாஸ்த்ரங் களில் நிரூபிக்கப்பட்ட, அன்றிக்கே உபாஸகர்களை அநு க்ரஹிப்பதற்காக உன்னுல் ஸங்கல்பிக்கப்பட்ட, அதுவு மன்றிக்கே உபாஸகர்களால் த்யானம் பண்ணப்பட்ட, ஈரிரண்டு உருக்களும் - வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்று சொல்லப் படுகிற நாலு ரூபங்களையும், அடைதி - அடைகிருய்; பல பல உருவாய் - அனேக விதமான ரூபங்களை யுடையவனுய், கேசவாதி ரூபங்களோடு என்றபடி; பன்னிரு நாமம் - பன்னிரண்டு திருநாமங்களை, எய்தி - அடைந்து, என் னுரு - என்னுடைய சரீரத்தில், எங்கும் - நெற்றி முத லிய எல்லா விடங்களிலும், எய்தி - அடைந்து, நீ நிற்றி - நீ நிற்கிருய், மீனே டாமை - மத்ஸ்யம் கூர்மம், கேழல் - வராஹம், கோள் - பலத்தையுடைய, அரி - ஸிம்ஹம், நரஸிம்ஹம் என்றபடி; ஆய் - (இவைகளாக) ஆகி, வான் ஆர் - ஆகாசத்தில் நிறைந்த, குறளாய் - வாமன ரூபி யாய், குறள் - குள்ளன், த்ரிவிக்ரமாவதார ரூபத்தில் லோகத்தை யெல்லாம் வ்யாபித்த குறளாய் என்றபடி; மழு - பரசுவை (கோடரியை), படை - ஆயுதமாகவுடைய, முனியாய் - ருஷியாய், பரசுராமனுய் என்றபடி; பின் னும் - அதற்குமேல், இராம ரிருவராய் - தசரதராமன், பலராமன் என்கிற இரண்டு ரூபத்தை யுடையவனுய், பாரில் - பூமியில், துன்னிய - நிபிடமான, நெருங்கிய என்றபடி; பரம் பாரத்தை, தீர் - தீர்த்தவனுகிய, துவரை மன்னனுமாய் - துவாரகை யென்னும் பட்டணத்துக்கு நாதனை ஸ்ரீக்ருஷ்ணனுய், கலி தவிர்த்து - கலியை நாசஞ்

செய்து, கலியுக தர்மத்தைத் தடுத்துக் க்ருதயுக தர்மத்தைப் ப்ரவர்த்திப்பித்து என்றபடி; அளிக்கும் - உலகத்தை ரக்ஷிக்கிறவனுகிய, கற்கியாய் - கல்க மென்கிற குதிரையை வாஹனமாக வுடைய கல்கி ரூபியாய், மற்றும் - வேருன, இவ்வளவு அவதாரங்களைச் செய்தும் போக்க முடியாமல் மிகுதியாக நின்ற என்றபடி; மலிவதற்கு - வ்ருத்தி யடைவதற்கு, எண்ணும் - எண்ணுகிற, வல்வினை - உறுதி யான பாபங்களை, மாற்ற - நாசஞ் செய்ய, நானு வுருவம் - அனேக விதமான ரூபங்களை, அர்ச்சாவதார ரூபங்களை என்றபடி; கொண்டு - அடைந்து, நல்லடியோர் - அநந்ய ப்ரயோஜனர்களான தாஸர்கள், வான் - பரம பதத்தில் (உண்டாகிற), ஆர் - பரிபூர்ணமான, இன்பம் - ஆனந்தத்தை, இங்கு - இந்தப் பூலோகத்தில், உற - அடைய, வருதி - வருகிருய்; உலகுக்கு - உலகத்திற்கு, அதிலிருக்கும் சேதனு சேதனவஸ்துக்களுக்கு என்றபடி; என்றும் - எப்பொழுதும், ஓருயிர் - அத்விதீயமான அந்தர்யாமியாகிய, நீ, திருவோடு - லக்ஷ்மியுடன், ஓர் - ஸங்கல்பிக்கப்பட்ட, அதாவது ஸங்கல்பிக்கப்பட்டு ஸ்ருஷ்டிக்கப்பட்ட, உயிர் எல்லாம் - ப்ராணிகளை எல்லாம், ஏந்தி - தரித்துக் கொண்டு, இன்புறுதி - ஸந்தோஷத்தை யடைகிருய்; யாவரும் - அந்த சேதனுசேதன வஸ்துக்களெல்லாம், அறியாது - உன்னை அறியாதிருக்கும்படி, எங்கும் - எல்லா விடங்களிலும், உள்ளும் வெளியும் என்றபடி; கரந்து - மறைந்து (இருக்கச் செய்தே), நீ, மேவுரு - மேவப்படுகிற ரூபம், அதாவது உபாஸகர்களால் த்யானம் செய்யப் படுகிற அங்குஷ்ட ப்ரமாண முள்ள ஹார்த்த ரூப

மென்றபடி; (அத்தால்) சூழ்ந்து - உபாஸனத்தில் அதிகாரிகளான மனுஷ்யர்களுக்குள் புகுந்து நின்று, வியப்பினல் - ஆச்சர்யத்தினல், மிகுதி - மிகுந்தவனய் நிற்கிருய்.

எம்மை - அகிஞ்சனர்களான எம்மை, அடைக்கலம் - ரக்ஷ்ய வஸ்துவாக, கொண்டிட - அங்கீகரிக்க, உலகில் - இந்த உலகத்தில், உனை யன்றி - உன்னைத் தவிர, மற்ருென்று - வேருென்ருகிய, கதி - கதியை, ஆச்ரயிக்க வேண்டிய வஸ்துவை, உபாயாந்தரத்தை என்றபடி; கண்டிலம் - நாமறிய வில்லை, பல்வகை நின்ற - இப்படி அனேக விதங்களாக நிற்கிற, நின்படி - உன்னுடைய ஸ்வபாவங்கள், அனைத்தும் - எல்லாம், தொல்வகை - அநாதி ஸித்தங்களா யிருக்கும் ப்ரகாரத்தை, தூமறை - பரிசுத்தமான வேதம், துணிந்து - தைரியத்தை யடைந்து, காட்டும் - ப்ரகாசம் செய்யும்.

## வ்யாக்யாநம்.

இப்பாட்டில் 'மழையில் எழுந்த' என்ருரம்பித்து 'தெய்வ நாயகனீ' என்னு மளவாக சாரீரக சாஸ்த்ரத்தில் முதல் இரண்டு அத்யாயங்களான பூர்வ த்விகத்தின் அர்த்தமும், 'கொண்டிட வெம்மை.........மற்ருென்றும்' என்பதனல் மூன்ருவதும் நாலாவதுமான அத்யாயங்களடங்கிய உத்தர த்விகத்தின் அர்த்தமும், மேல் 'பல்வகை' இத்யாதியினல் இது வேதாந்த சாஸ்த்ர ஸித்தம் என்பதும், பகவானை விட ப்ராப்யாந்தராதிகள் இல்லை என்று மேலே நிருபிக்கப் போகிற அர்த்தத்துக்கு உபபாதகங்களாக 'நின் திரு.........மிகுதி' என்பதும்

அருளிச் செய்யப்பட்டிருப்பதனுல் இதில் சாரீரக சாஸ்த்ரார்த்தம் பூர்ணமாக ப்ரதிபாதிதமாகிறது.

'மழையில்' இத்யாதி - தாரை தாரையாய் மழை பெய்து கொண்டிருக்கும் பொழுது ஜலத்தில் குமிழி உண்டானுல் அது மறுக்ஷணத்தில் அழிந்துவிடும். அதைப் போல மிகவும் அஸ்திரமாயிருக்கும் இந்த வுலகம் என்றபடி; 'संकप्पचन्द खोहिअतिउणोअहि विउलबुब्बुअप्पअरेहिं' (ஸங்கல்ப சந்த்ர க்ஷோபித த்ரிகுணோததி விபுல புத்புத ப்ரகரை:) என்றல்லவோ அருளிச் செய்திருப்பது. 'வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்குளின் மாய்ந்து மாய்ந்து' என்று ஆழ்வாரும் அருளிச் செய்தார்.

'ஒன்றழியா'-'ஏகஸ் திஷ்டதி விஶ்வாத்மா ஸது நாராயண: ப்ரபு:', 'பவா நேக: சிஷ்யதே சேஷஸம்ஜ்ஞ:', 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத்' முதலியவைகள் இங்கு விவக்ஷிதங்கள். அன்றிக்கே, ஒன்று - ஒரு ஸ்வபாவமும், அழியா - அழியாத என்று யோஜிக்கவுமாம். 'अर्थोष्मणा विरहितः पुरुषः क्षणेन सोप्यन्य एवभवतीति विचित्रमेतत्' (அர்த்தோஷ்மணா விரஹித: புருஷ: க்ஷணேந ஸோப்யந்ய ஏவ பவதீதி விசித்ர மேதத்) என்கிறபடியே உலகத்தில் புருஷர்களுக்கு ஐச்வர்யத்தில் ஏகதேசம் குறைந்தவாறே அவர்களுடைய ஸ்வபாவாதிகளும் மாறி விடுகின்றன. ஆனுல் பகவானேவெனில் தன்னுடைய இந்த லீலா விபூதியாகிற ஐச்வர்யம் முற்றும் அழியா நிற்கச் செய்தேயும் தான் ஸ்வரூப ரூபாதிகளில் கொஞ்சமும் மாறுதலின்றி நிற்கிருன் என்கிற ஆச்சர்யம் த்யோதிதம். இந்த லீலா விபூதி ப்ரளய காலத்தில் ஸ்தூல தசை மாறி ஸூக்ஷ்ம தசை யடைவதே அதனுடைய அழிவென்று சாஸ்த்ரங்

களில் கூறப்பட்டுள்ளது. 'அன்றழியா' என்கிற பாடத்தில் '**आरज्झतिअसविळए अच्चुअ णिच्चं ण ठासि जइणाम तुमम्। कम्माण कप्पिआणंकाही कप्पन्तरेसु को णिव्वेसम्॥**' (ஆராத்ய த்ரிதஶ விலயே அச்யுத நித்யம் ந திஷ்டஸி யதி நாம த்வம் | கர்மணும் கல்பிதாநாம் கதா கல்பாந்தரேஷு கோ நிர்வேசः) என்கிறபடியே நம்மால் அர்த்த வ்யயம் காய க்லேசம் முதலியவற்றை ஸஹித்துக்கொண்டு செய்யப்படும் யஜ்ஞங்களால் ஆராதிக்கப்பட்ட அக்னி இந்திராதி தேவதைகள் 'ந ப்ரம்மா நேசாநः' முதலியவைகளின்படியே நாசமடையும் பொழுதும் ஸர்வாந்தர்யாமியாகி '**अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च**' (அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச) என்கிறபடியே ஸர்வ கர்மங்களையும் அங்கீகரித்துக்கொண்டு அதனால் ப்ரீதி யடைந்து அநுக்ரஹம் செய்ய நீர் ஒருவர் இல்லாவிடில் எவன் அவரவர்களால் செய்யப்பட்ட கர்மங்களுக்குப் பலத்தைக் கொடுத்து ரக்ஷிக்கக் கடவன்? என்று திருவுள்ளம். இத்தால் '**जन्माद्यस्य यतः**' (ஜந்மாத்யஸ்ய யதः) என்கிற ஸூத்ரார்த்தம் உபபாதிக்கப் பட்டதாகிறது. அக்னி இந்திராதி தேவதைகளுக்கு அந்தர்யாமியாய் நின்று அவர்களைக் குறித்துச் செய்யப்படும் கர்மங்களை அங்கீகரித்து அவற்றுக்குப் பலம் கொடுப்பதும், 'ஆதி' சப்தத்தால் சொல்லப்படுகிற ரக்ஷணத்தின் பேதம் என்பது 'அவரவர்' என்கிற பாட்டின் வ்யாக்யானத்தில் 'எம்பெருமான் ஸர்வ தேவாந்தராத்மதயா ஸர்வ கர்ம ஸமாராத்யனுய் ஸகல பலப்ரதனு யிருக்கையாலே ஜகத் ரக்ஷணமும் தததீந மென்கிறது' என்கிற பிள்ளான் ஸ்ரீஸூக்தியினல் தெரிவிக்கப்படுகிறது.

'அடியவர் மெய்ய' என்பது இங்குக் கேவலம் திருநாமமாக மாத்திர மில்லாமல் 'இத்தனை யடியரானார்க்கிரங்கும் நம் அரங்கனாய பித்தன்' என்கிறபடியே அக்னி இந்திராதி தேவதைகளுக்கு அந்தர்யாமியான தன்னை யறியாமல் ஜனங்கள் அந்தத் தேவர்களையே ஆராதித்தாலும், அவ்வாராதனம் வஸ்து வ்ருத்தியில் தன்னுடைய ஆராதனமாகப் பர்யவஸிக்கிறபடியால் அவர்களையும் தன்னடியவர்களாக நினைத்து அவர்களுக்கும் மெய்யனாய் பல ப்ரதானம் பண்ணும் ப்ரகாரத்தை விவக்ஷிக்கிறது.

'அருமறை.........நீ'—இப்படி அக்னி இந்திராதிகளும் பகவானுக்குச் சரீர பூதர்களாகையினாலும் அந்தந்த சப்தங்கள் 'तदेवाग्निः तद्वायुः तदु चन्द्रमाः' (ததேவாக்நிஸ் தத்வாயுஃ தது சந்த்ரமாஃ) முதலியவற்றின் படியே பகவத்பர்யந்த வாசகங்களாகையினாலும் அவர்களுடைய ஆராதனங்களைப் ப்ரதிபாதிக்கிற பூர்வபாகம் பகவதாராதனத்தையே சொல்லுகிறதாகி, மேலே உபநிஷத் பாகம் ஆராத்ய தேவதையின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறதாகி, இப்படி உபய பாகமுமாக 'ஸர்வே வேதாஃ யத்பதம் ஆமநந்தி', 'வேதைஶ்ச ஸர்வை ரஹமேவ வேத்யஃ', 'மிக்கவேத ஞான மூர்த்தியாய் வேத விளக்கினை', 'வேதப் பொருளே என் வெங்கடவா', 'உடன் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர் மிகு சுருதியுள் இவை யுண்ட சுரனே' முதலியவற்றின்படியே பகவானையே ப்ரதிபாதிக்கின்றன என்றபடி. 'அரு' என்பது இப்படி எல்லா வேதங்களினாலும் ப்ரதிபாதிக்கப்படுமவன் ஒருவனே என்கிற ஜ்ஞாநம் உண்டாவது மிகவும் அருமை என்பதைக் காட்டுகின்றது. ஆக

இப்படி 'वेदैश्च सर्वैरहमेव वेद्यः वेदान्तकृत् वेदविदेवचाहं' (வேதைஶ்ச ஸர்வை ரஹமேவ வேத்யோ வேதாந்தக்ருத் வேத விதேவ சாஹம்) என்கிற பகவத் வசனம் அநுஸந்திக்கப்பட்டதாயிற்று. ஆய்ந்து—ஸத்ஸம்ப்ரதாயத்துடன் சேர்ந்த ஸமீசீன ந்யாயங்களைக் கொண்டு நிர்த்தாரணம் பண்ணி. 'आलोड्य सर्वशास्त्राणि विचार्य च पुनः पुनः। इदमेकं सुनिष्पन्नं ध्येयो नारायणो हरिः॥' (ஆலோட்ய ஸர்வ ஶாஸ்த்ராணி விசார்ய ச புநః புநః| இத மேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணோ ஹரிః||) என்றான் வேத வ்யாஸ பகவானும்.

'திருவுட னமரும்'—'आनीदवातग् स्वधया तदेकं' (ஆநீதவாதக் ஸ்வதயா ததேகம்) முதலியவற்றின் படியே காரணத்வ பலப்ரதத்வாதி தசைகளிலும் 'लक्ष्म्यासह हृषीकेशः देव्या कारुण्यरूपया। रक्षकः सर्वसिद्धान्ते वेदान्तेपि च गीयते॥' (லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா| ரக்ஷகః ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே||) என்கிறபடி திருவுடன் பிரியாத சேர்த்தியை யுடையவன். 'தெய்வநாயகன் நீ'—'अहमादिर्हि देवानां' (அஹ மாதிர் ஹி தேவாநாம்) என்கிறபடியே அந்தத் தேவதைகளுடைய பூர்வ கர்மங்களினால் ஆராதிக்கப் பட்ட நீரே அவர்களுக்கு அந்தத் தேவ ஜன்மம் முதலிய வற்றைக் கொடுத்து ரக்ஷித்தருளுகிறீர். 'நான்முகனை நாராயணன் படைத்தான்', 'நாராயணாத் ப்ரம்மா ஜாயதே,' 'தஸ்மாத் ஜாதః சதுர்முகః,' नाकौकसां प्रथमतामधिकुर्वते ते नाभी सरोजरजसां परिणाम भेदाः' (நாகௌகஸாம் ப்ரதமதா மதிகுர்வதே தே நாபீ ஸரோஜ

ரஜஸாம் பரிணாம பேதா:) முதலியவைகள் இங்கு விவக்ஷிதங்கள்.

இப்படி 'ஒன்றுந்தே'விற்படியே பரதேவதையை நிஷ்கர்ஷம் செய்தருளினாராயிற்று. இப்படித் திருவுடனமர்ந்தவனே பரதேவதையாகில் ஈச்வரர்கள் இருவராகப் ப்ரஸங்கிக்குமே? 'ஏக மேவாத்விதீயம்' என்பது முதலியதும் விரோதிக்குமே? என்ன வருளிச் செய்கிறார்—'நின் திரு' இத்யாதி. அன்றிக்கே இப்படி ஜகத்காரணத்வமாகிற லக்ஷணத்தை நிரூபித்தருளி ஸ்வரூப நிரூபக தர்மங்களை யருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதில் தேவதாந்தர வ்யாவர்த்தக முகத்தினால் ப்ரதானமாக நிற்கும் லக்ஷ்மீ ஸம்பந்தத்தை முதலில் நிர்தேசித்தருளுகிறா ராகவுமாம். 'நின் திரு' இத்யாதியினால் **'सदा तवैवोचितया तव श्रिया'** (ஸதா தவைவோசிதயா தவஶ்ரியா), 'உன் திரு' முதலியவற்றின்படியே உனக்கு அதிசயத்தைக் கொடுக்கக் கூடியவளாய், தேவதாந்தர வ்யாவர்த்தக விசேஷணமாகையால் ப்ரதானமாய், 'திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு' என்கிறபடியே ஆஶ்ரயணீயத்வத்திலும் கூட இருந்து அதிசயத்தைத் தரக் கூடிய பெரிய பிராட்டியார் என்றபடி. **'संपद्दिव्या मधुविजयिनः'** (ஸம்பத் திவ்யா மதுவிஜயிந:) என்றன்றோ இவர் தாமும் அநுஸந்தித்தருளினது. **'अपाङ्गाः भूयांसो यदुपरि परं ब्रह्म तदभूत् अमी यत्र द्वित्राः सच शतमघादिः तदधरात्'** (அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரம்ம தத்பூத் அமீ யத்ர த்வித்ரா: ஸச சதமகாதிஸ் ததராத்), 'வண்டார் பூ மாமலர் மங்கை மண நோக்க முண்டானே' முதலியவைகளின்படியே இவள் கடா

க்ஷத்தையே தாரகமாகக் கொண்டல்லவோ இத் தத்வம் வளர்கிறது. '**अनन्याधीनकल्याण**' (அநந்யாதீந கல்யா ணம்) முதலியவை இங்கு அநுஸந்தேயம். 'நீ திருவாகி,' '**श्रियः श्रीश्च भवेदग्र्या**' (ஶ்ரிய: ஶ்ரீஶ்ச பவேதக்ர்யா), 'க: ஶ்ரீ: ஶ்ரிய:', 'திருவுக்கும் திருவாகிய செல்வா' என்கிற படியே அப்படிப்பட்ட மஹிமையோடு கூடிய லக்ஷ்மியும் இவனுக்கு அப்ருதக் ஸித்த விசேஷண மாகையாலே அவ ளுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்யாதிகளுக்குத் தான் காரணமாகிறபடியால் அவளுக்கும் திருவாக நிற்கிறுன் இவன்.

இப்படியாகில் அந்யோந்யாஶ்ரய தோஷம் ப்ரஸங் கிக்காதோ வென்ன வருளிச் செய்கிறுர்—'இந்து' என் றுரம்பித்து. 'பாஸ்கரேண ப்ரபா யதா' என்று சொல் லுகிற த்ருஷ்டாந்தம் அஜ்ஞாத நிக்ரஹை யானபடியால் அத்யந்த சீதளமான பிராட்டியின் ஸ்வரூபத்துக்குச் சரியான த்ருஷ்டாந்த மாகாது என்று திருவுள்ளத்தில் கொண்டு '**ज्योत्नयेव हिमदीधितिः**' (ஜ்யோத்ஸ்நயேவ ஹிமதீ திதி:) என்கிற த்ருஷ்டாந்தத்தை இங்கு நிரூபித்தருளினது. ஸ்வயமே அம்ருத மயமாயும் குளிர்ந்த கிரணங்களை யுடை யவனுயு மன்றே சந்திர னிருப்பது. நிலவினுல் சந்திர னுக்கு மஹிமையும் சந்திரனுல் நிலவுக்குக் குளிர்ச்சியும் உண்டாகின்றன வென்பது அநுபவ ஸித்தம். ஸூர்ய னுடைய ப்ரகாசங்களே சந்திரனை யடைந்து நிலவாகப் ப்ரகாசிக்கின்றன வென்பதும் புராணப் ப்ரஸித்தம்.

'நந்துத லில்லா' என்பதனுல் ஸத்யத்வமும், 'நல்' என்பதனுல் அமலத்வமும், 'விளக்காகி' என்பதனுல் ஜ்ஞா நத்வமும், 'அந்தமில்' என்பதனுல் அநந்தத்வமும், 'அமுத

வாழியாய்' என்பதனுல் ஆநந்தத்வமும் ஆக ஐந்து ஸ்வரூப நிரூபக தர்மங்களும் அருளிச் செய்யப் பட்டதாயிற்று. 'நந்தா விளக்கே யளத்தற் கரியாய்,' 'அமலன்', 'உணர் முழுநலம்', 'ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரம்ம' முதலியவை கள் இங்கு விவக்ஷிதங்கள்.

இதற்கு மேல் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான குணங்களை யருளிச் செய்கிறுர், 'பாற் கடல்' என் ருரம்பித்து. இந்த த்ருஷ்டாந்தத்திஞல் 'குணுநாம் ஆகரோ மஹாந்' என்றும், **'गुणायत्तं लोके गुणिषुहि मतं मङ्गलपदं विपर्यस्तं हस्तिक्षितिधरपते तत् त्वयि पुनः। गुणाः सत्यज्ञानप्रभृतयउत त्वद्गततया शुभीभूयं याता इतिहि निरणैष्म श्रुतिवशात्'॥** (குணுயத்தம் லோகே குணிஷுஹி மதம் மங்களபதம் விபர்யஸ்தம் ஹஸ்தி க்ஷிதிதரபதே தத் த்வயி புநः| குணுः ஸத்ய ஜ்ஞாந ப்ரப்ருதயஉத த்வத் கததயா ஶுபீபூயம் யாதா இதிஹி நிரணைஷ்ம ஶ்ருதிவஶாத் ||) என்றும் சொல்லுகிறபடியே கல்யாண தமங்களான குணங்களுக்கும் மேன்மையைக் கொடுக்கக் கூடிய ஸ்வ ரூபத்தின் வைலக்ஷண்யம் அநுஸந்திக்கப் பட்டதாகிறது. மேலும் **'यथारत्नानि जलधेः'** (யதா ரத்நாநி ஜலதேः) என் கிற வசனத்தில் ஜலதி என்னும் பதம் க்ஷீர ஜலதிபரம் என்று சிக்ஷித்தருளிஞராயிற்று. **'अमिअरस साअरस्सव अहिन्द उरणाह णिम्मलमहग्घाइम्'** (அம்ருத ரஸ ஸாகரஸ்யேவ அஹீந்த்ர புர நாத நிர்மல மஹார்க்காணி) என்றும் அருளிச் செய்தாரன்றே.

'சீர்க்கணம் சேர்ந்த சீலம் எல்லையிலே'—சீலம் - ஸௌசீல்யம், அதாவது **'महतो मन्दैः सह नीरन्ध्रेण संश्लेष रसिकत्वं'** (மஹதோ மந்தைः ஸஹ நீரந்த்ரேண ஸம்ஶ்

லேஷ ரஸிகத்வம்) - தான் ஸர்வோத்க்ருஷ்டனா யிருக்கச் செய்தே ஸர்வ நிக்ருஷ்டர்களுடன் ஒரு நீராய்க் கலந்து பரிமாறும் தன்மை - இது பரத்வ ஸௌலப்யங்கள் இரண்டையும் அடக்கிக்கொண்டிருக்கிற படியால் இதைத் தனித்து அருளிச் செய்தபடி. 'கர்ச வீர்யவாந்' என்றாரம்பித்துத் தனித்தனியே கல்யாண குணங்களை விவரிக்கச் செய்தே 'குணவாந்' என்று மஹர்ஷி அருளிச்செய்ததைப் போலவும், **'वशीवदान्यो गुणवान्'** (வஶீ வதாந்யோ குணவாந்) என்று பரமாசார்யனை ஸ்ரீ பெரிய முதலியார் அருளிச் செய்திருப்பதைப் போலவுமாக இங்கு இவரும் 'சீர்க்கணம்' என்று பொதுவில் எல்லாக் குணங்களையும் அருளிச் செய்திருக்கச் செய்தேயும் 'சீலம்' என்று தனித்து அருளிச்செய்திருக்கிறார். 'சீர்க்கணம் சேர்ந்த சீலம்' என்றருளிச் செய்திருப்பதனால் எல்லாக் குணங்களும் ஸௌசீல்யமாகிற குணத்தில் அந்தர்பவித்திருக்கின்றன என்பது த்யோதிதம். **'प्रसादपरमौ नाथौ मम गेहमुपागतौ'** (ப்ரஸாத பரமௌ நாதௌ மம கேஹமுபாகதௌ) என்றார் பாகவதோத்தமரான மாலாகாரரும். **'प्रसादपरमौ'** பரத்வம் ஸ்வரூபத்தை விட்டுக் கழற்றவொண்ணாமையாலே ஸ்வரூபத்தைப் பற்றிக் கிடக்கும், ஸௌசீல்யமே விஞ்சி யிருக்கும் என்றாற் போல.

'எல்லை இலை' - பரத்வத்துக்கு ஒருக்கால் எல்லை கண்டாலும் காணலாம், ஸௌலப்யத்தின் எல்லையை யறிய முடியாது. 'துஞ்சா முனிவரு மல்லாதவரும் தொடர நின்ற வெஞ்சாப் பிறவி யிடர் கடிவான் இமையோர் தமக்கும் தன் சார்விலாத தனிப்பெருமூர்த்தி தன்மாயஞ் செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெ யூணென்னு

மீனச் சொல்லே' என்கிறபடியே நித்ய ஸூரிகளுக்கும் நிலைகாண வொண்ணுதபடி யன்ருே ஸௌலப்யம் நிற்பது. 'எத்திற முரலினே டிணைந்திருந் தேங்கிய வெளிவே' என்றன்ருே மோஹித்துக் கிடந்தது மயர்வற மதிநல மருளப்பெற்ற மாறனும்.

ஸௌசீல்யத்தின் ப்ரயோஜனத்தை நிரூபித்தருளுகிருர், 'அடியவர்' என்ருரம்பித்து. 'பிழைகள்' என்பதனுல் அநாதிகாலமாய் இவனுல் செய்யப்பட்டு வந்தவை அநந்தங்கள் என்பது த்யோதிதம். 'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்', 'செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும்' என்றிவை முதலியவைகளில் சொல்லப்பட்ட பக்ஷாந்தரமும் அடியவர்க்கு மெய்யன் திருவுள்ளத்தில் தட்டாதபடியாய், 'என்னடியார் அது செய்யார்' என்கிற பக்ஷமே மேலிட்டிருக்கும்படி, 'நின் கருத்தடையாது' என்பதனுல் ஸூசிப்பிக்கப் படுகிறது. அதாவது அபராதங்கள் திருவுள்ளத்தில் பட்டு அதன் கார்யமான சிக்ஷாதிகளைச் செய்யாமையால் அவைகள் அவன் திருவுள்ளத்திலேயே படவில்லை என்றதாயிற்று.

விபீஷண ஸுக்ரீவாதிகள் திறத்தில் அவர்களுடைய தோஷத்தைப் பாராமல் அங்கீகரித்தேனேயாகிலும் அது ஸர்வருக்கும் துல்யம் என்னப்போமோ? உம்முடைய விஷயத்தில் நடந்ததோ? என்று ஸ்ரீதெய்வநாயகன் திருவுள்ளமாகக் கொண்டு ஸமாதானம் அருளிச் செய்கிருர் —'உயர்ந்த' என்ருரம்பித்து. உன்னை - இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் மேன்மையோடு கூடியவுன்னை. அந்த மேன்மைகளில் ஈஷத்தும் குறையாதபடியே பொய்கலவாது என் மெய்கலந்தாயன்ருே?

ஆதலால் உன்னுடைய ஸௌசீல்யம் என் விஷயத்தில் கார்யகரமானதைப் போல தசரத வஸுதேவ தேவகீ யசோதாதிகளுக்குத்தான் கார்யகர மாயிற்றோ? என்னுடன் கலந்தருளினாற் போல அவர்களுடன் கலந்து பரிமாறின யில்லையே? தசரத வஸுதேவர்களுக்குக் கேவலம் புத்ர பாவனை பண்ணிப் பரத்வத்தை மறைத்துக் கொண்டன்றோ கலந்தருளினது. யசோதாதிகளுக்கும் தாயெடுத்த சிறுகோலுக் கஞ்சித் தயிருண்ட வாய் துடைத்துக் கொண்டன்றோ பரிமாறியருளினது. அப்படிக்கெல்லாம் செய்யாமல் வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான் பொய்கலவாது மெய்கலந்தது அடியேன் திறத்திலன்றோ என்றபடி. எம்முடன்—'நீசனேன் நிறையொன்று மிலேன்,' 'அமர்யாத: க்ஷுத்ர:,' '**अज्ञानवारिधिमपायधुरन्धरं मां**' (அஜ்ஞாந வாரிதி மபாய துரந்தரம் மாம்) இத்யாதிகளிற்படியே உம்முடைய பரத்வத்துக்கு அவதி இல்லாததுபோல் என்னுடைய நைச்யத்திற்கும் அவதி இல்லை என்றபடி. '**अच्चुअ तुज्झ गुणाणं मह दोसाणंवि णत्थि कुत्थवि गणणा**' (அச்யுத தவ குணாநாம் மம தோஷாணுமபி நாஸ்தி குத்ராபி கணநா) என்றன்றோ இவர் அச்யுத சதகத்தில் அருளிச் செய்திருப்பது.

'பரம பதத்திலிருக்கும் நான் உம்மோடு கலந்து பரிமாறினேன் என்பது எப்படி' என்று பகவான் திருவுள்ளமாகக்கொண்டு அதற்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார் 'அயிந்தை மாநகர்' இத்யாதி. 'பஹுநா தபஸா ராம:' என்கிறபடியே வெகு காலம் தவம் செய்து பெற்ற தசரதாதிகளும், வெகு நாள் வரையில்

எதிர்பார்த் திருந்த சபரி ப்ரப்ருதிகளும் யாத்ருச்சிகமாக ஸந்தித்த ஸுக்ரீவ விபீஷணுதிகளும் நான் பெற்ற பேறு பெற்ருர்களோ? அடியேனுடைய வரவை எதிர் பார்த்திருந்து என்னில் முன்னம் பாரித்து ஸாந்நித்யத் தைப் பண்ணி இருந்தவ னல்லேயோ நீ தான். 'எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதிசூழ்ந்ததால்' என்கிறபடியே என்னுடைய பாக்யாதிசயம் இருந்தபடி பாராயென்கிருர். எமக்காய் - என்னேடு ஸம்ஶ்லேஷிப்பதற்காக. எனக்கு ஜ்ஞாநாதி களைக் கொடுத்து உபகாரம் செய்வதற்காகவும், மற்றும் அபீஷ்டங்களைச் செய்வதற்காகவும் என்றபடி. ஆழ்வா ருக்குத் திருத்தொலைவில்லிமங்கலம் போலே காணும் இவருக்குத் திருவயிந்தைமாநகர் முன்னிவந்து அவன் நின்றிருந்து உறையும் நகரமாய் நின்றது.

மேலே பர வ்யூஹ விபவ அர்ச்சாந்தர்யாமி யாகிற பஞ்ச ப்ரகாரமான ரூபத்தை யருளிச்செய்யா நிற்கச் செய்தே எல்லாவற்றிற்கும் முதலில் ஸ்ரீ தெய்வநாயகனை யருளிச்செய்தது, 'ஆழ்வார்களும் இவ் வவதார ரஹஸ் யத்தையும் அர்ச்சாவதார வைலக்ஷண்யத்தையும் ப்ரசுர மாக வநுஸந்தித்து இதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்' என்கிறபடியே இவருக்கு ஸ்ரீ தெய்வநாயகனே உத்தேச்யமென்றும் இதற்குப் பேரணியாக மற்ற நான்கு ரூபங்களும் இவருக்கு அநுஸந்தேய மாயிற்று என்றும் ப்ரகாசம் செய்கிறது. இப்படியே இவர் பரவாஸுதேவ ரூபத்திலும் ஸ்ரீதெய்வ நாயகனுடைய திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தையே அநுஸந்தித்தா ரென்பது ஸ்ரீதேவநாயக பஞ்சாசத்தில்

அருளிச்செய்திருக்கும் அர்த்தங்களையே, பரமபத ஸோபா நத்தில் பரிபூர்ணாநுபவ ப்ரகரணத்தில் அருளிச்செய் திருப்பதனால் வ்யக்தமாகிறது.

பர ரூபத்தை யருளிச்செய்கிறார், 'சித்திரமணி' என்றாரம்பித்து. சித்திர மணி யென -'மல்கு நீலச் சுடர் தழைப்ப செஞ்சுடர்ச் சோதிகள் பூத்து ஒரு மாணிக்கம் சேர்வதுபோல்' என்றருளிச் செய்தபடியே அதிவிசித்ரமான வர்ணங்களின் ப்ரகாசத்தையுடைய மாணிக்கம்போல் என்றபடி. 'மன்னுரு' என்பதனால் 'நித்யம் நித்யாக்ருதிதரம்,' 'நித்ய ஸித்தே ததாகாரே,' 'ஸதைக ரூப ரூபாய', 'துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்ற வண்ணம் நிற்கவே' முதலியவை விவக்ஷிதம். 'அத்திரமணி' இத்யாதி - 'புருடன் மணிவரமாக' என் கிற பாட்டில் அருளிச் செய்தபடி அஸ்த்ர பூஷணங் களாக அவன் திருமேனியில் ஸகல தத்வங்களும் சேர்ந் திருக்கின்றன என்றபடி. இதனால் ஸ்ரீ தெய்வநாயகன் திருமேனிக்கும் பரவாஸுதேவ திவ்ய மங்கள விக்ர ஹத்துக்கும் அபேதத்தை அநுஸந்தித்தபடி. '**तत्वानि यानि चिदचित् प्रविभागवन्ति त्रय्यन्तवृद्धगणितानि सितासितानि। दीव्यन्ति तानि अहिपुरन्दरधामनाथ दिव्यास्त्रभूषणतया तव विग्रहेऽस्मिन्॥**' (தத்வாநி யாநி சிதசித் ப்ரவிபாகவந்தி த்ரையந்த வ்ருத்த கணிதாநி ஸிதாஸிதாநி | தீவ்யந்தி தாந் யஹிபுரந்தர தாம நாத திவ்யாஸ்த்ர பூஷணதயா தவ விக்ரஹேஸ்மிந்) என்றன்றோ அநுஸந் தித்தது. 'நீ யணுகி' என்பதனால் இவைகள் உம்முடைய திவ்ய திருமேனியின் ஸ்பர்சத்தினால் உண்டான விசே ஷத்தை அறியாமல் இருந்தாலும் தூங்குகிற ப்ரஜையைக்

கட்டிக் கொண்டு முத்தமிடுகிற தாயைப்போல இவை களின் ஸ்பர்சத்தினுல் உண்டான ஆனந்தத்தை நீயநுபவிக் கிருய் என்பது த்யோதிதம். 'விண்ணினுள்' என்பத ஞல் ஸஹஸ்ரஸ்தூணுதி வாக்யங்களிலும், பர்யங்க வித்யையிலும், ஓதுகிறபடியே திவ்ய மண்டபத்தில் திவ்ய யோகபீடத்தில் வீற்றிருந் தேழுலகும் தனிக்கோல் செல்ல, ஆற்றல் மிக்கு ஆளும் பரரூபம் அநுஸந்திக்கப் பட்டது. 'வியனுரு' என்பதனுல் திவ்ய அவயவங் களின் ஸௌந்தர்யம் வர்ணிக்க நிலமில்லாமல் ஆச்சர்ய மாக அநுபவிக்கக் கூடியது என்பது த்யோதிதம். இதனுலும் ஸ்வாநுபவ ரூபமாக ஸ்ரீதெய்வநாயகன் திவ்யாவயவ ஸௌந்தர்யத்தில் **'विस्मेरभावरुचिरा वनमालिकेव कण्ठे गुणीभवति देवपते त्वदीये'** (விஸ்மேர பாவ ருசிரா வநமாலிகேவ கண்டே குணீபவதி தேவபதே த்வதீயே) என்று இவருடைய புத்தி விஸ்மயப்பட்டு நிற்கை அநுஸந்திக்கப்பட்டதாகிறது. இவ்வர்த்தம் **'भुक्तं प्रियाभिरनिमेषविलोचनाभिः। प्रत्यङ्गपूर्णसुषमासुभगं वपुस्ते दृष्ट्वा दृशौ विबुधनाथ न तृप्यतो मे'** (புக்தம் ப்ரியாபி ரநிமேஷ விலோசநாபி:| ப்ரத்யங்க பூர்ண ஸுஷுமா ஸுபகம் வபுஸ்தே த்ருஷ்ட்வா த்ருஸௌ விபுத நாத ந த்ருப்யதோ மே) என்றநுஸந்தித்திருப்பதனுலும் ஸூசிதம்.

மேலே வ்யூஹரூபத்தை நிருபித்தருளுகிருர் - 'எண் ணிய' இத்யாதி. உபாஸகர்களால் எப்பொழுதும் த்யா னம் செய்யப்பட்ட என்றபடி. உபாஸகாநுக்ரஹார்த்த மன்றே **'जाग्रत् स्वप्नात्यलसतुरीयप्रायध्यातृक्रमवदुपास्यः'** (ஜாக்ரத் ஸ்வப்நாத்யலஸ துரீயப்ராய த்யாத்ருக்ரமவது பாஸ்ய:) என்கிறபடியே நான்கு விதமான ரூபத்தை

அடைந்திருப்பது. வ்யூஹாந்தரங்களை நிரூபித்தருளுகிறார் 'பன்னிருநாமம்' இத்யாதியால். 'பல பல வுருவாய்' என்றது 'சதுஶ் சக்ரம் நமஸ்யாமி கேசவம் கநக ப்ரபம்', 'மாதவம் மணிபங்காபம்,' 'கேசவனாய்,' 'மாதவனுமும்' முதலியவைகளில் சொல்லுகிற ஆயுதங்கள், வர்ணங்கள் முதலியவற்றின் பேதங்களைச் சொல்லுகிறது. இவைகளையுடைய கேசவாதி பன்னிரண்டு நாம ரூபங்களையுடையவனாய் என்றபடி. 'என்னுருவெங்கும்' - கேசவாதி பன்னிரண்டு ரூபங்களையும் உடைய பகவான் லலாடம் (நெற்றி) முதலிய இடங்களில் விசேஷமாக ஸாந்நித்யம் பண்ணுகிறான் என்பது ப்ரமாணஸித்தம். 'ஊர்த்வபுண்ட்ரங்களில் இவைகளின் நிலையை விசேஷித்து அறியவும்' என்று ஸ்ரீமத் தத்வத்ரய சுளகத்தில் இவர்தாமே யருளிச் செய்திருக்கிறார்.

'ஆய்' என்பதனால் 'என்னின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்' என்கிறபடியே அந்யருக்கு அந்தந்த ஜாதீய வஸ்துக்களைக் காட்டிலும் பேதம் அறியாதிருக்கும்படி மறைத்தும், தானும், **'आत्मानं मानुषं मन्ये रामं दशरथात्मजम्'** (ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்), **'कुलोचितमिति क्षात्रं धर्मं स्वं बहुमन्यते'** (குலோசித மிதி க்ஷாத்ரம் தர்மம் ஸ்வம் பஹுமந்யதே) முதலியவற்றின் படியே அந்தந்த ஜாதீய ஆசாரத்தை நடத்தினமையும், அவற்றை அபிமானித்தபடியும் ஸூசிதமாகிறது. கோள் - பலம், அதாவது 'எரிந்த பைங்க ணிலங்கு பேழ்வா யெயிற்றொடு இது எவ்வுரு வென்று இரிந்து வானோர் கலங்கி யோட' என்றும், 'அனைத்து மஞ்ச ஆளரியாய்'

என்றும் சொல்லுகிறபடியே அநுகூல ப்ரதிகூல விபாக மற ஸர்வலோகங்களும் பயப்படும்படியான பலத்தை யுடைய என்றபடி. அன்றிக்கே '**प्रत्यादिष्टपुरातनप्रहरण-ग्रामः**' (ப்ரத்யாதிஷ்ட புராதந ப்ரஹரண க்ராமः) என்கிறபடியே ஸுதர்சனம் முதலிய திவ்யாயுதங்களும் அஞ்ச வேண்டும்படியான ஹிரண்யனுடைய மார்பை நகத்தினாலேயே நாருகிழிப்பது போலக் கிழிக்கும்படி யான பலாதிசயத்தை யுடைய என்றாகவுமாம். வாளர் குறளாய் - தம்முடைய வடிவழகினாலும் காந்தியினாலும் ஆகாச மெல்லாம் வ்யாபித்துக்கொண்டு நிற்கிற ஸ்ரீவாமன ரூபியாய், அன்றிக்கே ஆகாசம் முழுமையும் வ்யாபிக்கும் படியாக த்ரிவிக்ரமனாகப் பரிணமித்த ஸ்ரீவாமன ரூபியாய் என்றாகவுமாம். இத்தால் அரும்பு அலர்ந்தாப்போல் இந்த வாமன ரூபமே விகஸிதமாயிற்று என்னும்படி நின்ற என்றதாயிற்று. 'அரும்பினை அலரை' என்றதிறே. அதுவு மன்றிக்கே, புலி அதிக தூரம் பாய்வதற்காகப் பின் வாங்குமாப்போல மேல் ஓங்கி வளர்வதற்காகப் பதிந்து காட்டினது இது வென்று சொல்லும்படியான வாமன ரூபியாய் என்றபடி. அதுவு மன்றிக்கே மஹாமேருவைச் சுருக்கி மாட்டு மணியாகக் கட்டினாற்போலே த்ரிவிக்ர மாவதாரத்தில் உண்டான திவ்யாவயவ ஸௌந்தர்யம், பராக்ரமம், தேஜஸ், முதலியவைகள் கநீபூதங்களாய் வாமனரூபத்தில் நின்றபடி சொல்லப்பட்டதாகவுமாம். 'மழுப்படை' இத்யாதி - மஹர்ஷியை நிரூபிக்கும்போது ஆயுதத்துடன் நிரூபிக்கும்படியான அவதார விசேஷம் என்றபடி. 'பாரில் துன்னிய பரம்' - '**भूमिः दृप्तनृपव्याज-दैत्यानीकशतायुतैः । आक्रान्ता भूरिभारेण**' (பூமிர்த்ருப்தந்ருப

வ்யாஜ தைத்யாநீக சதாயுதைः| ஆக்ராந்தா பூரிபாரேண), **वृष्ण्यन्धकादिपरिशेषितभूमिभारः**' (வ்ருஷ்ண்யந்தகாதி பரிசேஷித பூமிபாரः) என்கிறபடியே ஆஸுரப் ப்ரக்ருதிகளால் உண்டான பூபாரம். 'கலி தவிர்த்து' இத்யாதி. '**कल्की विष्णुयशस्सुतः कलिकथाकालुष्यकूलङ्कषः**' (கல்கீ விஷ்ணுயசஸ் ஸுதः கலிகதா காலுஷ்ய கூலங்கஷः) என்றிவர்தாமே யருளிச்செய்திருப்பது அநுஸந்தேயம். தவிர்த்து—மறுபடியும் க்ருத யுக ப்ரரோஹத்தை (க்ருத யுகத்தின் உதயத்தை) உண்டாக்கும் தன்மை ஸூசிப்பிக்கப் படுகிறது.

'மற்றும்' இத்யாதி. இப்படி பர வ்யூஹ விபவாவதாரங்களைச் செய்தும் அவை கால தேச விப்ரகர்ஷத்தாலும் மனுஷ்யர்களுடைய புத்திதோஷத்தினாலும் '**अवजानन्ति मां मूढाः मानुषीं तनुमाश्रितम्**' (அவஜாநந்தி மாம் மூடாः மாநுஷீம் தநுமாஸ்ரிதம்) இத்யாதி ப்ரகாரத்தினாலே இவர்களுக்கு ப்ரயோஜனப் படாமல் போனபடியினாலே அந்தந்த அவதாரங்களினால் போக்க முடியாத பாபங்களையும் போக்குவதற்காக. '**संदर्शनादकस्माच्च पुंसां संमूढचेतसां। कुवासना कुबुद्धिश्च कुतर्कनिचयश्च यः॥ कुहेतुश्च कुभावश्च नास्तिकत्वं लयं व्रजेत्।**' (ஸந்தர்சநா தகஸ்மாச்ச பும்ஸாம் ஸம்மூடசேதஸாம்| குவாஸநா குபுத்திஸ்ச குதர்க்க நிசயஸ்ச யः|| குஹேதுஸ்ச குபாவஸ்ச நாஸ்திகத்வம் லயம் வ்ரஜேத்||) என்கிறபடியே அபிஸந்தியில்லாமல் ஆகஸ்மிகமாகப் பார்த்த போதிலும் ஸர்வ பாப நாசகமாக வன்றோ அர்ச்சாவதார மிருப்பது. '**आपीठान्मौलिपर्यन्तं पश्यतः पुरुषोत्तमं। पातकान्याशु नश्यन्ति किंपुनस्तूपपातकं॥**' (ஆபீடாந் மௌலிபர்யந்தம் பஶ்யதः

புருஷோத்தமம் | பாதகாந் யாஸ்ய நச்யந்தி கிம்புநஸ்து உபபாதகம் ||), **'सर्वातिशायिषाड्गुण्यं संस्थितं मन्त्रबिंबयोः'** (ஸர்வாதிசாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மந்த்ர பிம்பயோ:) இத்யாதிகள் விவக்ஷிதங்கள். 'நாளு வுருவம்' - **'ये यथा मां प्रपद्यन्ते'** (யே யதா மாம் ப்ரபத்யந்தே), 'நெஞ்சினல் நினைப்பான் யவன்,' 'தம ருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே' என்கிறபடியே ஆச்ரிதர்கள் யாதொரு த்ரவ்யத்தையும் ஸம்ஸ்தானத்தையும் உகப்பார்களோ அவ்விதமாகவே அவர்களிஷ்டப்படி அனேக விதமான ரூபங்களைக் கொண்டு, தன்னுடைய ஸங்கல்பப்படி ஸகலத்தையும் நடத்தக்கூடிய தான் ஆச்ரிதர்களுடைய ஸங்கல்பப்படி நடக்கிறபடியினல் ஸர்வோத்க்ருஷ்டமான ஸௌசீல்யம் த்யோதிதமாயிற்று.

'நல்லடியோர்' என்றது 'இங்கே திரிந்தேற் கிழுக்குற்றென்,' 'சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரானறியும்,' 'ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே,' 'இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' முதலிய அர்ச்சாவதாரத்தின் பெருமையை உள்ளபடியே அநுஸந்தித்த மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களை. இவ்விடத்தில் ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின ஆழ்வாரை 'இவ்விஷயத்தில் தம்மை தேஹாத்மவாதிகளாக அருளிச்செய்வர்' என்றருளிச் செய்திருப்பதும், 'ஆழ்வார்களும் இவ் வவதார ரஹஸ்யத்தையும் அர்ச்சாவதார வைலக்ஷண்யத்தையும் ப்ரசுரமாக வநுஸந்தித்து இதற்குப் பேரணியாகப் பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்' என்றருளிச்செய்திருப்பதும் இங்கு

அநுஸந்தேயம். 'வானரின்பம்' இத்யாதி - 'இங்கே திரிந்தேற் கிழுக்குற்றென்,' 'வழி பட்டோட வருள் பெற்று மாயன் கோல மலரடிக்கீழ் சுழிபட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத்து இன்புற்றிருந்தாலும் இழி பட்டோடும் உடலினிற் பிறந்து தன்சீர் யான்கற்று மொழிபட்டோடும் கவியமுதம் நுகர்ச்சியுறுமோ முழு துமே' என்றும், 'விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவு மடிமையெல்லாம் மண்ணுலகத்தில் மகிழ்ந் தடை கின்றனர்' என்றும், '**त्वंचेत्प्रसीदसि तवास्मि समीपतश्चेत् त्वय्यस्ति भक्तिरनघा करिशैलनाथ। संसृज्यते यदिच दासजनः त्वदीयः संसार एष भगवन् अपवर्ग एव॥**' (த்வம்சேத் ப்ரஸீ தஸி தவாஸ்மி ஸமீபதஶ்சேத் த்வையஸ்தி பக்தி ரநகா கரிசைல நாத| ஸம்ஸ்ருஜ்யதே யதிச தாஸஜந: த்வதீய: ஸம்ஸார ஏஷ பகவந் அபவர்க்க ஏவ||) என்றும் இவை முதலியன அநுஸந்தேயம்.

இங்குற வருதி - ப்ரதி பந்தகங்கள் எல்லாம் கழிந்த பிறகு பரிபூர்ணநுபவத்தைத் தருகிற அந்த நித்ய விபூதி யைக் காட்டிலும் எல்லா விதமான ப்ரதிபந்தகங்களும் இருக்கச் செய்தே அவைகளை அகிஞ்சித்கரமாக்கி பகவ தநுபவத்தைத் தருகிற இவ் விபூதியன்றே விசேஷமானது. 'அஜாயமானோ பஹுதா விஜாயதே' என்றும், 'ஸம்ப வாமி யுகே யுகே' என்றும் சொல்லுகிறபடியே கால தேச நியம மில்லாமல் கணக்கில்லாத விபவாவதாரங் களைச் செய்கிறாய் என்று யோஜிப்பாருமுண்டு. இந்தப் பக்ஷத்தில் 'அயிந்தைமா நகரி லமர்ந்தனே' என்கிற விடத்தில் அர்ச்சாவதாரம் விவக்ஷிதம். அப்பொழுது 'பேரணியாகப் பரத்வத்தைக் கண்டு போந்தார்கள்,' என்கிற ந்யாயத்

திஞல் ஸ்ரீதெய்வ நாயகனுடைய ஸௌந்தர்ய ஸௌசீல் யாதி ஸ்வரூப விக்ரஹ குணங்கள் தமக்கு உத்தேச்யமாய் இதற்குப் பேரணியாக மற்ற பர வ்யூஹ விபவாதிகளை அநுஸந்தித்தருளினர் என்பது த்யோதிதம்.

யாவரும் அறியா—என்பதனல் 'ய ஆத்மநி திஷ்டந் யம் ஆத்மா ந வேத' என்றும், 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்றும் சொல்லுகிறபடியே அந்தந்த வஸ்துக்களுக்குள் அந்தர்யாமியாய் நின்ருலும் அவைகளிஞல் அறியப்படாமல் நிற்கும் நிலே த்யோதிதம். 'மேவுரு' என்பதஞல் உபாஸகர்களால் த்யானம் பண்ணப் படுகிற ஹார்த்த ரூபம் சொல்லப்படுகிறது. 'வியப்பா' வது இவ்விடத்தில் **'ज्यायान् पृथिव्याः ज्यायान् दिवः ज्यायेभ्यो लोकेभ्यः'** (ஜ்யாயாந் ப்ருதிவ்யாஃ ஜ்யா யாந் திவஃ ஜ்யாயேப்யோ லோகேப்யஃ) என்றிருக்கிற விபுவான தானே அணுவைக் காட்டிலும் சிறிதாய் நிற்கும் நிலே ஆச்சர்யமாயிருக்கிறது. அன்றிக்கே த்ரிவிக்ர மஞன தான் வாமனஞனது போல அங்குஷ்ட ப்ரமிதஞகை இருக்கும் நிலே மிகவும் ஆச்சர்யகரமாகும். 'மிகுதி' என்பதஞல் **'निषद्वरदीर्घिकानिपतितनिजापत्यादित्सावतीर्णपितृक्रमात्'** (நிஷத்வர தீர்க்கிகா நிபதித நிஜாபத்யாதித் ஸாவதீர்ண பித்ரு க்ரமாத்) என்கிறபடியே மலபங்கம் நிறைந்த குழியில் விழுந்த பிள்ளையை எடுக்கத் தானும் ஒக்கக் குதிக்கும்படியான பிதாவைப்போல மலமய சரீரத் திலே புகுந்து நிற்கிறபடியிஞலே ஏற்படுகிற வாத்ஸல்யாதி சயம் அநுஸந்திக்கப்பட்டது.

'கொண்டிட வெம்மை'—இத்யாதி. இப்படி ஸர்வ குணங்களும் நிறைந்தவஞகவும், ஆச்ரிதர்களுடைய

தோஷத்தைப் பார்த்துக் கைவாங்காமல் ரக்ஷிப்பதிலேயே உத்யோகித்துக் கொண்டிருப்பவனாகவும், ஒருவனைப் பிடிக்க ஊரை வளைப்பாரைப்போல 'எதிர் சூழல்புக்கு' இத்யாதிகளிற்படியே ஒரு ஆச்ரிதனைப் பெறுவதற்காக ஸர்வாவதாரங்களையும் எடுப்பவனாகவும் இருந்தும் அதனாலும் பர்யாப்தி பிறவாமல் 'ஶேஷ்யே புரஸ்தாத் ஶாலாயா: யாவந்மே ந ப்ரஸீததி' என்று பரதாழ்வான் தரையில் கிடந்தாற் போல சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காகத் தரைக்கிடைக் கிடப்பதனாலும், அவர்களோடு ஸம்பந்தத்தினாலுண்டான ஹேயத்தை யோசிக்காமல் அவர்களை ரக்ஷிப்பதற்காக ஹார்த்தனாகப் புகுந்து நின்றருளின படியினாலும் வாத்ஸல்ய, ஸௌசீல்ய, காருண்யாதி கல்யாண குண மஹோததியான உம்மை விட அகிஞ்சனர்களான சேதனர்களுக்கு ரக்ஷகாந்தரம் இல்லை என்பது கைமுதிக ந்யாய ஸித்தம். இது 'அடியவர் மெய்ய' என்கிற ஸம்போதனத்தினாலும் விவக்ஷிதம். 'கண்டிலம்'—இத்யாதி-சரணாகதர்களான பாண்டவர்களுக்கு தூத்ய ஸாரத்யாதிகளைப் பண்ணியும், மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து அவர்களையே மன்னராக்கி உத்தரை தன் சிறுவனையு முய்யக்கொண்ட உயிராளனாகிய நீ ரக்ஷகனல்லது போக்கி, 'உன்னை ஸர்வ ப்ரகாரத்தாலும் ரக்ஷிக்கிறோம்' என்று வரம் கொடுத்து, அவனுடைய ஆராதனாதிகளை நெடுங்காலம் வாங்கி யுண்டு, பின்பு பூசலில் கெட்டோடினவர்களோ ரக்ஷகர்கள் என்றபடி. 'கதி' என்றது '**गम्यते इति गतिः**' (கம்யதே இதி கதி:) என்கிற வ்யுத்பத்தியினால் ப்ராப்ய பர மாகவுமாம், '**गम्यते अनेन इति गतिः**' (கம்யதே அநேந இதி கதி:) என்கிற வ்யுத்பத்தி

யினால் ப்ராபக பரமாகவுமாம். ஆக உபாயோபேயங் களிரண்டும் நீயே என்று நிஷ்கர்ஷித்தருளினா ராயிற்று. இப்படிக் கீழ் 'அருமறையின் பொருள் ஆய்ந்தெடுக்குங் கால்' என்று உபக்ரமித்ததை இங்கு உபஸம்ஹாரம் செய் தருளினபடி.

'**स्वप्राप्तेः स्वयमेव साधनतया जोघुष्यमाणः श्रुतौ**' (ஸ்வப்ராப்தே: ஸ்வய மேவ ஸாதநதயா ஜோகுஷ்யமாண: ஶ்ருதௌ), '**देवः श्रीमान् स्वसिद्धः करणमितिवदन् एकमर्थं सहस्रे** (தேவ: ஸ்ரீமாந் ஸ்வஸித்தே: கரணமிதி வதந் ஏகமர்த்தம் ஸஹஸ்ரே), '**स्वप्राप्तेः साधनंच स्वयमिति हि परंब्रह्म तत्रापि चिन्त्यम्**' (ஸ்வப்ராப்தே: ஸாதநஞ்ச ஸ்வயமிதி ஹி பரம் ப்ரம்ம தத்ராபி சிந்த்யம்) என்றிப்புடைகளில் உபய வேதாந்தங்களிலும் ஸாரமாக ப்ரதிபாதிக்கப்படும் அர்த்த மொன்றாயிருந்தது. ஆகையினால் 'ஆய்ந்தெடுக்கும் கால்... கண்டிலங் கதி யுனையன்றி மற்றொன்றும்' என்றநுஸந்தித் தாராயிற்று. 'பல்வகை நின்ற நின்படி யனைத்தும்'—இப் படி ஒரோ ரவதாரங்களே வாக்கு மனது இவைகளினால் அளவிட்டுச் சொல்லவும் நினைக்கவும் முடியாத ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையதுகள். 'பஹவோ ந்ருப கல் யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே,' 'நாந்தோஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப' இத்யாதிகளும் இங்கநு ஸந்தேயங்கள்.

அப்படிப்பட்ட உம்முடைய ஸ்வபாவங்கள் எல்லாம், 'தொல்வகை காட்டும்'—ஸ்வாபாவிகங்கள் என்கிற ப்ரகா ரத்தைத் தெரிவிக்கும். 'ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியாச' என்றன்றோ ஶ்ருதி உத்கோஷிக்கும். 'தொல்வகை'—இவ் வளவு ஸ்வரூப ஸ்வபாவங்களையும் பூர்வ பூர்வோச்சாரண

க்ரமத்தாலே அநாதியாகத் தெரிவிக்கிறது. வேதம் ப்ரதி கல்பமும் ஒரே ஆநுபூர்வீ விசிஷ்டமாகவே அநுஸந்திக்கப் பட்டு வருவதனால் எக்காலத்திலும் உம்முடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை ஒரே விதமாக ப்ரதிபாதிக்கிறது என் றபடி. 'துணிந்து' என்பதனால் அப்படித் துணிதல் மற்றொருவருக்கும் ஸம்பவிக்காது என்பது த்யோதிதம். கடலைக் கையிட்டுக் காட்டுமாப் போலேயும், திருவாய்ப் பாடியில் வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக் களைக் கறக்க இழியுமவர்கள் தேங்காதே புக்கிருந்து கறக்க ஆரம்பிப்பதைப் போலேயும் பகவானுடைய அபரிச்சின்னமான மஹிமையை ப்ரதிபாதிக்க ஆரம் பிப்பது என்றபடி. 'தூமறை'—வேதங்கள் அபௌருஷே யங்கள். ஆகையாலே புருஷ புத்தியினால் ஸம்பவிக்கக் கூடிய தோஷங்கள் ஒன்றுமில்லாதவை என்றபடி. அன் றிக்கே பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை ப்ரதிபா திக்கிறபடியினால் பரிசுத்தமானது என்றபடியாகவுமாம். 'தூமறை துணிந்து தொல்வகை காட்டும்' என்றந்வயம். வேதந்தான் தைரியத்துடன் ஆரம்பித்து உம்முடைய ப்ரகாரங்களைக் காட்டும் என்றபடி. அதாவது வேதம், 'सैषानन्दस्य मीमांसा भवति' (ஸைஷாநந்தஸ்ய மீமாம்ஸா பவதி) என்று ஆனந்தமாகிற ஒரு குணத்தை நிரூபிக்க ஆரம்பித்தது. இவ்வாறு ஆரம்பித்தும் 'उपर्युपर्यब्जभुवोऽपि पूरुषान् प्रकल्प्य ते ये शतमित्यनुक्रमात्। गिरः त्वदेकैकगुणावधीप्सया सदा स्थिता नोद्यमतोऽतिशेरते॥' (உபர்யுபர்யப் ஜபுவோபிபூருஷாந் ப்ரகல்ப்ய தே யே சதமித்யநுக்ரமாத் | கிரஸ்த்வதேகைக குணாவதீப்ஸயா ஸதா ஸ்திதா நோத்யம தோऽதிஶேரதே) என்றும், 'यतोवाचो निवर्तन्ते' (யதோ

வாசோ நிவர்த்தந்தே) என்றும் '**यदेकैकगुणप्रान्ते श्रान्ता निगमवन्दिनः**' (யதேகைக குணப்ராந்தே ஶ்ராந்தா நிகம வந்திநஃ) என்றும் சொல்லுகிறபடியே அந்த ஆனந்த குணத்தை நிரூபித்து பர்யாப்தி பெறுமல் எப்பொழுதும் ஆரம்ப தசையிலேயேதான் இருக்கிறது. இதனுல் பகவா னுடைய மஹிமையின் அபரிச்சேத்யத்வம் ஸூசிப்பிக்கப் படுகிறது.

ஆக விப்பாட்டால் த்வயத்தில் நாராயண சப்தார்த் தம் வ்யாக்யாத மாயிற்று. ஸௌசீல்யம் முதலிய கல் யாண குணங்களும் ஜகத் காரணத்வமும், ஸர்வ வேதாந்த வேத்யத்வமும் நாராயண சப்தார்த்த மாகும். 'அடைய வாண்டருளும்......வருதி' என்பதனுல் சரண சப்தார்த் தம் விவக்ஷிதம். திவ்ய மங்கள விக்ரஹம் சரண சப்தத் திஞல் உபலக்ஷிதம். இப்படி பகவானுடைய ஸம்பந்த ஸ்வாமித்வ ஸௌலப்யாதிகளை அநுஸந்தித்தவாறே தமக் குண்டான ஆகிஞ்சந்ய அநந்யகதித்வாதிகளான அதிகாரம் 'கண்டிலம்' இத்யாதியால் விவரிக்கப்பட்டது. சேஷித்வ மும் ஸர்வ சக்தித்வமும் ரக்ஷணத்தில் அவன் ப்ராப்தன் என்பதைத் தெரிவிக்கின்றன. இப்படிப் புருஷகார குண ஸம்பந்தாதிகளை அநுஸந்திப்பதனுல் உண்டாகும், உபஸர்க் கத்தோடு சேர்ந்த தாத்வர்த்தமாகிய மஹா விச்வாஸம் மேல் பாட்டில் தெரிவிக்கப்படுகிறது. (4)

அவதாரிகை.

இப்படி எம்பெருமான் தம்முடைய ஸர்வ ப்ரகாரங் களையும், அவைகளெல்லாம் வேதங்களினுலே அறியப்படக் கூடியவை என்பதையும் தமக்குக் காட்டியருள அவை

களை அநுபவித்ததனால் தமக்குண்டாகிய வ்யவஸாய ரூப ஜ்ஞாநத்தை யருளிச்செய்கிறார். இதுவும் அந்த பரஜ்ஞாந கார்யமான வ்யவஸாய மென்கிற தசையைச் சொல்லு கிறது. இப்படியே ஆழ்வாரும் பரஜ்ஞாந ப்ரகாரத்தைத் தெரிவிக்கும் தம்முடைய ப்ரபந்தமாகிய திருவாசிரியத்தில் 'பெருமாமாயனை யல்லது ஒரு மாதெய்வம் மற்றுடை யமோ யாமே' என்று தமக்காச்ரயணீயமான தெய்வம் வேறில்லை என்று தலைக்கட்டினார்.

நேரிசைவெண்பா.

தூமறையி னுள்ளந் துளங்காத் துணிவுதரும்
ஆமறிவா லார்ந்தடிமை யாகின்றோம்—பூமறை
பாரா யணத்திற் பணியு மயிந்தைநகர் [யோன்
நாரா யணனார்க்கே நாம். (5)

பதவுரை.

தூ - பரிசுத்தமான, மறையின் - இது ஜாத்யேக வசனம், வேதங்களின் என்றபடி; உள்ளம் - தாத்பர்யத்தில், தாத்பர்யார்த்தத்தில் என்றபடி; துளங்கா - சலிக்காத, ஸம்சய மில்லாத என்றபடி; (துளக்கம் - ஸம்சயம்), துணிவு - விச்வாஸத்தை, தரும் - கொடுக்கிற, ஆமறிவால் - நல்ல ஜ்ஞாநத்தினால், ஆர்ந்து - விசாரித்து, பூமறையோன் - பூவையும் மறையையும் உடையவன், அதாவது பூவில் பிறந்தவனாய் மறையை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டிருப்பவனான ப்ரம்மா என்றபடி; பாராயணத்தில் - அநுஸந்தானத்திலே, அன்றிக்கே, ப்ரம்மாவினால் பாராயணம் செய்யப்படும் ப்ரம்மாண்ட புராணத்திலே, பணியும் - ஸேவிக்கப்படுகிற, ஸ்தோத்திரம்

செய்யப்படுகிற என்றபடி; அயிந்தை நகர் - திருவஹீந்திர புரத்தில் எழுந்தருளி யிருக்கும், நாராயணனுக்கே— நாராயண சப்தத்துக்கு அர்த்தமாகிய பகவானுக்கே, நாம், அடிமை யாகின்றேம் - தாஸபூதர்க ளாகின் றேம். கேவலம் ச்ரவண மாத்திரத்தினால் உண்டான ஜ்ஞாநம் மாத்திர மன்றிக்கே, 'த்ரஷ்டு மிச்சாமி தே ரூபம்' என்று ப்ரார்த்தித்த அர்ஜுனனுக்குத் தன் படி களைக் காண்பித்தாற்போல பகவான் இவருக்கும் அவை களைக் காட்டிக் கொடுக்க, அப்படி நேரில் பார்த்த தனால் உண்டான நிச்சயத்தினால் அருளிச் செய்கிறார். அங்கு அர்ஜுனன் '**प्रसादये त्वां अहं ईशमीड्यम्**' (ப்ர ஸாதயே த்வாம் அஹ மீச மீட்யம்) என்று வணங்கினாற் போலே இவரும் 'ஆர்ந்தடிமை யாகின்றேம்' என்றரு ளிச் செய்கிறார்.

### வ்யாக்யாநம்.

தூமறை - பகவானுடைய ஸ்வரூபாதிகளை ப்ரதி பாதிக்கும் பரிசுத்தியை யுடைய என்றபடி. துளங்காத் துணிவு தரும் - யதா ஸம்பவம் உபாயத்வ ப்ராப்யத்வ உபயுக்தங்களா யிருந்துள்ள புருஷகார ஸம்பந்த குண வ்யாபார ப்ரயோஜன விசேஷங்களை அநுஸந்தித்ததனால் சங்கா பஞ்சக ரஹிதமாய் உண்டான விச்வாஸத்தைக் கொடுக்கும் என்றபடி. ஆமறிவு - 'விபீஷணோ மஹா ப்ராஜ்ஞ:' என்று கொண்டாடும் படியான ஜ்ஞாநம். அன்றிக்கே புருஷகாராதி விசேஷங்களின் அநுஸந்தானத் தினால் தானே உண்டாகக் கூடிய ஜ்ஞாநம்; அதாவது '**परः पद्माकान्तः प्रणिपतनमस्मिन् हिततमं शुभस्तत्संकल्पः**

**चुळकयति संसारजलधिं'** (பரः பத்மா காந்தः ப்ரணிபதந மஸ்மிந் ஹிததமம் ரூபः தத்ஸங்கல்பः சுளகயதி ஸம்ஸார ஜலதிம்) என்கிறபடியே தத்வ ஹித புருஷார்த்த விஷயமான நிஷ்க்ருஷ்ட ஜ்ஞாநம் என்றபடி.

பூமறையோன் பாராயணத்தில் - ப்ரம்மா ஹம்ஸ வாஹனத்தின் மேல் ஏறிக்கொண்டு பூலோக முழுமையும் சுற்றி வருகையில் 'ஸௌகந்த்ய வநம்' என்று பெயருடைய ஒரு வனத்தைக் கண்டு அதனுடைய அழகினாலும், அங்கிருந்து வரும் புஷ்ப வாஸனையாலும் ஆச்சரியத்தை யடைந்து யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, **'तं ध्यानयुजं अन्वीक्ष्य दिव्या वागशरीरिणी। प्रोवाच ध्यान संयुक्तं वने सौगन्धिके तदा॥ ब्रह्मन्नत्र हरिर्देवः सन्निधत्ते महावने। त्वादृशाहि महापुण्यमाराध्य कमलोद्भव। स्वं स्वं ब्रह्मन्! पदं प्राप्ताः त्वमप्याराधयाच्युतं॥'** (தம் த்யாநயுஜம் அந்வீக்ஷ்ய திவ்யா வாகசரீரிணீ | ப்ரோவாச த்யாந ஸம்யுக்தம் வநே ஸௌகந்திகே ததா || ப்ரம்மந் அத்ர ஹரிர் தேவः ஸந்நிதத்தே மஹா வநே | த்வாத்ருசா ஹி மஹா புண்ய மாராத்ய கமலோத்பவ || ஸ்வம் ஸ்வம் ப்ரம்மந் பதம் ப்ராப்தாः த்வமப் யாராதயாச்யுதம் ||) என்கிறபடியே 'இவ்விடத்தில் உன்னைப் போன்ற அனேகம் ப்ரம்மாக்கள் தவம் செய்து பகவானுடைய அநுக்ரஹத்தினால் ப்ரம்ம பட்டத்தை யடைந்தார்கள், என்று ஒரு அசரீரி வாக்குச் சொன்னதைக் கேட்டு, அவரும் அப்படியே அங்குத் தவம் செய்து பகவானை ப்ரத்யக்ஷீகரித்து பகவதநுக்ரஹத்தைப் பெற்றுத் தன் லோக மடைந்தார். **'तदारभ्य कृतौहीमौ तीर्थभूमिधरावुभौ। ब्रह्मनाम्ना भुवि ख्यातौ अभूतां हरिवैभवात्॥'** (ததாரப்ய க்ருதௌ ஹீமௌ

தீர்த்த பூமிதராவுபெள | ப்ரம்ம நாம்நா புவி க்யாதெள அபூதாம் ஹரி வைபவாத் ||) என்கிறபடி ப்ரம்மா தவம் செய்ததனுல் அதுமுதல் அந்த மலேக்கு ப்ரம்மாசலம் என்றும், ப்ரம்மா அநுஷ்டானம் செய்த அந்தத் தீர்த்தத்துக்கு ப்ரம்ம தீர்த்தம் என்றும் ப்ரஸித்தி யுண்டாயிற்று என்பது அந்த ஸ்தல புராணத்தில் ஸ்தலத்தைப் பற்றிச் சொல்லி யிருக்கும் வ்ருத்தாந்தம். இவர் தம்மாலும் 'तीर्थैः वृतं वृजिनदुर्गतिनाशनाद्यैः शेषक्ष्मा विहगराज विरिंचिजुष्टैः' (தீர்த்தைர் வ்ருதம் வ்ருஜிநதுர்கதி நாஶநாத்யைஃ ஶேஷ க்ஷ்மா விஹக ராஜ விரிஞ்சிஜுஷ்டைஃ) என்றும், 'ब्रह्माचले च बहुमानपदे मुनीनां' (ப்ரம்மாசலே ச பஹுமாநபதே முநீநாம்) என்றும் அநுஸந்திக்கப் பட்டிருக்கிறது. ஆகையினுல் ப்ரம்மா தவம் செய்யும் காலத்தில் த்யானிக்கப் பட்ட அஹீந்திரபுரத்தில் இருக்கும் நாராயணனுக்கு என்று யோஜிக்கவுமாம். அன்றிக்கே ப்ரம்மாவினுடைய பாராயண காலத்தில், அதாவது அஹீந்திரபுர மாஹாத்ம்யத்தையும், ஸ்ரீதேவநாதனுடைய வைபவத்தையும் நாரதருக்கு ப்ரம்மா உபதேசிக்கும்போது அங்குக் கூட விருந்து கேட்டுக் கொண்டிருந்த ருஷிகள், பணியும்—அந்த பகவானே ஸேவிக்கும் என்ருகவுமாம்.

'நாராயணனுர்க்கே' என்றது அந்ய யோக வ்யவச்சேதார்த்தம். 'துளங்காத் துணிவு' என்றதனுல் உபஸர்க்கத்தோடு சேர்ந்த தாத்வர்த்தமும், 'அடிமையாகின்ருேம்' என்பதனுல் சரண சப்தத்தோடு சேர்ந்த க்ரியா பதத்தின் அர்த்தமாகிய ஸாங்க ப்ரபதநமும் வ்யாக்யாதமாயிற்று. எங்ஙனே யென்னில் 'அடிமை யாகின்ருேம்' என்று ஸ்வரூப பல பரஸமர்ப்பணங்களில் ஒன்

ருகிய ஸ்வரூப ஸமர்ப்பணத்தைச் சொல்லு மிடத்தில் அத்துடன் சேர்ந்த மற்ற இரண்டும் உபலக்ஷிதங்களாகக் கடவன. இத்தால் திருமந்த்ரார்த்தமும் அடைவே வ்யாக்யாதம். 'நாராயணனுர்க்கே நாம்' என்பதனுல் ப்ரணவார்த்தமும் நாராயண சப்தார்த்தமும், ப்ரம்மாதி ஸேவ்யத்வம் சொல்லப்பட்ட படியினுல் அந்தப் பதத்தின் அர்த்தமாகிய பரத்வமும், 'அபிந்தை நகர்' என்பதனுல் ஸௌலப்யமும், இவ்விரண்டு குணவர்க்கங்களோடு கூடிய வஸ்துவே நாராயண சப்த மென்பதும், திவ்ய மங்கள விக்ரஹமும், ஆமறிவால் ஆர்ந்து' இத்யாதியால் அஹங்கார மமகார ரூபங்களான அவித்யாதி நிவ்ருத்தியைச் சொல்லுகிறபடியினுலே நமஶ் ஶப்தார்த்தமும், 'அடிமையாகின்றேம்' என்கிற விடத்தில் அடிமையின் கார்யமாகிற கைங்கர்யம் விவக்ஷித மாகையால், சதுர்த்தியின் அர்த்தமும் சொல்லப் பட்டதாகிறது. 'நாம்' என்பதனுல் ப்ரணவ நமஸ்ஸுக்களில் இருக்கும் மகாரார்த்தமும், பஹுவசனத்தினுல் நார சப்தார்த்தமும் சொல்லப் பட்டதாகிறது. அன்றிக்கே இப்படிப் பட்ட பகவத் தாஸ்யத்தை யதாவத்தாக அடைந்திருக்கும் தம்மிடத்திலுண்டான கௌரவத்தினுல் பஹுவசனம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறதாகவுமாம். (5)

## அவதாரிகை.

இப்படி எம்பெருமானுடைய அநுக்ரஹ விசேஷத்தினுலே ஸ்வரூப ஸ்வபாவாதிகளை யுள்ளபடியே கண்ட இவர் இவ்வாறு கண்ட அப்பொழுதே ஆலோகந ஆலா

பாதி விசேஷ கடாக்ஷாதிகளைப் பெற வேண்டு மென்று தமக்குண்டான அபிநிவேசாதிசயத்தை அந்யாபதேசத் தாலே பேசுகிருர். கீழில் 'மொழிவார் மொழிவன' என்கிற பாட்டில் பிறந்த பரம பக்தியும் பரபக்தி என்று சொல்லும்படி தமக்குண்டான தீவ்ரமான அபிநிவேசாதி சயத்தை அருளிச் செய்கிறபடியினுல் பரம பக்தியின் அவஸ்தா விசேஷத்தை யருளிச் செய்கிருர் இப்பாட்டில். அந்யாபதேசத்தில் நாயகனுடைய மேன்மையையும், 'என் னில் முன்னம் பாரித்து,' 'நங்கள் குன்றம் கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கி' இத்யாதிகளிற்படியே தம் முடைய ஸம்ஶ்லேஷத்துக்காக ஏகாந்த ஸ்தலம் பார்த்து உத்யுக்தராக நிற்கிறபடியையும், **'वचसा सान्त्वयित्वैनं लोचनाभ्यां पिबन्निव'** (வசஸா ஸாந்த்வயித்வைநம் லோச நாப்யாம் பிபந்நிவ) என்கிறபடியே விடா யெல்லாம் தீரும் படி விசேஷ கடாக்ஷம் செய்யும்படியையும் 'மழையில்' என்னும் பாட்டில் அநுஸந்தித்து ப்ரத்யக்ஷமாக அநு பவித்து, அப்பொழுது தாமும் அவரோடு ஸம்ஶ்லேஷிக்க வேண்டு மென்னும் தீவ்ரமான அபிநிவேசத்துடன் நிற்க, அப்பொழுதே அவன் அப்படிச் செய்யப் பெருமையால் வ்யஸனமும், அவனுடைய ஸௌலப்யத்தையும், தம்திறத் தில் செய்த விசேஷ கடாக்ஷத்தையும், தமக்காகவே ஸாந் நித்யம் செய்தருளி யிருக்கும்படியையும் கண்ட ப்ரீதியின் மிகுதியினுல் ப்ரீதியுமாகக் கலங்கோடுகிற தம்முடைய தசை தமக்கும் பேச நிலமல்லாமையாலே அதைத் தோழிமார் பாசுரத்தாலேயாதல், தாய்மார் பாசுரத்தாலே யாதல் அருளிச்செய்கிருர் 'ஆர்க்கும்' இத்யாதியால்.

## கட்டளைக் கலித்துறை.

ஆர்க்குங் கருணை பொழிவா னயிந்தையில் வந்தமர்ந்த
கார்க்கொண் டலைக்கண்ட காதற் புனமயிற் கண்பனியா
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க் கும்வெள்கி வெவ்
[வுயிர்க்கும்
பார்க்கின் றவர்க்கிது நாமென்கொ லென்று பயிலு
[வமே. (6)

## பதவுரை.

ஆர்க்கும் - எல்லாப் ப்ராணிகளுக்கும், கருணை பொழிவான் - க்ருபையை வர்ஷிப்பானுய்க்கொண்டு, வர்ஷிப்பதற்காக என்றபடி; அயிந்தையில் - திருவஹீந்திர புரமென்கிற திவ்ய தேசத்தில், வந்து - ஆவிர்பவித்து, அமர்ந்த - ஸ்திரமாக வஸித்துக் கொண்டிருக்கிற, கார்க் கொண்டலை - கறுத்த மேகத்தை, அல்லது வர்ஷா காலத்தில் உண்டான மேகத்தை, கண்ட காதல் - ப்ரத்யக்ஷமாகப் பார்த்ததனுல் உண்டான அநுராகத்தையுடைய, புனமயில் - புனத்தில் இருக்கும் மயில், அதாவது தன் நிலமான காட்டிலே யதேச்சையாகத் திரியும் மயில் போன்ற இப் பெண்பிள்ளை யென்றபடி; இந்த இரண்டு த்ருஷ்டாந்தமும் க்ரியாத்ய வஸானமாய் அருளிச் செய்தபடி; கண் - நேத்ரங்கள், பனியா - நீர்த் துளிகளை வர்ஷியா நின்று கொண்டு, வேர்க்கும் - சரீர மெங்கும் ஸ்வேதத்தை யடையா நின்ருள், முகிழ்க்கும் - மயிர் கூச்சலை யடையாநின்ருள், வெள்கி - வெட்கப்பட்டு, வெவ்வுயிர்க்கும் - உஷ்ணமான பெருமூச்சை விடாநின்ருள், பார்க்கின்றவர்க்கு - பார்க்கிற உங்களுக்கு, நாம், இது என் கொலென்று - இத் தசை

என்ன வென்று, பயிலுவம் - பதில் சொல்லக் கடவோம் என்றபடி.

வ்யாக்யாநம்.

'ஆர்க்கும்' இத்யாதி - தாம் திரு நாட்டிலே இருக்கில் ஒருவாருகக் கரை சேர்ந்தவர்களுக்கே உதவும்படியாயிருப்பதை நினைத்து, அது தம்முடைய ஸௌலப்யத்துக்குப் பொருந்தாது என்று '**अनालोचितविशेषाशेषलोकशरण्य**' (அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய) என்கிறபடியே ஸகலரும் தன்னை யாச்ரயித்து உஜ்ஜீவிக்கும்படி அவ்விடம் விட்டு இவ்விடம் வந்து ஆவிர்பவித்தான். அப்படி யாவருக்கும் கருணை பொழிவதற்கென்று தான் ஸங்கல்பித்ததில் இவள் ஒருத்தி நீங்கினவளோ? '**कौसल्या लोकभर्तारं सुषुवे यं मनस्विनी। तं ममार्थे सुखं पृच्छ शिरसा चाभिवादय**'॥ (கௌஸல்யா லோக பர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ | தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய ||) என்றாள் பிராட்டி. 'பூமியில் உள்ள பெண்களெல்லாம் தம் தாமுக்கு நரக நிஸ்தாரமுண்டாவதற்கும், ரக்ஷிப்பதற்குமாக வென்று நோன்பு நோற்றுப் பிள்ளையைப் பெறுவார்கள். எங்கள் மாமியார் மிகவும் தாராளமான மனதை யுடையவளாகையால் லோகத்தை யெல்லாம் ரக்ஷிக்கக் கடவராகிய ஒரு பிள்ளை வேண்டுமென்று நோன்பு நோற்றுப் பெற்றாள். அப்படி யிருக்க அவளுடைய ஸங்கல்பத்தில் குறைவாலோ, லோக சப்தத்துக்குள் நான் ஒருத்தி யடங்கிக் கிடக்காமையாலோ எதனால் பகவான் என்னை உபேக்ஷிப்பது என்று அவரைக் கேளும்' என்றாள். பெரிய முதலி

யாரும் 'மதேக வர்ஜம் கிமிதம் வ்ரதம் தே' என்றருளிச் செய்தார்.

'வந்து' என்பதனல் நித்ய ஸூரிகள் திரள் திரளாய் நின்று ஸ்தோத்ராதிகளையும் கைங்கர்யாதிகளையும் செய்து கொண்டு நிற்கச் செய்தே, 'சூட்டு நன்மாலைகள் தூயன வேந்தி விண்ணோர்கள் நன்னீர் ஆட்டி யந்தூபந் தரா நிற்கவே யங்கோர் மாயையினல் ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந் திமிலேற்று வன்கூன் கோட்டிடை யாடினை கூத் தடலாயர்தம் கொம்பினுக்கே' என்கிற படியே அவர்கள் பண்ணும் ஸமாராதனத்தில் அவர்களுக்குத் தெரியாதபடி வஞ்சித்து விட்டு, தூபத்தின் புகையூடே ஒரு மிக்கத் தான் கிளம்பி நப்பின்னைப் பிராட்டியோடு ஸம்ஶ்லேஷிப்பதற்காகத் திருவாய்ப் பாடியில் வந்து ஆவிர்ப்பவித்தாற் போலத் தான் ஆவிர்ப்பவித்த தற்குப் ப்ரயோஜனமாகிய இவளுடைய ஸம்ஶ்லேஷத்தை இழக்கும்படி யாகிறதோ என்று அதிசங்கைப் படுகிருள். அன்றிக்கே, தனக்காகவே வந்தமை தெரிந்தும் இப்படி இவள் இப்பாடு படுவது உசிதமோ என்கிருளாகவுமாம்.

'அமர்ந்த' என்பதனல் ராம க்ருஷ்ணுத் யவதாரங்கள் போலக் கால விசேஷத்தில் தீர்த்தம் ப்ரஸாதித்துப் போகாதே 'சேஷ்யே புரஸ்தாத் ஶாலாயா: யாவந்மே ந ப்ரஸீததி' என்கிறபடியே ஸ்ரீபரதாழ்வான் வளைப்புக் கிடந்தாப்போல இவளொருத்தியைப் பெறுவதற்காக ஸ்தாவர ப்ரதிஷ்டையாக நின்றருளினபடியை அவன் காட்டினபடியே 'அயிந்தை மாநகரி லமர்ந்தனை யெமக்காய்' என்றநுஸந்தித் திருக்கச் செய்தே இவள் இப்பாடு படுகிருள் என்று கருத்து.

'கார்க் கொண்டல்' இத்யாதி - 'இலங்கொலி நீர்ப் பெரும் பௌவம் மண்டியுண்ட பெருவயிற்ற கருமுகிலே யொப்பர் வண்ணம்' என்கிறபடியே ஸாதாரண மேகம் போலன்றிக்கே ஸமுத்திர ஜலத்தை முழுமையும் தரை காண வுண்டு அதனாலே கருமை மிகுந்த மேகம் என்றபடி. அன்றிக்கே உள்ளிருக்கும் ஜலத்தை வர்ஷித்தவாறே வெளுத்துக் காட்டும் ஸாதாரண மேகம் போலின்றிக் 'காரொப்பார் கருணைமழை பொழிந்திடுங்கால்' என்கிற படியே தயா வர்ஷத்தை வர்ஷியா நிற்கச் செய்தே மேல் மேல் கருமை மிகுத்துக் காட்டும் மேகம் என்றபடி. வர்ஷா காலத்து மேகம் என்று பொருளான பொழுது அகால மேகம்போல் சிற்சில விடங்களில் வர்ஷித்து விட்டு நின்று விடுகை யன்றிக்கே ஆகாசாவகாசமெல்லாம் அடைத்துக் கொண்டு பள்ளம் மேடு என்றும் ஜலம் நிலம் என்றும் வேறுபாடின்றி ஒக்க க்ருபையை வர்ஷிக்கிற மேகம் என்றபடி. 'அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய' என்றன்றோ பூர்வர்கள் அநுஸந்தித்தபடி.

கண்டகாதல் - பார்த்த மாத்திரத்தினாலேயே உண்டான அநுராகம், அயலார் சொல்லக் கேட்டிருக்கச் செய்தேயும் பரவசை யாகிநின்ற இவளுக்குக் கண்ட பின்பு காதல் மிகுந்திருக்கை சொல்ல வேண்டுமோ? 'தொலைவில்லி மங்கலங் கொண்டு புக்கு உரைகொளின் மொழியாளை நீருமக் காசையின்றி யகற்றினீர்' முதலியவை இங்கு அநுஸந்தேயம். 'அவ்வூர்த் திருநாமம் கற்றதற் பின்னையே' என்கிறபடியே காணாமல் நிற்கச் செய்தே ப்ராவண் யாதிசயத்தை யுடைய இவளுக்கு அவனுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளைக் கண்ணாரக்

கண்ட பிறகு காதலின் மிகுதியைச் சொல்லவேண்டுமோ? ஆழ்வாருக்கு பகவான் 'முன்னி வந்தவன் நின்றிருந் துறையும் தொலைவில்லி மங்கலம்' போலே காணும் இவருக்கு பகவான் முன்னிவந் துறைகின்ற ஊர் திரு வஹீந்திரபுரம் என்றதாயிற்று.

இங்கு பகவானைக் கொண்டலாகவும் இவளைப் புன மயிலாகவும் ரூபகாதிசய அணியாக எடுத் துரைத்தது பார்த்த மாத்திரத்திலேயே வேறு காரணமில்லாமல் அநுராகம் உண்டானமையைத் தெரிவிப்பதற்காக. கார்க் கொண்டலைக் கண்டு புனத்திலிருக்கும் மற்றைய மயில்கள் எல்லாம் களித்து ஆலாநிற்க இப் புனமயில் ஒன்றுமே இப் பாடு படும்படி யாயிற்று என்றபடி. மேகத்தைக் கண்டவு டன் மயிலுக்குச் சந்தோஷம் உண்டாவது ஸ்வாபாவிக மாயிருக்க, இவளுக்கு இப்படி விரோதமான ஸ்வபாவம் உண்டாவதே என்று க்லேசிக்கிறபடி.

'கண் பனியா' இத்யாதி— கண்களால் ஜலங்களைப் பெருக்குவது, ரோமாஞ்சத்தை யடைவது முதலிய இவளு டைய வ்யாபாரங்கள் எல்லாம் ஒவ்வொன்றுமே ஆகர் ஷகமா யிருக்கிறபடியினால் அவைகளைத் தனித்தனியே அநுஸந்திக்கிருள். இவளுக்கு இது துக்கமா யிருந்ததே யாகிலும் திருத்தாயார் தொடக்கமானருக்கு திவ்ய ஸௌந் தர்யத்தை யுடையவளான இவளுடைய வ்யாபார மெல் லாம் ஆகர்ஷகமா யிருக்கத் தட்டில்லை. பெருமாள் காடேற வெழுந்தருளும் பொழுது துடித்துக் கொண்டு வரும் கௌஸல்யா தேவியாரைப் பெருமாள் பிரிந்து பார்க்கும் பொழுது வல்லார் ஆடினாற்போல பெருமாளுக்கு ஆகர்ஷ கமா யிருந்ததை நினைந்து, 'ந்ருத்யந்தீ மிவ மாதரம்' என்

றன்றோ மகர்ஷியும் அருளிச் செய்தான். திருவடியும் பிராட்டியை அசோக வனிகையில் கைதொழுது, '**किमर्थं तव नेत्राभ्यां वारि स्रवति शोकजम्। पुण्डरीकपलाशाभ्यां विप्रकीर्णमिवोदकम्॥**' (கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி ஶோகஜம் | புண்டரீக பலாஶாப்யாம் விப்ரகீர்ண மிவோதகம் ||) என்று, கண்ஜலம் பெருக்கிக் கொண்டு நிற்கிறபடியை 'கிமர்த்தம்'—இது யாருடைய கண்களை ஸபலமாக்குவதற்காக? பெருமாளன்றோ இவ்வழகைக் கண்டு அநுபவிக்க ப்ராப்தர்! என்று போக்யமாக வன்றோ அநுபவித்தது.

பார்க்கின்றவர்க்கு - வெளியே நின்று இவளுடைய வ்யாபாரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு, அதாவது உள்ளோடுகிற தசை இன்ன தென்றறியாமல் பாஹ்யமான வ்யாபாரங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு, என்கொல் - இது உசித மென்னவோ? அல்ல வென்னவோ? இவளுடைய பருவத்துக்கு இது தகுதி யல்ல என்னவோ? அல்லது பகவத் ப்ரபாவ விசேஷத்தைப் பார்த்துத் தகும் என்னவோ? இவள் அநுபவிக்கும் விஷயத்தில் ஏக தேசத்தையும் அறியாதிருக்கிற உங்களுக்கு நான் எதைச் சொல்வேன் என்றபடி. 'என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்' என்றார் ஆழ்வாரும்.

மஹாராஜர், சக்ரவர்த்தித் திருமகனுக்குப் பிராட்டியினுடைய நூபுரம் முதலிய திருவாபரணங்களைக் காட்ட, அவர் அவைகளை எடுத்துத் தம்முடைய திருமார்பிலும், திருக்கண்களிலும் ஒற்றிக் கொண்டு கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு நிற்கும்போது அதைக்கண்ட திருவடி விஷய வைலக்ஷண்யத்தை யறியாதவ ராதலினாலும், ப்ரம்மசாரி

யாகையாலே ப்ரணய ரஸம் தெரியாதவ ராதலினுலும், ஜாதியில் கபித்வத்தை யுடையவராதலினுலும், 'ராஜபுத்திரர் களா யிருக்கும் இவர்கள் இவ்வாறு துக்கிப்பானேன்? இவர்களுக்குக் கிடைக்காதது உண்டோ? 'தேஶே தேஶே களத்ராணி' என்றன்ருே சொல்லப்படுகிறது. ஆகையால் துர்லபமான விஷயத்தை விட்டு விட்டு அதை விட உத்தமமான விஷயம் மற்ருென்றை ஸ்வீகரிப்பதை விட்டு இவ்வளவு அதிமாத்திரம் வ்யஸனப்படுவது தீரர் களாயும் சூரர்களாயும் பிறந்துள்ள இவர்களுக்கும், இவர் கள் பூண்டிருக்கும் இந்தத் தாபஸ வேஷத்துக்கும் தகுமோ' வென்றிருந்தவரே, பிராட்டியை ஸேவித்த வநந்தரம், 'दुष्करं कृतवान् रामः हीनोयदनया प्रभुः। धारयत्यात्मनो देहं न दुःखेनावसीदति ॥' (துஷ்கரம் க்ருதவாந் ராமஃ ஹீநோ யதநயா ப்ரபுஃ| தாரயத் யாத்மநோ தேஹம் நதுக்கேநாவஸீததி ||) என்ருர். பெருமாள் செய்தது அநு சிதம் என்பதே அப்பொழுதும் இப்பொழுதும் இவர் நினைவு. அப்பொழுது கண்ணீர் விட்டது அநுசிதம் என்றி ருந்தார். இப்பொழுதோ சரீரத்தை வைத்துக் கொண் டிருப்பதே அநுசிதம் என்கிருர்.

'துஷ்கரம்'—அகடித கடநா சக்தியை யுடையவ ராகையால் தான் நினைத்தது தலைக்கட்டும்படியான ஸாமர்த்யத்தோடு கூடிய தனக்கும் செய்ய முடியாத கார்யத்தைச் செய்தார். எங்ஙனே யென்னில்—தன் வடி வில் ப்ரம்மசர்யத்தை அபிநயிக்கும் தசையிலும் இவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாமையினுல் 'க்ருஷ்ணஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷஸ்தலாலயாம்,' 'பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரதமாஶ்ரமித்வம் க்ருஷ்ணஜிநம் யவநிகாம்

க்ருதவாந் ப்ரியாயா:' முதலியவைகளின்படியே அவ ளுக்கு ஒரு திரையிட்டு மறைவு செய்துகொண்டாவது போகும்படி இருந்தது. அம்மாதிரி நிலைமையிலுங்கூடத் தம்மால் செய்ய முடியாத கார்யத்தை யன்றோ இப் பொழுது செய்தார். இப்பொழுதான் வருவதொரு தப்பென்ன? இனியாவது சீக்ரத்தில் ராவணனை ஸம் ஹரித்து விட்டுப் பிராட்டியை அங்கீகரித் தருளுமாகில் எல்லாம் ஸரியாகிவிடுமே என்னவருளிச் செய்கிறார்— 'க்ருதவாந்' என்று. ஒரு க்ஷணகாலம் இவளை விட்டுப் பிரிந்து தரித்திருப்பதிலும் ஸாஹஸமான க்ருத்ய முண்டோ? அப்படி தரித்திருந்ததனாலே அஶக்யங்களான ஸர்வ கார்யங்களையும் தீரச் செய்யப் பெற்றார் அன்றோ என்கிறார். ராம:—'பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்' என்று ருஷி சொல்லியதைக் கொண்டு நம்மைக் கண்டவர்க ளெல்லாரும் நம் வடிவழகிலே மயங்குவா ரென்று தம்மையே போரப் பொலிய நினைத்தாரே யன்றித் தம்முடைய இந்த வடிவழகை யெல்லாம் தன்னுடைய கடைக்கண் பார்வைக்கும் போதாதபடி செய்யக் கூடியவளாகையினால் 'தஞ்சேய மஸிதேக்ஷணா' என்னத்தகுந்த இவள் பெருமையை யறிந்திலர். 'ஹீநோ யதநயா'—இவளை யன்றோ தான் பிரிந்தது! இவ ளைப் பிரிந்திருப்பது தமக்குக் குறைவென்பதையும் அறிந் திலர். '**श्रद्धया देवो देवत्वमश्नुते**' (ஶ்ரத்தயா தேவோ தேவத்வ மஶ்நுதே), 'திருவில்லாத் தேவரைத் தேறேல் மின் தேவு' முதலியவைகளையும் ஆராய்ந்தாரில்லை. 'அப்ர மேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா' என்று சத்ருக்களாகிய மாரீசாதிகள் சொன்னதும்கூட இவருக்கு

நிலமில்லாமல் போகும்படி யாயிற்றே. 'ப்ரபு:'—யானை ஏறவும், குதிரை ஏறவும், ரதங்களை நடத்தவும், சத்ருக்களோடு எதிர் நின்று போர் புரியவும் கற்றரேயன்றி ச்ருங்காரத்தில் புதியது முண்டிலர். ப்ரணய ரஸம் ஒரு சிறிதும் அறியாதவர். 'रामस्तु सीतया सार्धं विजहार बहून् ऋतून् । मनस्वी तद्गतस्तस्याः नित्यं हृदि समर्पितः ॥' (ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந் | மநஸ்வீ தத்கதஸ் தஸ்யா: நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித: ||) என்று ருஷி சொன்னவரை யன்றே இவர் இப்படி இகழ நினைப்பது. ராமஸ்து—கீழெல்லாம் 'தநுர்வேத விதாம் ஶ்ரேஷ்ட:,' 'வேத வித்யா வ்ரதஸ்நாத:,' 'कथयन्नास्तवैनित्यं अस्त्रयोग्यान्तरेष्वपि' (கதயந் நாஸ்தவை நித்யம் அஸ்த்ர யோக்யாந்தரேஷ்வபி) என்று சொல்லுகிறபடியே தநுர் வேதம், ஷடங்கங்கள், வேதங்கள், நீதி சாஸ்திரங்கள் என்னும் இவைகளைக் கற்றரென்று சொல்லிக்கொண்டு போந்தான் மஹர்ஷி. பிராட்டியை மணம்புரிந்த வநந்தரம் அவற்றை யெல்லாம் பொய்யாக்கி இத்தனை காலமும் இவர் வாத்ஸ்யாயனம் கற்றர் என்று சொல்லும்படி யாயிற்று. அப்படிப் பட்ட ரஸிகனையன்றே இங்குத் திருவடி 'ப்ரபு:' என்று நிந்திக்கிறது, விஷய வைலக்ஷண்யத்தில் ஈடுபட்டமை தோற்ற! ஆகிலும் அப்படிப் பட்ட குணதிகரான பகவானைப் பிரிந்து பிராட்டியும் தம்முடைய திருமேனியைத் தரிப்பது மாத்திரம் உசிதமாகுமோ வென்னில் அருளிச்செய்கிறர், 'தாரயத் யாத்மநோ தேஹம்' என்று. ஏதானும் பரதந்த்ரமான தேஹமோ இது? 'धिगस्तु खलु मानुष्यं धिगस्तु परवश्यतां । न शक्यं यत्परित्यक्तुं आत्मच्छन्देन जीवितम् ॥' (திகஸ்து கலு மாநுஷ்யம்

திகஸ்து பரவஶ்யதாம் | ந ஶக்யம் யத் பரித்யக்தும் ஆத்மச் சந்தேந ஜீவிதம் ||) என்று சொன்ன பிராட்டியின் சரீரம் போன்றதோ இவருடையதும்? இது ஸ்வதந்த்ரமாக நினைத்தபோது விடக்கூடியதொன்றன்றோ? 'इच्छागृहीताभिमतोरुदेहः' (இச்சா க்ருஹீதாபிமதோரு தேஹஃ), 'ஸம்பவாம் யாத்ம மாயயா' என்கிறபடியே இது தான் ஸங்கல்பித்தபோது ஆக்கவும் அழிக்கவும் கூடிய தேஹமன்றோ? அதுவுமன்றிக்கே, கர்மபலங்களான ஸுக துக்கங்களை அநுபவிப்பதற்காக ஏற்பட்ட பரதந்த்ரர்களான சேதனர்களின் சரீரம் போலன்றே இதுவும். 'ஆத்மநோ தேஹம்'—ஸ்வாஸாதாரண அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹமன்றோ இது? அப்படியானால் அக்னி ப்ரவேச விஷ பாந ப்ருகுபதனுதிகளில் எதைச் செய்து விடுவதென்னில், அழகுதான் இது! அப்படி வேறென்றினல் விடுவதிலும் தரித்துக் கொண்டிருப்பதே நன்றன்றோ! அப்படி விடில் அவருடைய ப்ரணயித்வத்துக்கு ஒரு நமஸ்கார மாமித்தனை. பிரிவாற்றுமையினல் உண்டான துக்கத்தினலேயே கரைந்து விடவேண்டாவோ? என்கிறர்—'ந துக்கேந அவஸீததி' என்று.

ஆகையினல் உள்ளோடுகிற தசையும் விஷய வைலக்ஷண்யமும் தெரியாத வரையில் இத்தசை நம்முடைய விசாரத்துக் குள்படாது என்கிறள்.

ஸ்த்ரீ பாவத்துக்கும் இவளுடைய பருவத்துக்கும் குலமர்யாதைக்கும் இப்படிப் படுகை உசிதமன்றேயென்னில், 'தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்' என்ற பிராட்டியையும், 'तथागतां तां व्यथितामनिन्दितां' (ததா கதாம் தாம் வ்யதிதாமநிந்திதாம்) என்றுனன்றோ மஹர்ஷி. 'ததா கதாம் தாம்'

என்று ஆச்ரயத்தின் அளவில்லாமையையும் தன் வாக்குக்கு எட்டாமையையும் நினைத்தபடி. அநிந்திதாம்— இவ் விஷயத்தைப் பிரிந்து இவ்வளவு படாவிடில் சிஷ்டகர்ஹை யுண்டாகும் என்றபடி. அன்றிக்கே 'नञ्' (நஞ்) விரோதத்தைக் காட்டிக் கொண்டு ஸ்தோத்ரம் பண்ணத் தகுந்தவள் என்பதைக் காட்டுகிற தாகவுமாம். மண் தின்று வந்த வைவர்ண்யம் போலன்று குணாதிக விஷயத்தைப் பிரிந்ததனால் உண்டான வைவர்ண்யம். ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கு ஸம்பவித்த ப்ராண பர்யந்தமான ஆபத்து 'பரமாபத மாபந்ந:' என்று ச்லாக்யமாகக் கொண்டாடப் பட்டது. ஆகையினால் இது நம்முடைய ஔசித்ய விசாரத்துக்கு நிலமல்ல. ஆகையினால் இதை என்னவென்று விசாரிப்போம் என்கிறாள் திருத்தாயார்.

அன்றிக்கே, வியர்த்தல், அரும்புதல், மயிர் நெறித்தல், விதிர் விதிர்த்தல், நாணுதல், பெருமூச்சு விடுதல் என்னுமிவைகள் வ்ருத்த ஸம்ப்ஸ்லேஷ சின்னங்களாகையினால் இவைகளைக் கொண்டு ஸம்ப்ஸ்லேஷ ரஸம் உள்ளோடுகிறதென்று சொல்லவோ? அல்லது வெவ்வியதான பெருமூச்சைக் கொண்டு விப்ஸ்லேஷம் நடக்கிறதென்கவோ? என்கிறாளாகவுமாம். 'ஔந்நித்ர்யம் தௌர்பல்யம் சிந்தாலஸத்வம் ஸநிச்வஸிதம் | மம மந்தபாகிந்யா: க்ருதே ஸகித்வாமபி அஹஹ பரிபவதி ||' என்று மம்மடனும் தௌர்பல்யத்தையும், அலஸத்வத்தையும், நிச்வாஸத்தையும், ரோமாஞ்ச ஸ்வேதாதிகளையும் ஸம்போக சின்னமாக உதாஹரித்தான். 'परस्परं पाणिसरोजयोगात् बभूवतुः तौ पुलकाञ्चितांगौ। अस्विद्यतांच' (பரஸ்பரம் பாணிஸரோஜயோகாத் பபூவது: தௌ புலகாஞ்சிதாங்கௌ | அஸ்வித்

யதாம்ச) என்றே இவர் தாமும் ஸ்ரீ யாதவாப்யுதயத்தில் அருளிச் செய்துள்ளார். 'கண் பனியா' என்பதனால் கண்ணீரின் சீதளத்வம் சொல்லப் படுகிறபடியினால் இது ஆனந்த பாஷ்பமா யிருக்க வேண்டு மென்று தோன்றுகிறது.

ரோமாஞ்சத்தை யடைதலும், நாணமும், நவோப போகத்தை ஸூசிப்பிக்கின்றன. 'நவ ஸங்கம ஸவ்ரீடா:' என்றான் ருஷியும். நிஶ்வாஸத்தில் உண்டான ஔஷ்ண்யம் விச்லேஷத்தைத் தெரிவிக்கிறது. 'தஹந்தீ மிவ நிஶ் வாஸை: வ்ருக்ஷாந் பல்லவ தாரிண:' என்று ஆதிகாவ்யத் திலும் சொல்லப்பட்டது. ஆகையினால் இன்னபடிதான் என்று நிஷ்கர்ஷிக்க முடியவில்லை. இது பாஹ்ய ஸம்ச் லேஷ மில்லாமையால் கடைசியில் இவ்வளவு ஆனந்தா நுபவமும் என்னவாகி முடியுமோ என்கிறாளாகவுமாம். '**भर्तारमिव संप्राप्ता जानकी मुदिताऽभवत्**' (பர்த்தார மிவ ஸம்ப்ராப்தா ஜாநகீ முதிதாऽபவத்) என்றபடி கணையாழி யைக் கண்ட பிராட்டி அதோடு சேர்ந்த திருக்கைகளை யும், விரல்களையும் நினைத்து அவை தன்னை அணைய வந்த வைகளாகக் கொண்டு, தூமுறுவல் நகை யிறையே தோன்றப் புன்னகை செய்து மெல்விரல்கள் சிவப்பத் தடவி மென்கிளிபோல் மிக மிழற்றிச் சில வ்யாபாரங் களைச் செய்யா நின்றாள். இது அநந்தர க்ஷணத்தில் எப் படி முடியுமோ என்றான் ருஷியும். அப்படியே இங்குத் திருத்தாயாரும் இந்த விசதமான மாநஸாநுபவம் தன் னளவிலே நில்லாமல் பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை யைப் பிறப்பித்து அது கிடையாமலிருக்கும் பொழுது அது நல் முடிவாக முடியு மென்று நினைக்கக் காரண

மில்லாமையால் என்னவாகி முடியுமோ என்கிருள் என்றபடி. (6)

அவதாரிகை.

இப்படி இந்த அதிமாத்ர ப்ராவண்யம் பாஹ்ய ஸம்ச்லேஷத்தில் ஆசையை வ்ருத்தி பண்ணவும், அத்தகைய ஸம்ச்லேஷம் கைகூடாமையால் மிகவும் துக்கிதராய் இப்படித் தமக்கு அபிநிவேசம் இருக்கச் செய்தேயும் அவன் முகம் கொடாமைக்குக் காரணம், என்ன வென்று சிந்தித்து 'மழையில்' என்று தொடங்கும் பாட்டில் அவனுடைய குணங்கள் பூர்ணமாக அநுபூதங்களாகையால் அவனிடத்தில் குணஹானி என்ன வொண்ணுது. ஆகையால், '**धर्मापदेशात् त्यजतश्च राज्यम् मांचाप्यरण्यम् नयतः पदाति**' (தர்மாபதேசாத் த்யஜதஶ்ச ராஜ்யம் மாஞ்சாப்ய ரண்யம் நயதః பதாதிம்), '**ममैव दुष्कृतं किंचित् महदस्ति न संशयः। समर्थावपि तौ यन्मां नावेक्षेते परन्तपौ॥**' (மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி நஸம்ஶய꞉| ஸமர்த்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ||) என்றபடி அசோக வனிகையில் பிராட்டி துக்காதிசயத்தினுல் 'ஸமர்த்தராயும், ஸர்வஜ்ஞராயும், பரமகாருணிகராயும், தம்மை விட்டுப் பிரிந்து க்ஷண காலமும் நான் தரியேன் என்பதை அறிந்தவராயும் இருந்தும் பெருமாள் என்னை உபேக்ஷித்திருப்பதற்குக் காரணம் என்னுடைய பாபமே யன்றி வேறில்லை' என்று அநுஸந்தித்தது போல் தம்முடைய அநதிகாரித்வமே காரணம் என்று சங்கிக்கிருர்.

'**ममैव**'—'**नमन्थरायाः**' என்ருரம்பித்து "கூனி வேலைக்காரி யாகையாலும் அவள் சொல்லியவற்றை யெல்

லாம் கேட்கவேண்டு மென்கிற நிர்ப்பந்தம் கைகேயிக்கில்லையாகையாலும் அது கூனியின் தோஷமல்ல. கைகேயி தன்னுடைய புத்ர வாத்ஸல்யத்தினுல் ஏகாந்தத்தில் சொன்னது அதைக் கேட்டு ஸ்வதந்திரனுன சக்ரவர்த்தி பெரியதிரளில் தான் செய்த நிர்ணயத்தை மாற்றுவதற்குச் சரியான ஹேதுவாகாதாகையினுல் அது கைகேயின் தோஷமுமாகாது. முதல்நாள் 'ராஜ்யம் உன்னுடையது' என்று ராமனுக்கு ப்ரதிஜ்ஞை செய்து விட்டபடியினுல், **'यदि मे राघवः कुर्यात् वनं गच्छेति चोदितः। प्रतिकूलं प्रियं मे स्यात् नतु वत्सः करिष्यति॥'** (யதிமே ராகவஃ குர்யாத் வநம் கச்சேதி சோதிதஃ| ப்ரதிகூலம் ப்ரியம் மே ஸ்யாத் நது வத்ஸஃ கரிஷ்யதி||) என்கிறபடியே 'ராஜ்யம் என்னுடையது. நான் காட்டுக்குப் போக மாட்டேன்' என்று கூறி ராமன் தன்னை நிக்ரஹித்துவிட்டு இருப்பானுகில் அதுவே தனக்கு மிகவும் ப்ரீதிகரமானது என்று சக்ரவர்த்தி சொன்னபடியால் அது சக்ரவர்த்தியினுடைய குற்றமு மன்று. பெருமாளும் பித்ரு வசன பரிபாலனத்தைப் பரம தர்மமாகக் கொண்டு கானக மேகிய படியால் அது அவர் குற்றமு மன்று. ஆகையால் என்னுடைய பாபமே இதற்குக் காரணம்'' என்று பரதாழ்வான் சோகித்தாற்போல பிராட்டியும் தம்முடைய பாபத்தையே காரணமாக சங்கித்தாள். 'பித்ரு வசன பரிபாலன மென்கிறது ஒரு வ்யாஜமேயன்றி என்னை இக்காட்டில் தனியே விடுவதற்காகச் செய்ததே இது' என்றுள் பிராட்டி.

அப்படியே இங்கும் பகவானிடத்தில் குணஹானியை நினைக்காமல், தம்முடைய அநதிகாரித்வத்தை சங்கித்து 'நல்கித்தான் காத்தளிக்கும் பொழி லேழும் வினை

யேற்கே நல்கத்தாளுகாதோ,' 'மதியிலேன் வல்வினையே மாளாதோ,' 'முன் செய்த முழு வினையால் திருவடிக் கீழ்க் குற்றேவல் முன் செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே' என்றபடி அநவாப்தியே தலையெடுத்துத் தன் அநதிகாரித்வத்தை நினைத்து 'அழிதற்கே நோற்றோமே யாம்' என்று நிர்விண்ணையாய் கைவாங்க உத்யோகித்த வாறே, இவர் இப்படிச் செய்யில் இனி இவரை இழக்க நேருமே என்று பார்த்தருளி ஸ்ரீதெய்வ நாயகனும் 'வாரீர், தேசிகோத்தமரே! இப்படியோ உம்முடைய நினைவு! நாம் நினைப்பது அப்படி இல்லை காணும்! 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்' என்று மனுஷ்ய ஸஜாதீயனாய் அவதரித்த பொழுது நாம் நம்முடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளை மறைத்து '**कुलोचितमिति क्षात्रं धर्मं स्वं बहुमन्यते । मन्यते परया कीर्त्या महत्स्वर्गफलं ततः ॥**' (குலோசித மிதி க்ஷாத்ரம் தர்மம் ஸ்வம் பஹுமந்யதே| மந்யதே பரயா கீர்த்யா மஹத் ஸ்வர்க்கபலம் தத꞉ ||), '**अशोक ! शोकापनुद ! शोकोपहतचेतसं । त्वन्नामानं कुरु क्षिप्रं प्रियासंदर्शनेन मां ॥**' (அசோக! சோகாபநுத! சோகோபஹத சேதஸம்| த்வந்நாமாநம் குரு க்ஷிப்ரம் ப்ரியா ஸந்தர்சநேந மாம் ||), '**यदि दृष्टा त्वया सीता जम्बु ! जम्बूफलोपमा**' (யதி த்ருஷ்டா த்வயா ஸீதா ஜம்பு! ஜம்பூபலோபமா) என்றபடி மனுஷ்ய ஜன்மத்துக்கேற்ற பாவனைகளைப் பண்ணினாற் போல இப்பொழுது அர்ச்சாவதாரம் பண்ணி இருக்கும் பொழுது அர்ச்சாவதார மர்யாதை குலையும்படி உம்முடைய அபேக்ஷிதங்களான ஆலோகாலாபந ஆலிங்கனாதிகளைச் செய்யவில்லையே யன்றி உம்முடைய அநதிகாரித்வத்தாலேயோ

அல்லது உம்முடைய தோஷ ப்ராசுர்யத்தாலேயோ இல்லை காணும்' என்று கூறி, 'வளவேழுலகு' தலை யெடுத்து அநர்ஹதாநுஸந்தானத்தாலே அகன்றீராகில் திருவாய்ப் பாடியில் வெண்ணெயை விலக்கினவரைப்போல நீர் நமக்கு அப்ரியராவீர்' என்று தம்முடைய நவநீத சௌர் யாதி வ்ருத்தாந்தத்தைக் காட்டி ஆழ்வாரை ஸமாதானம் பண்ணினாற் போல, இவரையும் தம்முடைய ஸர்வ வித பந்துத்வத்தையும், ஸர்வ பலப்ரதத்வத்தையும், ஸர்வோப காரகத்வத்தையும், 'மாதா பிதா ப்ராதா நிவாஸஃ சர ணம் ஸுஹ்ருத் கதிர் நாராயணஃ' என்கிறபடியே இவை கள் நாராயண சப்தார்த்தமான படியையும் காட்டி, அடைவிலே உம்முடைய அபீஷ்டத்தைச் செய்கிறோ மென்று கூறி ஸமாதானம் பண்ணி யருள, இவரும் அந்த ஸ்வபாவங்களை விசதமாக வநுபவித்து, எம்பெரு மான் ஸமாதானம் பண்ணின வநந்தரம் ஆழ்வார் 'உண் டாய் உலகேழ் முன்னமே உமிழ்ந்து மாயையால் புக்கு உண்டாய் வெண்ணெய் சிறு மனிசர் உவலை யாக்கை நிலையெய்தி மண்தான் சோர்ந்த துண்டேலும் மனிசர்க் காகும் பீர் சிறிதும் அண்டா வண்ணம் மண் கரைய நெய் யூண்மருந்தோ மாயோனே' என்று அந்த நவநீத சௌர்ய வ்ருத்தாந்தத்தையே அநுபவித்தாற் போல இவரும் அவனுடைய ஸர்வோபகாரகத்வ ஸர்வ வித பந்துத்வாதிகளையே யநுபவித்து அவ்வநுபவத்தை யரு ளிச் செய்கிறார் 'பயின்மதி' இத்யாதியால்.

நிலமண்டில வாசிரியப்பா.

பயின்மதி நீயே பயின்மதி தருதலின்
வெளியு நீயே வெளியுற நிற்றலின்
தாயு நீயே சாயைதந் துகத்தலின்

தந்தையு நீயே முந்திநின் றளித்தலின்
உறவு நீயே துறவா தொழிதலின்
உற்றது நீயே சிற்றின்ப மின்மையின்
ஆறு நீயே யாற்றுக் கருள்தலின்
அறமு நீயே மறநிலை மாய்த்தலின்
துணைவனு நீயே யிணையில்லை யாதலின்
துய்யனு நீயே செய்யா ளுறைதலின்
காரண நீயே நாரண னாதலின்
கற்பக நீயே நற்பதந் தருதலின்
இறைவனு நீயே குறையொன் றிலாமையின்
இன்பமு நீயே துன்பந் துடைத்தலின்
யானு நீயே யென்னு ளுறைதலின்
எனது நீயே யுனதன்றி யின்மையின்
நல்லாய் நீயே பொல்லாங் கிலாமையின்
வல்லாய் நீயே வையமுண் டுமிழ்தலின்
எங்கணு மாகு மெய்ய நின் வியப்பே
அங்ஙனே யொக்க வறிவதா ரணமே. (7)

பதவுரை.

பயில் - பயிலப் படுகிற, இடை விடாமல் அநுபவிக்கப் படுகிற என்றபடி; மதி - சந்திரன், நீயே, (ஏனெனில்), பயின் மதி - பயிலுதலில் மதியை, அதாவது மென்மேல் அநுபவிப்பதில் புத்தியை, தருதலின் - கொடுப்பதனால், வெளியும் - ப்ரகாசமும், அதாவது சூரியன், அக்னி முதலிய ப்ரகாசத்தை யுடைய வஸ்துக்களும், நீயே, வெளி - ப்ரகாசத்தை, உற - (அவர்கள்) அடையும்படி, நிற்றலின் - (அவர்களுக்கு) அந்தர்யாமியாய் நீ இருப்பதனால், தாயும்

நீயே, சாயை - நிழலை, தந்து - கொடுத்து, உகத்தி லின் - ஸந்தோஷிப்பதனால், தந்தையும் - பிதாவும், நீயே, முந்தி - முதலிலேயே, நின்று - அழியாதவனாக இருந்து, அளித்தலின் - ரக்ஷிக்கிறபடியினால், உறவும் - பந்துக்க ளும், நீயே, துறவா தொழிதலின் - விடாமல் இருப்ப தனால், உற்றதும் - ஸ்வரூபத்துக்கு உசிதமான புருஷார்த் தமும், நீயே, சிற்றின்பம் - அல்ப ஸுகம், இன்மையின் - இல்லாமையினால், ஆறும் - உபாயமும், நீயே, ஆற்றுக்கு - (அவரவர்களால் அநுஷ்டிக்கப்படும்) உபாயத்துக்கு, அருள்தலின்-க்ருபை செய்கிறபடியினால், அதாவது க்ருபை யினால் அவைகளுக்குப் பலம் கொடுக்கிறபடியினால் என்ற படி; அறமும் - தர்மமும், நீயே, மறநிலை - மறத்தோடு கூடிய நிலை, 'மறம்' என்பது கோபம்; இத்தால் பாபம் குறிக்கப் படுகிறது; பாபத்தை யுடையவனாகிய நிலையை என்றபடி; மாய்த்தலின் - நசிக்கும்படி செய்வதனால், துணைவனும் - நல்ல கதிக்குத் துணையாயிருப்பவனும், நீயே, இணை இல்லையாதலின் - உனக்கு ஸத்ருசமான வஸ்து இல் லாதபடியினால், துய்யனும் - பரிசுத்த ஞானவனும், நீயே, செய்யாள் - சிவந்த வர்ணத்தை யுடையவளான லக்ஷ்மி, உறைதலின் - வசிப்பதனால், காரணம் - உலகங்களுக்கெல் லாம் காரணம், நீயே, நாரணனாதலின் - நாராயண சப்தத் துக்கு அர்த்த மாகையினால், கற்பகம் - கற்பக விருக்ஷமும், நீயே, நற்பதம்-நல்ல ஸ்தானத்தை, பரம பதத்தை என்றபடி; தருதலின் - கொடுப்பதனால், இறைவனும் - ஸர்வ ஸ்வாமி யும், நீயே, குறை ஒன்றும் - ஒரு குறையும், இன்மையின் - இல்லாமையினால், இன்பமும் - ஸுகமும், நீயே, துன்பம் - துக்கத்தை, துடைத்தலின் - போக்கடிப்பதனால், யானும் -

நானென்னப் படுகிற வஸ்துவும், நீயே, என்னுள் - எனக்குள்ளே, நானென்று சொல்லப்படுகிற ஜீவாத்மாவிற்குள்ளே, உறைதலின் - அந்தர்யாமியாக வஸிப்பதனல், எனதும் - என்னுடையதான வஸ்துவும், இது வரையில் என்னுடையது என்று அபிமானிக்கப்பட்ட வீடு முதலியவையும் பார்யா புத்ராதிகளும் என்றபடி; நீயே, உனதன்றி இன்மையின் - (இவை யெல்லாம்) உனக்குச் சேஷ பூதமாக வல்லாமல் இல்லாமையினல், நல்லாய் - 'நல்லான்' என்பது முன்னிலையில் இந்த ரூபமாய் இருக்கும்; நல்லவன் என்றபடி; நீயே, பொல்லாங்கு - கெட்ட குணம், இலாமையின் - இல்லாமையினல், வல்லாய் - ஸர்வ சக்தனும், வல்லான் என்கிற பதத்தை முன்னிலையாகப் ப்ரயோகிக்கும் பொழுது இந்த ரூபமாய் இருக்கும்; நீயே, வையம் - இந்த லோகத்தை, உண்டு - ப்ரளய தசையில் வயிற்றில் வைத்து, உமிழ்தலின் - ஸ்ருஷ்டி தசையில் வெளியில் உமிழ்வதனல், மெய்ய - அடியவர்க்கு மெய்யனே, நின் வியப்பு - உன்னுடைய ஆச்சரியகரமான ஸ்வபாவம், எங்கனு மாகும் - எப்படி இருக்கின்றதோ, அங்ஙனே - அப்படியே, ஒக்க - ஒரு படிப்பட, மெய்யாக என்றபடி; ஆரணமே - வேதமே, அறிவது - தெரிந்து கொள்வது.

### வ்யாக்யாநம்.

'பயின்மதி' இத்யாதி - ப்ரஸித்தனகிய சந்திரன் சீதகிரண னகையினல் த்ருஷ்டத்தில் நீண்ட காலம் தன்னை ஸேவிப்பவர்களுக்கு சீதம் முதலிய த்ருஷ்ட துக்கங்களையும், காமோத்தீபகனகையால் அத்ருஷ்டத்தில் நரகாதி ப்ரத்யவாயங்களையும் உண்டாக்குவான். ஆனல் நீ 'பயில

வினிய நம் பாற்கடல் சேர்ந்த பரமன்' என்கிறபடியே பயிலப் பயில த்ருஷ்டாத்ருஷ்டமான ஸர்வ வித ஸுகங் களையுமே யுண்டாக்குகிற படியினால் நீயே நிருபாதிக சந் திரன். '**चदि आह्लादने**' (சதி ஆஹ்லாதநே) என்பது தாது. இத்தை நினைத்து '**वासुदेवतरुच्छाया नातिशीता न घर्मदा। नरकांगारशमनी सा किमर्थं न सेव्यते॥**' (வாஸுதேவ தருச் சாயா நாதிசீதா ந கர்மதா | நரகாங்கார ஶமநீ ஸா கிமர்த் தம் ந ஸேவ்யதே ||) என்றார்கள்.

'வெளியும்' இத்யாதி—'**यदादित्यगतं तेजो जगत्भासयतेऽखिलं। यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम्॥**' (யதாதித்ய கதம் தேஜோ ஜகத் பாஸயதேऽகிலம் | யச்சந்த்ர மஸி யச்சாக்னௌ தத்தேஜோ வித்தி மாமகம் ||), '**तस्य भासा सर्वमिदं विभाति**' (தஸ்ய பாஸா ஸர்வ மிதம் விபாதி) இத்யாதிகள் இங்கு விவக்ஷிதங்கள். அன்றிக்கே '**चन्द्रादित्यादि तेजांसि तत्तन्मण्डलमास्थितः। तेजयस्यखिलं देव स्थिर ज्योतिः त्वमद्भुतः॥**' (சந்த்ராதித்யாதி தேஜாம்ஸி தத்தந் மண்டல மாஸ்திதః | தேஜயஸ்யகிலம் தேவ ஸ்திர ஜ்யோதிః த்வ மத்புதః ||) என்று திரு நாமத்துக்கு நிர்வசனம் செய் திருப்பது இங்கு விவக்ஷித மாகவுமாம்.

'தாயு நீயே' இத்யாதி—'சாயை' என்பது **छायै** என்பதாய் ஸாதாரணமாகிய க்ருஹாதிகளைப் போல நிழ லைத் தருகை யன்றிக்கே தன்னுடைய திருவயிற்றுக் குள்ளே வைத்து வர்ஷாதபாதிகள் உபத்திரவிக்காதபடி செய்து ரக்ஷித்து அதை ஸ்வயம் ப்ரயோஜனமாய் நினைத் திருப்பதும் விவக்ஷிதம். லௌகிக மாதாக்கள் கொஞ்ச காலமே சிசுக்களைக் கர்ப்பத்தில் தரித்து ரக்ஷித்துத் தாங் கள் உகக்கிறார்கள். நீயோ '**चतुर्युगसहस्राणि ब्रह्मणो दिन**

मुच्यते। रात्रिं च तावतीमेव तेऽहोरात्रविदो जनाः॥' (சதுர் யுக ஸஹஸ்ராணி ப்ரம்மணோ திந முச்யதே| ராத்ரிஞ்ச தாவதீமேவ தே அஹோராத்ர விதோ ஜநா:||) என்கிற படியே நீடூழி காலமாகிய ப்ரம்மாவின் ராத்ரி காலம் முழுவதும் ஸகல ப்ரஜைகளையும் இடம் பெறத் துந்தித் தலத்தில் வைத்து ஸ்வயம் ப்ரயோஜனமாக ரக்ஷிப்பதனால் 'நீயே' என்றது. பரிமித காலம் மட்டும் ரக்ஷிக்கும் தாயை விட மேற்பட்டவன் அல்லவா அவன் என்று திருவுள்ளம். 'தாயிருக்கும் வண்ணமே உம்மைத் தன் வயிற்றிருத்தி உய்யக் கொண்டான்' என்றார் திருமங்கை யாழ்வாரும். அப்படியே ரக்ஷிக்கப்பட்டுப் பெற்ற பிள்ளை பிறந்த வநந்தரம் நாள் பொல்லாது, குரூபி முதலிய காரணங்களைக் கொண்டு நற்சந்தியில் விட்டு வைத்தல், விஷத்தைக் கொடுத்தல் முதலியவற்றைச் செய்யும் தாயு முண்டல்லவா. பகவானே ஸர்வ ப்ரகாரத்தாலும் ரக்ஷிக் கிறபடியால் 'நீயே' என்கிறு ராகவுமாம். அவ் வவஸ் தையிலும் கை விடாமல் ரக்ஷிக்கிறவனன்றோ நீ. ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குத் தாய் விஷம் கொடுக்க பகவந் நாமத் தின் மஹிமையினால் அவர் காப்பாற்றப்பட்டார் என்பது புராண ஸித்தம். இதை நினைத்துத் 'தஞ்சமாகிய தந்தை தாயொடு' என்றருளிச் செய்தார் நம்மாழ்வாரும். இவ் விருவர்களின் திருவுள்ளத்தை யடியொற்றி மற்றவர்கள் தாயல்ல, நீயே தாய் என்று இதர வ்யவச்சேத பூர்வகமாக அருளிச் செய்தபடி.

'தந்தையும்' இத்யாதி - தகப்பன் கொல்ல நினைத்த வன்றும் தூணில் தோன்றி ரக்ஷிப்பவன் நீ யல்லையோ. முந்தி நின்றளித்தலின் - பிதா புத்திரனுக்கு மேல் பஹு-

காலம் கழித்து வரும் நன்மையை யுத்தேசித்து முதலிலேயே அத்யயனுதி கார்யங்களில் ப்ரவ்ருத்திப்பிக்கிருன். நீயோ வெனில் ப்ரளய காலத்தில் அசிதவிசிஷ்டங்களாய் இருந்த ஜந்துக்களைப் பார்த்து இவைகளுக்கு எவ்வளவோ ஜந்ம பரம்பரைகள் கழித்து உண்டாகக் கூடிய அபரிமித ஸுகத்தை நினைத்துக் கரண களேபர ப்ரதானம் தொடங்கி இன்றளவாக ஹித பரம்பரைகளை நடத்திக் கொண்டு வருகிருய். 'பொருளென் றிவ்வுலகம் படைத்தவன்' என்றன்றே மருளில் வண்குருகூர்ச் சடகோபனும் அருளிச்செய்தது.

அன்றிக்கே, சத்ருவின் பேரைச் சொன்னுய், அவனுடைய ஊரைச் சொன்னுய், அவன் குணத்தைச் சொன்னுய் என்ருெரு வ்யாஜத்தை யிட்டுக் கொல்ல நினைத்தான் ஒரு பிதா. 'பள்ளியி லோதிவந்த தன் சிறுவன் வாயிலோ ராயிர நாமம் ஒள்ளிய வாகிப் போத ஆங்கு அதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனுகிப் பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப் பிறை யெயிற் றனல்விழிப் பேழ்வாய் தெள்ளிய சிங்க மாகிய தேவைத் திருவல்லிக் கேணிக் கண்டேனே' என்று ஆழ்வார் அருளிச்செய்தார்.

பள்ளியி லோதிவந்த—வேதாந்த சாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்து தத்வ நிரூபணம் பண்ணுவா னெருவனு மல்லன், தன்—ஸம்பந்த மிது. அஸம்பத்த ப்ரலாபம் பண்ணினுலும் அதை போக்யமாக நினைக்க வேண்டியன்றே பித்ரு புத்ரபாவம் இருப்பது. சிறுவன்—பருவ மிது. 'குழ லினிது யாழினி தென்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளா தவர்' என்கிறபடியே அநுசிதமான வார்த்தை யையும் பரம போக்யமாக நினைத்திருக்கும்படியா

யன்றோ பருவம் இருப்பது. அவன் சொன்னது தான் அப்படி அஸம்பத்த ப்ரலாபாதிகள் போன்றனவோ வென்னில் அருளிச் செய்கிறார்—'வாயி லோராயிர நாமம்' என்று. சத்ரு சொன்னாலும் க்ருதஜ்ஞனா யிருக்கும்படியான வார்த்தையை யன்றோ சொன்னது. அவன் சொன்னது ஒரு நாமமா யிருந்தாலும் அது நாராயண நாம மாகையால் 'ஓராயிரமாய் உலகே ழளிக்கும் பேராயிரம்' என்கிறபடியே ஆயிர நாமங்களுக் குள்ள மஹிமை யுடையது என்றபடி; அன்றிக்கே, ஹிரண்ய கசிபு பயந்தவ னாதலால் அந்தப் பயத்தின் மிகுதியினால், சொல்லப்பட்டது ஒரு நாமமா யிருந்தாலும் அதை யவன் ஆயிர நாம மாகக் கொண்டான் என்று மாகும். சிறு பருவத்திலேயே அவர் சொல்லுகிற நாமத்தின் வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்துத் தன்னுடைய ப்ரீத்யதிசயத்தினால் ஆயிர நாமம் என்னுதலும் ஆகும். பக்தியின் மிகுதியினால் 'மரங்களும் இரங்கும் வகை' என்றும், 'கேட்டு ஆரார் வானவர்கள்' என்றும் சொல்லுகிறபடியே பக்திமான்களுக்கு விலக்ஷணமாகத் தோன்றும்படி சொல்லுகிறா ராகவுமாம். ஒள்ளிய வாகி—இப்படிப் பட்ட சொல்லைக் கேட்டன்றோ அவன் வெகுண்டு தூண் புடைத்தது. அந்த ஸமயத்தில் முந்தி நின் றளித்தானாயிற்று ஸர்வேச்வரனும். அவன் தூணைத் தட்ட உத்யோகிப்பதற்கு முன்னமேயே ஸர்வலோகத்திலும் ந்ருஸிம்ம ரூபியாய் பகவான் வ்யாபித்திருந்தபடி சொல்லப்படுகிறது. 'भक्तस्य दानवशिशोः परिपालनाय भद्रां नृसिंहकुहनामधिजग्मुषस्ते । स्तंभैकवर्जमधुनापि करीश नूनं त्रैलोक्यमेतदखिलं नरसिंहगर्भम् ॥' (பக்தஸ்ய தாநவ ஶிஶோ: பரிபாலநாய பத்ராம் ந்ருஸிம்ம

குஹநா மதிஜக்முஷஸ்தே| ஸ்தம்பைக வர்ஜ மதுநாபி கரீச நூநம் த்ரைலோக்ய மேத தகிலம் நரஸிம்ம கர்ப்பம்||) என்று இவர் தாமும் ஸ்ரீவரதராஜ பஞ்சாசத்தில் அருளிச் செய்தார். ஆகையால் 'முந்தி நின்றளித்தலின் தந்தையும் நீயே' என்கிறார்.

'உறவும் நீயே' இத்யாதி—மற்றைய ப்ராதா, பிதாமகர், பித்ருவ்யன் முதலிய பந்து ஜனங்கள் பாண்டவர்களுடைய விஷயத்தில் கொல்லவும் துணிந்து யுத்தோன்முகராய் நின்றார்கள். 'உகவை யடைந்த வுறவுடையார் உறவற்ற வந்நாள்,' 'अस्थानस्नेहकारुण्यधर्माधर्मभयाकुलम्' (அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்ம பயாகுலம்) என்று அருளிச் செய்யப்பட்டதன்றோ? அவர்களைப் போலில்லாமல் ஸர்வரும் விட்ட வந்நாளும் பாண்டவர்களைப் பலவகையும் காத்து, மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து அவர்களையே மன்னராக்கி, உத்தரை தன் சிறுவனையும் உய்யக்கொண்ட உயிராளன் அல்லவோ என்றபடி. துறந்த அவர்கள் உறவல்ல வாகையினால் துறவாத நீயே உறவு என்றபடி. 'अहं तावन्महाराजे पितृत्वं नोपलक्षये। भ्राता भर्ता च बन्धुश्च पिता च मम राघवः॥' (அஹம் தாவந் மஹாராஜே பித்ருத்வம் நோபலக்ஷயே| ப்ராதா பர்த்தாச பந்துஶ்ச பிதாச மம ராகவஃ) என்றன்றோ இளைய பெருமாளும் அநுஸந்தித்தது.

'உற்றதும்' இத்யாதி—ஐச்வர்ய கைவல்யங்கள் அல்பத்வ அஸ்திரத்வாதி தோஷங்களோடு கூடியவை யாகையினால் இவ்வாத்மாவுக்கு உசிதமல்ல. ஆகையால் ஸ்வரூபத்துக்கு உசிதமான புருஷார்த்தம் நீயே என்றபடி. 'உன்னையல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்,'

'தனக்கே யாக எனைக்கொள்ளு மீதே எனக்கே கண்ணை யான் கொள் சிறப்பே' என்பவை விவக்ஷிதங்கள்.

'ஆறும்' இத்யாதி—அவரவர்கள் செய்யும் யாகாதி கர்மங்களும், பக்திப்ரபத்யாதிகளும் அசேதனங்களாகையாலும், நச்வரங்களாகையாலும் காலாந்தரத்தில் ஸம்பவிக்கக் கூடிய பலத்துக்கு நேரில் காரண மாகமாட்டா. இவைகளால் ப்ரஸந்நனாகிய ஸர்வேச்வரனே ஸர்வ பல ப்ரதன் என்னுமிடம் 'பலமத உபபத்தே:' என்று ஸூத்ரகாரராலும், 'அவரவர் தமதமது அறிவறி வகைவகை அவரவர் இறையவர் என அடி யடைவர்கள் அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர் அவரவர் விதிவழி அடைய நின்றனரே' என்று ஆழ்வாராலும், '**यथाधिकरणं प्रभुः यजन दानहोमार्चनाभरन्यसनभावनाप्रभृतिभिः समाराधितः। फलं दिशति देहिनां इतिहि संप्रदायस्थितिः श्रुतिस्मृति गुरूक्तिभिः नयवतीभिः आभाति नः॥**' (யதாதிகரணம் ப்ரபு: யஜந தாந ஹோமார்ச்சநா பரந்யஸந பாவநா ப்ரப்ருதிபி: ஸமாராதித:| பலம் திசதி தேஹிநாம் இதிஹி ஸம்ப்ரதாயஸ்திதி: ச்ருதி ஸ்ம்ருதி குருக்திபி: நயவதீபி: ஆபாதி ந: ||) என்றிவர் தம்மாலும் அருளிச் செய்யப் பட்டிருப்பதனால் ஸுஸ்பஷ்டம். '**लभते च ततः कामान् मयैव विहितान् हितान्**' (லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹிதாந்), 'அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவச' முதலியவைகளின் படியே தேவதாந்தரங்கள் அந்தந்தக் கர்மங்களினால் ஆராதிக்கப்பட்டாலும் பகவானன்றோ அவர்களுக்கு அந்தர்யாமியாய் நின்று பலம் கொடுப்பது.

'அறமும்' இத்யாதி—அந்த பக்தி ப்ரபத்தி முதலியவைகளுக்கு உபகாரகங்களாய் இருந்து கொண்டு பாப

நிவர்த்தநம் பண்ணிக் கொடுக்கக் கூடிய பகவத் க்ஷேத்ர வாஸாதி தர்மங்களும் நீயே. அவைகளுக்குப் பல ப்ரதானம் பண்ணு மவனும் நீயே. அதாவது 'தர்மேண பாபமபநுததி' என்று அவைகளுக்குச் சொல்லப்பட்ட பாப நிவர்த்தநத்துக்கும் காரணம் நீயே யாகையால் என்றபடி. 'துணைவனும்' இத்யாதி—அவ்வோ தர்மங்களிலேயோ அல்லது உபாயங்களிலேயோ ப்ரவ்ருத்தி செய்கிற வர்களுக்கு ஜ்ஞாந சக்த்யாதிகளைக் கொடுத்து அவைகளை யதாவத்தாக நடத்தி வைப்பவனும் நீயே என்றபடி. ஏனெனில் இப்படி ஸர்வ நியந்தாவாக வேறொருவன் இருக்கில் அவனைத் துணையாகப் பற்ற வடுக்கும். அப்படி வேறொருவருமில்லை என்றபடி. அன்றிக்கே, ஸத்பதவிக்கு ஸஹாயனாய் இருந்து அழைத்துக் கொண்டு போகிறவனும் நீயே என்றருளிச் செய்தபடியாகவுமாம்.

'துய்யனும்' இத்யாதி—ப்ரம்மாதி ஸகல தேவதைகளாலும் தங்கள் தங்களுடைய பதங்கள் நிலைத்திருப்பதற்காக ஆச்ரயிக்கப்படுகிற லக்ஷ்மியும் 'பஶ்யதாம் ஸர்வ தேவாநாம் யயௌ வக்ஷஸ்தலம் ஹரேః' என்று ஸகல தேவதைகளையும் அநாதரித்து விட்டு, உனது திருமார்பை வந்தடைந்து பிரியில் தரியேன் என்று கொண்டு அங்கு நித்யவாஸம் செய்கிறபடியினால் நீயே பரிசுத்தன் என்றபடி. 'அஶுத்தாஸ் தே ஸமஸ்தாஸ்து தேவாத்யாః கர்மயோநயః' என்று மற்றத் தேவர்களை யெல்லாம் அசுத்தர்களென்றன்றோ பராசர மஹர்ஷி அறுதியிட்டது. அன்றிக்கே, அவள் செய்யாளாகையினால் உன்னிடத்தில் அசுத்தம் ஏதாவது இருந்தால் உன்னிடத்தில் உறைய

மாட்டாள். அவள் உன்னை க்ஷணகாலமும் விடேன் என்றிருப்பதனால் நீ துய்யனாகிறாய் என்றபடியாகவுமாம். 'எம்பெருமா னுண்டுமிழ்ந்த எச்சில் தேவ ரல்லாதார் தாமுளரோ' என்றும், 'திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு' என்றும், **'तत् कल्याणं किमपि यमिनां एकलक्ष्यं समाधौ पूर्णं तेजः स्फुरति भवती पादलाक्षारसांकम् ॥'** (தத் கல்யாணம் கிமபி யமிநாம் ஏக லக்ஷ்யம் ஸமாதௌ பூர்ணம் தேஜஃ ஸ்புரதி பவதீ பாத லாக்ஷா ரஸாங்கம்) என்றும் அருளிச் செய்யப்பட்டவை இங்கு விவக்ஷிதங்கள்.

'காரண நீயே' இத்யாதி—நாராயண சப்தம் ஜகத் காரண வஸ்துவைச் சொல்லுகிற தென்று 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத்' முதலிய ச்ருதிகளிலும், 'நராஜ் ஜாதாநி தத்வாநி' முதலிய நிர்வசனங்களிலும் ப்ரஸித்தம். இதைத் திருவுள்ளம்பற்றியே பெரிய முதலியாரும் **'स्वाभाविकानवधिकातिशयेशितृत्वं नारायण त्वयि न मृष्यति वैदिकः कः'** (ஸ்வாபாவிகாநவதிகாதிசயேசித்ருத்வம் நாராயண த்வயி ந ம்ருஷ்யதி வைதிகஃ கஃ) என்றருளிச் செய்தார். ஆழ்வாரும் 'நன்றெழில் நாரணன்' என்றார். ஆகையால் நாராயண சப்த வாச்யனாகிய நீயே ஜகத் காரணம் என்றபடி. 'கற்பகம்' இத்யாதி—ப்ரஸித்த கல்பக வ்ருக்ஷமும் புறம்பே சிலவற்றை மட்டும் கொடுக்கக் கூடியதாய் மோக்ஷ ப்ரதானத்தில் ஸாமர்த்யம் இல்லாம லன்றோ இருப்பது. நீயோ 'எனக்கே தன்னைத் தந்த கற்பகம்' என்கிறபடி மற்றவர்களால் கொடுக்க முடியாத மோக்ஷத்தைக் கொடுப்பவனாதலால் 'நீயே கற்பகம்' என்றருளிச் செய்தபடி.

'இறைவனும்' இத்யாதி—ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் முதலிய எல்லாவற்ருலும் பரிபூர்ண னுகையால் நீயே ஸர்வ நியந்தா. தங்கள் ஸ்வரூபத்தில் அல்ப பரிணுமமுள்ள ஜீவர்களும், குணங்களில் உன்னுடைய ஸங்கல்பத்துக்கு வசப்பட் டிருப்பதனுல் ஸ்வாபாவிகத்வ மில்லாத நித்ய முக்தர்களும், விபூதி முதலியவைகளிஞல் பரிச்சின்னர்களான மற்றத் தேவதைகளும் நியந்தாக்க ளாக மாட்டார்கள். ஸர்வ ப்ரகாரத்தாலும் பரிபூர்ணன் நீதான். ஆகையால் நீயே ஸர்வ நியந்தா என்றபடி. இதனுல் கீழருளிச் செய்யப்பட்ட ஸர்வ காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், ஸர்வவித பந்துத்வம், ப்ராப்யத்வம், உபாயத்வம் இவைகளெல்லாவற்றிற்கும் காரண மருளிச் செய்யப்பட்டதாயிற்று.

மேல் ப்ராப்யத்வ உபயுக்தமான நிரதிசய ஆனந்தத்வத்தை அருளிச் செய்கிருர். 'இன்பமும்' இத்யாதி—மற்றப் புருஷார்த்தங்கள் அஜ்ஞருக்கு ஸுகமாகத் தோன்றின போதிலும் துக்க மூலத்வ துக்கமிச்ரத்வ துக்கோதர்க்கத்வாதிகளாலே துக்க ப்ரசுரமா யிருப்பதனுல் அப்படிப்பட்ட தோஷங்கள் ஒன்றுமில்லாமலும், அத்தகைய தோஷங்களை நிவ்ருத்தி செய்யக் கூடியவனுயும், 'கம் ப்ரம்ம கம் ப்ரம்ம' என்கிறபடியே அபரிச்சின்ன ஸுகரூபமாயு மிருப்பவன் நீயே என்றபடி. 'ஏஷஹ்யேவாநந்தயாதி,' 'ரஸோ வைஸ:,' 'கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்', 'யதேஷ ஆகாஶ ஆநந்தோ நஸ்யாத்,' 'உணர் முழு நலம்' 'சுடர்ஞான வின்பமே' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதங்கள். அன்றிக்கே, 'உற்றதும் நீயே சிற்றின்பமின்மையின்' என்பதனுலேயே ஸ்வரூபோசிதமான புரு

ஷார்த்தம் அவனே என்றருளிச் செய்யப்பட்டதாய், இங்குப் பொதுவில் 'துன்பம் துடைத்தலின்' என்றருளிச் செய்திருப்பதனால் 'ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு ரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப' என்கிறபடியே எவனெவனுக்கு எந் தெந்தப் புருஷார்த்தம் கிடைக்காததனால் துக்கம் உண்டா கிறதோ அததைக் கொடுத்து அந்தந்த துக்கத்தைப் போக் கடிப்பவன் என்றாகி ஸர்வ பல ப்ரதத்வம் அருளிச்செய்யப் பட்டதாகவுமாம். அதுவு மன்றிக்கே கீழ் அருளிச் செய்த புருஷார்த்தமா யிருப்பதற்கு ஆனந்த ரூபத்வத்தைக் காரண மாக அருளிச் செய்தா ராகவுமாம்.

இப்படி ஸர்வ பதார்த்த நிர்வாஹகத்வத்தையும், ஸர் வோபாயங்களும் அவற்றின் ஸஹகாரியான தர்மங்களும் அவற்றின் பலங்களும் அவன் இட்ட வழக்காய் நிற்பதை யும் அருளிச் செய்து அந்தப் புருஷார்த்தங்களை அநுப விக்கிறவனாய், அவற்றின் கர்த்தாவா யிருக்கிற தானும் அவனே என்றருளிச் செய்கிறார். 'யானும்' இத்யாதி— இதை ஸாத்விக த்யாக ப்ரக்ரியையாலே எல்லாவற்றிற் கும் கடைசியில் அநுஸந்திக்கிறார். 'யானே என்னை யறியகிலாது யானே என்தனதே என்றிருந்தேன்' என்றும், 'எனதாவி யார் யானார்' என்றும் அருளிச் செய் திருக்கிறபடியே நமச் சப்தார்த்த நிரூபணமா யிருக்கும் இது. இத்தால், இப்பாட்டில் 'பயின்மதி நீயே' என்றா ரம்பித்து 'இன்பமும் நீயே' என்னு மளவாக உத்தர கண்டத்தி லிருக்கும் சதுர்த்யந்த பதத்துக்கு வ்யாக் யானம் செய்தருளி, இந்த இரண்டு வாக்யங்களினால் நமச் சப்தத்துக்கு வ்யாக்யானம் பண்ணியருளினபடி.

'நல்லாய் நீயே,' 'வல்லாய் நீயே' என்கிற இரண்டு வாக்யங்களினாலும் அபுநராவ்ருத்திக்குக் காரணமாகிய ஆச்ரிதர்களிடத்தில் உண்டான ப்ரீத்யதிசயமும், சக்தி யோகமும் விவக்ஷிதம். இவ்வர்த்தம் உத்தர கண்டத்திலும் அர்த்த ஸித்தம். 'பொல்லாங் கிலாமையின்' என்பதனால் தன்னோடொக்க அர்த்தாஸநம் பெற்ற ராஜாவைத் தானே வாயிட்டு வார்த்தை பிடுங்கித் தள்ளி விழ விடும் மற்றத் தேவதைகளைப் போலத் தம்மோடு ஸாம்யம் பெற்றவர்களிடத்தில் அஸூயை முதலிய பொல்லாங் கில்லாமை தெரிவிக்கப்படுகிறது. ஆச்ரிதருடைய குற்றம் பார்த்தல் முதலிய தோஷம் இல்லை என்பதும் தாத்பர்யம்.

இவ்வர்த்தங்களில் ப்ரமாணம் என்ன வென்னில் வேதம் என்கிறார்—'எங்கணுமாகும்' இத்யாதியால். 'ஆரணமே' என்கிற விடத்தில் ஏகாரம் 'ஓ' என்பதாய், 'யதோ வாசோ நிவர்த்தந்தே,' 'ஸோऽங்க வேத யதிவா நவேத,' 'அறிந்தன வேத வரும் பொருள் நூல்கள் அறிந்தன கொள்க அரும் பொருளாதல்' முதலிய வற்றின் படியே அந்த அபௌருஷேயங்களான வேதங்களும் உம்முடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை ஒக்க வறிந்தவையாக மாட்டுமோ என்றபடி (7)

அவதாரிகை.

இப்படி எம்பெருமானுடைய ஸர்வ வித பந்துத்வ ஜகத் காரணத்வாதிகளை யநுஸந்தித்து ஹ்ருஷ்டரான இவரைக் கடாக்ஷித்து ஸ்ரீ தெய்வ நாயகன் 'இதுதானோ நம் படி?' என்று ஆச்ரித வாத்ஸல்யத்தையும் அவதார திவ்ய சரித்ரத்தையும் காட்டியருள உபக்ரமித்து த்ரிவிக்ரமா

பதானத்தைக் காட்ட அதைக் கண்டு விஸ்மிதராகிறார். அன்றிக்கே 'எங்கணு மாகும் மெய்ய நின் வியப்பே' என்று அவருடைய ஆச்சரியமான குணங்களைக் கீழே அநுபவிக்க 'இங்கோர் ஆச்சரிய மிருக்கும்படியைப் பாரும்' என்று த்ரிவிக்ரமாவதாரத்தைக் காட்டியருள அதை யநுபவிக்கிறு ராகவுமாம்—'ஆரணங்கள்' என்றாரம்பித்து. ஆஸுர ப்ரக்ருதிகளும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும்படியான வடிவழகும், ப்ரஜைகள் உணரா திருக்கச்செய்தே அவைகளைக் கட்டி அணைத்து உகக்கும்படியான மாத்ரு வாத்ஸல்யமும், ஹிதத்தை நடத்துகையும், தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு அபேக்ஷித பலங்களைத் தன்னையழிய மாறியாவது கொடுக்கும் தன்மையும், ப்ரம்ம ருத்ராதிகளை விடத் தான் உத்க்ருஷ்டனுகையால் தானே காரணபூதன் என்பதும், அகடித கடநா ஸாமர்த்யமும் ஸர்வ ஜன ஸுஹ்ருத்தா யிருக்கும் தன்மையும், ப்ராப்ய ப்ராபக பூதனு யிருக்கையும் ஆக விப்படிக் கீழ்ப் பாட்டில் ப்ரஸ்துதமான எல்லாமும் இவ் வவதாரத்தில் காணலாம்படியாக வன்றோ இருப்பது. ஆகையால் கீழ்ச் சொல்லிய ஸர்வ குணங்களுக்கும் ப்ரகாசகமான த்ரிவிக்ரமாவதார வ்ருத்தாந்தத்தை இப் பாட்டில் அருளிச் செய்கிறார்.

நேரிசை வெண்பா.

ஆரணங்கள் தேட வயிந்தைநகர் வந்துதித்த
காரணனாய் நின்ற கடல்வண்ணன்—நாரணனார்
இப்படிக்கு மிக்கன் றெடுத்தபா தங்கழுவ
மெய்ப்படிக்க மானதுபொன் வெற்பு. (8)

## பதவுரை.

ஆரணங்கள் - வேதங்கள், தேட - தேடிக் கொண்டிருக்க, அயிந்தை நகர் - திருவஹீந்திர புரத்தில், வந்து உதித்த - ஆவிர்பவித்தவனாய், அன்றிக்கே மிகவும் ப்ரகாசிப்பவனாய் விளங்குகிற, காரணனாய் - ஜகத் காரண பூதனாகி, நின்ற - இருக்கிற, கடல் வண்ணன் - ஸமுத்திரம் போன்ற வர்ணத்தையுடைய, நாரணனார் - நாராயணன், இப்படிக்கு - கீழ்ச் சொல்லிய ப்ரகாரங்களுக்கு, மிக்க - மேலாக இருக்கும்படி, அன்றிக்கே இப் பூமிக்கு மேலே போகும்படி, அன்று - அந்தப் பூமியை அளந்த ஸமயத்தில், எடுத்த - தூக்கின, பாதம் - திருவடியை, கழுவ - திருமஞ்ஜனம் செய்ய, பொன் வெற்பு - மேரு பர்வதம், மெய்ப் படிக்கம் - ஸ்வர்ண மயமான ப்ரதிக்ரஹ பாத்திரமாக, ஆனது - ஆயிற்று.

## வ்யாக்யாநம்.

'ஆரணங்கள்' இத்யாதி—வேதங்கள் பகவானுடைய ஸ்வரூபாதிகளைப் ப்ரதிபாதிக்க வேண்டு மென்று உபக்ரமித்து '**सदा स्थिता नोद्यमतोऽतिशेरते**' (ஸதா ஸ்திதா நோத்யமதோ திऽஶேரதே) என்கிறபடியே அவைகளின் எல்லையைக் காண முடியாமல் ஆரம்ப தசையிலேயே நிற்கின்றன வென்று தாத்பர்யம். 'தேட' என்பதனால் 'தேவா அபி அஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சந காங்க்ஷிண:' என்பதைப் போலத் தேடிக் கொண்டிருக்கின்றனவே யன்றி இன்னும் கண்டு பிடிக்கவில்லை என்று தாத்பர்யம்.

அயிந்தை நகர் வந்து—வேதங்களும் அறிய முடியாத வஸ்து 'ஸகல மநுஜ நயந விஷயதாம் கத:' என்கிற

படியே எல்லார் கண்களுக்கும் விஷய மாகும்படி திரு வஹீந்திர புரத்தில் ஆவிர்ப்பவித்தது என்று ஆச்சர்யம் தெரிவித்தபடி. அப்படி வந்த பிறகுதான் ப்ரகாசம் அதிக மாயிற்று என்பதைக் காட்டுவதற்காக 'உதித்த' என்னும் பதம். '**अहीन्द्रनगरे नित्यं उदितोयमहस्करः**' (அஹீந்த்ர நகரே நித்யம் உதிதோய மஹஸ்கரஃ) என்றிவர் தாமே அருளிச் செய்தார். இதனால் பரம் வ்யூஹம் முதலிய மற்றத் தசைகளிற் காட்டில் ஸ்ரீதெய்வ நாயகனாய் அவதரித்து நிற்கும்போதுள்ள ப்ரகாசாதிசயம் விவக்ஷிதம். 'சூட்டு நன்மாலை'களிற்படியே வேதங்கள் அங்கே தேடா நிற்க அவன் இங்கே வந்து ப்ரகாசித்துக் கொண்டு நிற்கிறான் என்றபடி. அன்றிக்கே வேதங்கள் தன்னுடைய ஸ்வரூபாதிகளை முழுவதும் அறிய முடியாமல் தேடிக் கொண்டு நிற்கும்படியானவனன்றோ தன்னுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை யெல்லாம் ஸகலரும் நன்றாக அறியுமாறு ப்ரகாசிப்பித்துக் கொண்டு நிற்கிறானென்றாகவுமாம். '**देवेश्वरत्वमिह दर्शयितुं क्षमस्ते**' (தேவேஶ்வரத்வ மிஹ தர்ஶயிதும் க்ஷமஸ்தே), '**आराधयद्भिरिह तैः भवतः समीची वीरोचिता विबुधनायक इत्यभिख्या**' (ஆராதயத்பி ரிஹ தைஃ பவதஃ ஸமீசீ வீரோசிதா விபுதநாயக இத்யபிக்யா), 'அகடித கடநா ஶக்திம் ஸத்யாம் ஸ்தாபயதி தாஸ ஸத்ய ஸமக்ராம்' முதலியவற்றின்படியே அவனுடைய குணங்களை வேறு ப்ரமாணங்களின் அபேக்ஷையின்றி இந்தத் திவ்ய மங்கள விக்ரஹம் ப்ரகாசிப்பிக்கிறதல்லவா என்றபடி.

காரணனாய் நின்ற—'ஆராத்ய த்ரிதச விலயே அச்யுத நித்யம் நதிஷ்டஸி யதி நாமத்வம் | கர்மணாம் கல்பிதாநாம் கதா கல்பாந்தரேஷு கோ நிர்வேசஃ ||' என்கிற

படியே மற்றெல்லாத் தேவதைகளும் நசியா நிற்கும் போதும் தானொருவனுமே ஸ்திரமாய் நின்று அவ்வோ கர்மங்களுக்குப் பலப்ரதானம் பண்ணும்படி சொல்லப் பட்டது. இப்படித் திருவஹீந்திரபுரத்தில் அடியவர்க்கு மெய்யனாய் ஸகலரும் ஆச்ரயிக்கும்படி நின்ற பிறகு தான் அடிதரிக்கும்படி நின்றானாயிற்று. 'உத்தரம் தீர மாஸாத்ய கஸ்த ஏவ வ்யதிஷ்டத' என்று ஸ்ரீவிபீஷணாழ் வான் ராவண பவனத்தை விட்டு, வானர முதலிகளின் ஸமீபத்தை யடைந்த வாறே ரக்ஷகனுடைய ஸாந்நித்யத் தால் நற்றரிக்க இருந்தாற்போல ரக்ஷ்ய வஸ்துக்களின் லாபத்தினால் தன் ரக்ஷகத்வம் நிலைபெற்றுத் தானும் நற் றரித்தானாயிற்று. அங்கு ரக்ஷ்யனுக்கு ரக்ஷக லாபத்தால் தைர்யம் வந்தது. இங்கு ரக்ஷகனுக்கு ரக்ஷ்ய லாபத்தினால் ப்ரீதி யுண்டாயிற்று. கடல் வண்ணன்—ஸ்ருஷ்ட்யுந்முக மான அவஸ்தை வந்த வாறே, கர்ப்பிணிகளான ஸ்த்ரீ களுக்கு நிறம் மிகுத்துக் காட்டுமாப் போலே இவனுக்கும் நிறம் மிகுத் திருந்தபடி அருளிச் செய்யப்பட்டது. இவ்வளவு லோகங்களையும் வயிற்றில் வைத்து ரக்ஷிக்கப் பெற்றோமே என்கிற ஹர்ஷாதிசயத்தினால் புகர் இரட்டித்த தாயிற்று என்றாகவுமாம்.

இப்படிக்கு—கீழ்ச் சொல்லிய தம்முடைய ஸ்வபா வங்களுக்கு, மிக்க—மேற்பட்டிருக்கும்படி, அதாவது கீழ்ப் பாட்டில் அருளிச்செய்த ஸர்வ வித பந்துத்வம் வாத் ஸல்யாதிசயம், ஹிதப்ராவண்யம் ஸர்வ சக்தி முதலியவை கள் அதிகமாகப் ப்ரகாசிக்கும்படி. 'ஓங்கி உலகளந்த உத் தமன்' என்றார்களன்றோ? உவந்த உள்ளத்தனாய் உலக மளந்தானல்லவா. 'सत्कुर्वतां तव पदं चतुराननत्वं पादोदकं च

वहतां शिरसा शिवत्वम्। एकत्र विक्रमणकर्मणि तत् द्वयन्ते देहल्य-धीश युगपत् प्रथितं पृथिव्याम् ॥' (ஸத்குர்வதாம் தவ பதம் சதுராநநத்வம் பாதோதகஞ் ச வஹதாம் சிரஸா சிவத்வம்| ஏகத்ர விக்ரமண கர்மணி தத் த்வயம் தே தேஹள்யதீச யுகபத் ப்ரதிதம் ப்ருதிவ்யாம்) என்றபடியே பரத்வ ஸௌலப்யங்கள் இரண்டும் இவ் வவதாரத்தில் விசேஷித்து ப்ரகாசிக்கும்படி யன்றோ நின்றது. அன்றிக்கே, இப்படிக்கு—இந்தப் பூமிக்கு, மிக்கு—அதிக்ரமித்துப் போகும்படி, ஊர்த்வ லோகங்களை ஆக்ரமிக்கும்படி என்றபடி. அன்று—பலி சக்ரவர்த்தி நீர் வார்த்துக் கொடுத்த அநந்தர க்ஷணத்திலேயே திருவடி விசும்பு முழுவதும் நிறையும்படி வளர்ந்தது. 'ஒண்மிதியிற் புனலுருவி ஒரு கால் நிற்ப ஒரு காலும் காமருசீ ரவுண னுள்ளத்து எண்மதியும் கடந்து அண்டம் மீது போகி இருவிசும்பி னூடு போய் எழுந்து மேலைத் தண்மதியும் கதிரவனும் தவிர வோடித் தாரகையின் புறம் தடவி அப்பால் மிக்கு மண்முழுதும் அகப்படுத்து நின்ற வெந்தை' முதலியவை இங்கு அநுஸந்தேயம்.

'மெய்ப் படிக்கம்' இத்யாதி—பொன் வெற்பு படிக்கமானது, (இது) மெய் என்றந்வயிக்கவுமாம். ஆக இத்தால் ஶ்ரியஃபதி 'தத்யாத் ந ப்ரதிக்ருஹ்ணீயாத்' என்கிற வ்ரதம் குலைந்து இரப்பாளனாகவும், 'விஷ்ணோஃ ஸ்ரீஃ அநபாயிநீ' என்கிற லக்ஷ்மியை விட்டுப் பிரியாதவன் ஒரு ப்ரம்மசாரியாகவும், வாமன ரூபியாய் நின்றவனே த்ரிவிக்ரம ரூபியாகவும், தன்னுடைய பூமியைத் தானே இரக்கும்படியாகவும், ஈச்வரத்வாபிமான முள்ளவர் பக்ஞபிமானராய் ஒருவர் திருவடி விளக்க ஒருவர் அந்த

ஸ்ரீபாத தீர்த்தத்தை சிரஸா வஹிக்கவும், இவ்வளவு ஆச்சரியமும் போதாதபடி மஹாமேருவும் ப்ரதிக்ரஹ பாத்ரமாகவும் ஆனபடியினால் கீழ் 'எங்கணு மாகும் மெய்ய நின் வியப்பே' என்றருளிச் செய்ததை இப்படி ஓர் அவதார விசேஷத்திலேயே நிரூபித்துக் காட்டியருளினபடி. (8)

## அவதாரிகை.

இப்படி ப்ரயோஜனாந்தர பரருக்கும் தான் இரப்பாளனாகிக் கார்யம் செய்தபடியையும், அபேக்ஷியாதார் தலையிலும், திருவடிகளை வைத்தருளின ஸௌலப்யாதிசயத்தையும் திரிவிக்ரமாவதார ப்ரஸங்கத்தாலே யநுபவித்துத் தன்னை அபேக்ஷிக்காதவர்களுக்கும், தன்னைக் கொண்டு மற்றொரு ப்ரயோஜனத்தைக் கொள்ளப் பார்க்கு மவர்களுக்கும் உபகரிக்கும் ஸ்வபாவ முடையவன் தன்னை விட்டு அகல இஷ்ட மில்லாதவர்களாய்த் தன்னையே அபேக்ஷிக்கும் நமக்குத் தன்னைத் தன் அர்ச்சாவதார ஸமாதியை யழித்துக் கொண்டாகிலும் ஆலோகன ஆலாபாதிகளைச் செய்யக் கண்டிலோம் என்கிற துக்கம் தலையெடுத்து அதனால் நாயகனைப் பிரிந்த பிராட்டி தசையை யடைந்து அதிகமும் வருந்தியவராய் 'வேர்க்கும்' என்ற பாட்டில் சொன்னபடி சரீர ஸ்வபாவ ப்ராப்த சேஷ்டையும் ஒழிந்து அப்ரக்ருதிங்கதராய் நிற்கு மளவில், திருத்தாயார் இவளைப் பெறவேண்டும் என்கிற அபிநிவேசாதிசயத்தால் ப்ரேமம் அதிகரித்து மதி கலங்கி வ்யாதியின் நிதான மறியாமல் தேவதாந்தர பக்தர்களினாலாவது இவ் வ்யாதியைப் பரி

ஹரிப்போம் என்று நினைத்து அதில் ப்ரவர்த்திக்கும் ஸமயத்தில் 'தீர்ப்பாரை யாமினி'யின் படியே இவள் படியை யறிந்த தோழி, 'இசைக்கின்றதே இவள் நோய் இது மிக்க பெருந்தெய்வம் இசைப்பின்றி நீரணங்காடும் இளம் தெய்வ மன்றிது' என்று விலக்கி, 'சங்கு சக்கர மென்றிவள் கேட்க நீர் இசைக்கிற்றிராகில் நன்றே இயல் பெறு மிது காண்மினே,' 'மதுவார் தண்ணந்துழாய் முடி பாயப்பிரான் கழல் வாழ்த்தினல் அதுவே இவளுற்ற நோய்க்கும் அருமருந் தாகுமே' என்று வ்யாதிக்குத் தகுந்த தான ஒரு பரிகாரத்தைச் சொல்ல, அதைக் கேட்டு அதையே தாரகமாகக் கொண்டு தொழுதாடித் தூமணி வண்ணனுக் காட்செய்து நோய் தீர்ந்த வழுவாத தொல் புகழ் வண்குருகூர்ச் சடகோபனைப் போல, இவரும் மூர்ச்சை தெளிந்து, அந்த பகவந்நாம ச்ரவணத்தினலே சக்தியும் அவனை அப்பொழுதே அநுபவிக்க வேண்டுமென் கிற தீவ்ரமான த்வரையும் உண்டாக்கப் பட்டவராய், அப்பொழுது அவ்விடத்தில் நிலைபெறுமல் அவர்களுடைய ஹித வசனங்களை யெல்லாம் புறக்கணித்து விட்டுத் 'தென் திருப்பேரையில் சேர்வன் சென்றே' என்ருழ்வார் உத் யோகித்தாற்போல, ப்ரயோஜநாந்தரபரருக்கும், ஈச்வராபி மானிகளுக்கும், தன்னை யபேக்ஷிக்காதவர்களுக்கும் கார்யம் செய்யும் எம்பெருமான் அநந்ய ப்ரயோஜனரான நமக்குக் கார்யம் செய்யாமை யில்லை. 'தன் மன்னு நீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்,' 'போரார் வேற்கண்ணீர்! அவனகில் பூந்துழாய் தாரா தொழியுமே? தன்னடிச்சி யல்லளே மற்றுராளு மல்லனே என்றெழிந்

தாள்'—நோய்க்கு நிதானம் ஸர்வேச்வர னென்பின்பு நீங்கள் இப்படிப் பதற வேண்டுமோ? நிதானம் அவனவதும் அவன் நம்முடைய அபேக்ஷிதம் செய்யா னென்பதும் அஸங்கத மன்றோ? தானகச் செய்யா தொழிந்தாலும் காலைக் கட்டி யாகிலும் செய்வித்துக் கொள்ள நமக்கு ப்ராப்தி இல்லையோ? வேறு அப்ராப்தமான தேவதைகளா யிருந்தாலன்றோ துஷ்பரிஹாரம் என்று கைவிடுவது? ஆகையால் அங்கே போய் ஆச்ரயித்தால் நம் நோய் தீரு மென்று நிச்சயித்து அடியவர்க்கு மெய்யன் திருவடிகளைத் தொழ உத்யோகித்ததைப் பார்த்துத் திருத்தாயார் தோழியைக் குறித்து, எவ்விதமான கொடுமையான பாபங்களா யிருப்பினும் அவற்றைப் போக்கக் கூடிய மருந்து இதென்று நீங்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டு, அம் மருந்தைத் தான் உபாஸிக்க வேண்டு மென்று அதனுடைய தயையை எதிர்பார்த்து நிற்க, அதாவது அந்த மருந்தைக் கொண்டுவந்து அதனல் வ்யாதியை நிவ்ருத்தி செய்து கொள்ள வேண்டுமென்று நிற்கு மளவில், இவளுக்குத் துர்நிவாரமான அபிநிவேசம் உண்டாயிற்றே. மருந்தின் பேர் கேட்ட மாத்திரத்திலேயே இப்படி நோவு படுகிருளே என்று வியந்து சொல்லுகிருள். 'பெருந் தேவன் பேர் சொல்ல' என்கிறபடியே மருந்தின் பேர் சொன்ன மாத்திரத்தில் இவள் வ்யாதி தீரு மென்று நீங்கள் சொல்லுகிற பொழுது இவள் வ்யாதி இவ்வாறு வ்ருத்தியாகா நிற்கிறதே! இதென்ன விரோத ஸ்வபாவமாய் நின்றது என்ருச்சரியப் படுகிருள்—'வெற்புடன்' இத்யாதியால்.

## கட்டளைக் கலித்துறை.

வெற்புட ெனான்றி யயிந்தையில் வெவ்வினை தீர் மருந்தொன்
றற்புத மாக வமர்ந்தமை கேட்டருள் வேண்டி நிற்கப்
பற்பின் மறந்தசெய் யாள்படி காட்டிய பண்புடை யெம்
விற்புரு வக்கொடிக் கோர்விலங் காமயல் பெற் றனமே. (9)

## பதவுரை.

வெற்புடன் - பர்வதத்துடன், ஒன்றி - சேர்ந்து நிற்கிற, அயிந்தையில் - திருவஹீந்திரபுரத்தில், வெவ்வினை - க்ரூரமான பாவங்களை, தீர் - நிவ்ருத்தி செய்கிற, ஒன்று - அத்விதீயமான, ஒப்பற்ற வென்றபடி; மருந்து, அற்புத மாக - எல்லாரும் ஆச்சரியப் படும்படி, அமர்ந்தமை - நித்ய வாஸம் பண்ணிக்கொண்டிருக்கும்படியை, கேட்டு - தோழிகள் சொல்லக் கேட்டு, அருள் வேண்டி நிற்க - அந்த ஔஷதத்தின் க்ருபையைத் தானும் பெற வேண்டு மென்று அபேக்ஷித்து நிற்க, பற்பில் - (பற்பு - பத்மம், இல் - க்ருஹம்) தாமரைப் பூவாகிய தன்னுடைய பிறந்த வகத்தை, மறந்த - மறந்தவளான, செய்யாள் - பெரிய பிராட்டியாருடைய, படி - ஸ்வபாவத்தை, காட்டிய - நமக்கு ப்ரத்யக்ஷமாகக் காட்டினவளான, பிராட்டியைப் போலப் பிறந்த வகத்தை மறந்தவளான என்றபடி; பண் புடை - அவளைக் காட்டிலும் வைலக்ஷண்யத்தை யுடைய வளான, என் விற்புருவக் கொடிக்கு - இதற்கு முன் எனக்

குப் பவ்யையாய் இருந்த வில் போன்ற புருவத்தை யுடைய கொடிபோன்ற என் மகளுக்கு, ஓர் - அத்விதீய மான, விலங்கா - நிவ்ருத்தி யடையாத, மயல் - வ்யாமோ ஹத்தை, பெற்றனமே - அடைந்தனமே.

வ்யாக்யாநம்.

வெற்புடனின்று—மாமலையி லுள்ள மருந்தே பிணி தீர்க்கும்' என்னும் பழமொழியின்படியே வீர்யவத்தர மாகும்படி மலையுடன் சேர்ந்து. அன்றிக்கே, இது 'அயிந் தை' என்பதற்கு விசேஷண மாகவுமாம். அன்றிக்கே, 'வேங்கட மாமலை யுச்சியை' என்கிறபடியே மலைக்கே தான் ஒரு அவயவபூத மென்னும்படி அதை விட்டுப் பிரி யாமல் நிற்பது அருளிச் செய்யப்பட்ட தாகவுமாம். 'கருட நதீ தட தமாலம்' என்று அவ்விடத்திற்கும் ஒப் பற்ற சோபாவஹமாகவன்றே இவ்வெம்பெருமான் இருப் பது. இந்த ஔஷதம் மலையை விட்டு எடுத்துக் கொண்டு போய் உபயோகிக்க வேண்டிய தில்லாமையாலே வெற் புடனின்றி நின்றே வெவ்வினை தீர்க்கும் மருந்தாயிற்று. தானிருந்த விடத்திலேயே இருந்து தன்னை நினைத்தவர் களுக்கு ஸர்வ வ்யாதிகளையும் தீர்க்கும் மருந்தல்லவா இது! 'उदितं भवतः पायात् औषधाद्रि समीपतः। औषधं चेतसा सेव्यम्' (உதிதம் பவதஃ பாயாத் ஔஷதாத்ரி ஸமீபதஃ| ஔஷதம் சேதஸா ஸேவ்யம்) என்று இவர் தம்மாலேயே அருளிச் செய்யப்பட்டது. இதனால் ம்ருத ஸஞ்ஜீவினி முதலிய ஓஷதிகளைப் போல எடுத்துக் கொண்டு வரு வதின் அருமையும், அப்படித் தான் ஸர்வ ஜனங்களுக்கும் கிட்டாமையாலே மலையோடு கூடப் பிடுங்கிக்கொண்டு

வரும்படியான அருமையும் இதற்கு இல்லை என்றதாயிற்று. அயிந்தையில்—திருவஹீந்திரபுரத்தில், மலையில் முளைத்து நகரத்தில் க்ரயாதிகளுக்கு வரும் மருந்து என்றபடி.

'வெவ்வினைதீர்' இத்யாதி—'**अनुक्षणसमुत्थिते दुरित वारिधौ दुस्तरे यदि क्वचननिष्कृतिः भवति सापि दोषाविला**' (அநுக்ஷண ஸமுத்திதே துரித வாரிதௌ துஸ்தரே யதி க்வசந நிஷ்க்ருதிஃ பவதி ஸாபி தோஷாவிலா), '**यत्ब्रह्मकल्प नियुतानुभवेप्यनाश्यं तत्किल्बिषं सृजति जन्तुरिह क्षणार्धे**' (யத் ப்ரம்ம கல்ப நியுதாநுபவேப் யநாஶ்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்து ரிஹ க்ஷணார்த்தே) என்றபடியே ப்ராயச்சித்தாதிகளினால் நிவ்ருத்தி செய்ய வொண்ணாதபடி மென்மேலென வளர்ந்து கொண்டும், '**पापः प्रज्ञां नाशयति क्रियमाणं पुनः पुनः। नष्टप्रज्ञः पापमेव पुनरारभते नरः॥**' (பாபஃ ப்ரஜ்ஞாம் நாசயதி க்ரியமாணம் புநஃ புநஃ| நஷ்ட ப்ரஜ்ஞஃ பாபமேவ புநராரபதே நரஃ||) என்று மறுபடியும் பாபங்களையே ஆரம்பிக்கும்படி தூண்டிக் கொண்டுமிருப்பவையும், 'நெய்க் குடத்தைப் பற்றி யேறுமெறும்புகள் போல் நிறைந்தெங்கும் கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்' என்றும், 'செடியார் வினைகள்' என்றும், 'கொடுவினைத் தூற்று' என்றும் சொல்லப் படுபவையுமான பாப ராசிகளை என்றபடி. 'வெம்' என்பதனால் '**तिमिंगिलतिमिंगिलो गिलति तद्गिलः तं तथा तमप्यथ च तद्गिलः तदिह पश्य कर्मक्रमे**' (திமிங்கில திமிங்கிலோ கிலதி தத்கிலஃ தம் ததா தமப்யத ச தக்கிலஃ ததிஹ பஶ்ய கர்ம க்ரமே) என்கிற ந்யாயத்தினால் ஸர்வ புண்யங்களையும் அமுக்கித்

தன் பலத்தையே கொடுக்கக் கூடியதான க்ரௌர்யத்தை யுடையது என்பது விவக்ஷிதம்.

மருந்தொன்று—'ஏகம் ஸர்வப்ரதம் தர்மம்' என் கிறபடியே ஒவ்வொரு பாபங்களை மாத்திரம் நிவ்ருத்தி செய்யக் கூடிய ஒவ்வொரு ப்ராயச்சித்த விசேஷங்கள் போலன்றி, 'ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என் கிறபடி தான் ஒன்றே ஸர்வ பாபங்களையும் போக்கடிக்கக் கூடியதா யிருப்பது தெரிவிக்கப்படுகிறது. 'ஒன்று' என் பதால் சரம ஶ்லோகத்தில் ஏக சப்தத்திற்கு அர்த்தமாக நிரூபிக்கப்பட்ட ப்ராப்ய ப்ராபகங்க ளிரண்டும் ஒன்றே; ஜீவாத்மா அப்ரதான கர்த்தா வாகையால் அவனே டொக்க நினைக்கக்கூடியவ னல்லன்; ப்ரபத்தி அவனு டைய அநுக்ரஹத்திற்குக் காரண மாகையால் கேவலம் வ்யாஜம் மாத்திரம்; ஸர்வ அநிஷ்டங்களையும் போக்கி ஸர்வ இஷ்டங்களையும் கொடுப்பதில் ப்ரபத்தி வசீக்ருத ஞை தாவொருவனே போதுமானவன்; குருதரமான அங் கங்கள் ஒன்றும் வேண்டாம்; வேறு உபாயங்களையும் இதற்குதவியாக அநுஷ்டிக்க வேண்டாம் என்கிற ஆறு அர்த்தங்களும் விவக்ஷிதங்க ளாகக் கடவன. 'மருந்தும் பொருளும் அமுதமும் தானே' முதலியவை இங்கு விவக்ஷிதங்கள். ஸர்வ வ்யாதிகளுக்கும் பரிஹாரமா யிருப்பதொரு ஸித்தௌஷதம் போல் இவ் வௌஷதமும் இருக்கும் என்றபடி. இவரே, '**नाथ त्वया नतजनस्य भवौषधेन प्रख्यातमौषधगिरिं प्रणमन्ति देवाः**' (நாத த்வயா நத ஜநஸ்ய பவௌஷதேந ப்ரக்யாத மௌஷத கிரிம் ப்ரண மந்தி தேவா:) என்றருளிச் செய்தார். 'ஒன்று'—லோகத் தில் காணப்படுகிற மருந்துகள் போல் சாப்பிட வேண்டிய

தாயும், ஸ்வாதுத்வ மில்லாததாயும், அனேகம் தடவைகள் உட்கொள்ள வேண்டியதாயும் இராமல் ஸக்ருத் மனதிலேயே ஸேவ்யமாய், ஸர்வ வ்யாதி நிவர்த்தகமாய், ஸ்வயம் போக்யமுமாய் இருக்கையா லுண்டான வைலக்ஷண்யம் த்யோதிதம்.

அற்புதமாக வமர்ந்தமை—திருவடி தேடிக் கொண்டு போன ஸமயத்தில் ஔஷத பர்வதத்தில் முளைத்திருந்த ம்ருத ஸஞ்ஜீவினீ முதலிய திவ்யௌஷதிகள் போல் '**दिव्यौषधिधरं शैलं व्यचरन् मारुतात्मजः। महौषध्यस्ततः सर्वाः तस्मिन् पर्वतसत्तमे ॥ विज्ञायार्थिनमायान्तं ततो जग्मुरदर्शनं ॥**' (திவ்யௌஷதிதரம் சைலம் வ்யசரந் மாருதாத்மஜঃ| மஹௌஷத்யஸ் ததঃ ஸர்வாঃ தஸ்மிந் பர்வத ஸத்தமே || விஜ்ஞாயார்த்திந மாயாந்தம் ததோ ஜக்மு ரதர்ஶநம் ||) என்கிறபடியே தன்னை நாடி வந்தவனைக் கண்டு ஒளித்துக் கொள்ளாமல், '**ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहं**' (யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்) என்கிறபடியே தன்னை வேண்டி யாச்ரயித்தவர்களுக்கு மிகவும் ஸுலபனாய்த் தன்னை ஸர்வ விதத்தாலும் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கை விவக்ஷிதம்.

'பற்பில்' இத்யாதி—'**उदधिपरमव्योम्नोः विस्मृत्य मादृशरक्षणक्षममिति धिया भूयः श्रीरंगधामनि मोदसे**' (உததி பரம வ்யோம்நோர் விஸ்ம்ருத்ய மாத்ருஶ ரக்ஷண க்ஷமமிதி தியா பூயঃ ஸ்ரீரங்கதாமநி மோதஸே) என்கிறபடியே நம்மை ரக்ஷிப்பதற்காகத் தன்னுடைய ஜனன பவனத்தை மறந்த பிராட்டியைப்போல இவளும் தன்னுடைய ஜனன பவனத்தை மறந்தாள். 'திருக்கோளூர்க்கே நேரிழை நடந்தாள் எம்மை ஒன்றும் நினைத்திலளே,' 'தாயென

நின்றிரங்காள்' என்று சொல்லுகிறபடியே இத்தலையில் உள்ளது அடங்கலும் மறந்தாள். இது 'நோபஜநம் ஸ்மரந் இதம் சரீரம்' என்னும்படி யாயிற்று. பரமபத வாஸத்தை மறக்கும்படி செய்தது ஜனனபவன ப்ரீதி. 'வைகுண்ட வாஸேபி நமேபிலாஷ:' என்ரு ரன்ரே. அதையும் மறக்கும்படி செய்தது இந்த நாயகனிடத்தில் உண்டான ப்ரேமாதிசயம். 'समा द्वादश तत्राहं राघवस्य निवेशने। भुंजानाऽमानुषान् भोगान् सर्वकामसमृद्धिनी ॥' (ஸமா த்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே | புஞ்ஜாநாऽமாநுஷாந் போகாந் ஸர்வ காம ஸம்ருத்திநீ ||) என்று ஜனகராஜன் திருமகள் ஸ்ரீமிதிலையை நினையாததைப்போல இவளும் தனக்காக எம்பெருமான் முன்னிவந்து உறையும்படியையும் அவனுடைய ஸ்வரூப ரூப குணாதிகளையும் அநுஸந்தித்தவாறே ஜனன பவனத்தையும் மறந்தாளாயிற்று. 'त्वद्भक्तिभूषितधियामिह देवभावं' (த்வத் பக்தி பூஷித தியா மிஹ தேவ பாவம்), 'நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே' என்றிவர்கள் இந்த விபூதியி லிருக்கும் பொழுதே நித்ய ஸூரிகள் என்றருளிச் செய்தா ரன்ரே. 'பின்னைகொல் நிலமாமகள்கொல்,' 'காவியங்கண்ணி எண்ணில் கடிமாமலர்ப் பாவையொப்பாள்' என்றிவை முதலியவைகளிற்படியே இவ் விஷயத்தில் ப்ரேமாதிசயமுடையவர்களைப் பெரிய பிராட்டியாருக்கு ஒப்பாக வன்ரே சொல்லுகிறது.

பண்புடை—'मां नयेद्यदि काकुत्स्थः तत्तस्य सदृशं भवेत्' (மாம் நயேத்யதி காகுத்ஸ்த: தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத்) என்று ஆறியிருந்த பிராட்டியைக் காட்டிலும் அவனிருக்கு மிடத்துக்குப் போக த்வரிக்கிற இவள் அவ

ளிலும் அதிக ப்ரேம முடையவள் என்றபடி. 'பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும் சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வ தெஞ்ஞான்றுகொலோ' என்கிற விடத்தில் ஸ்ரீ ஆண்டாளும் ருக்மிணிப் பிராட்டிக்கு ஆச்வாஸகரமான ஸ்ரீபாஞ்சஜந்ய த்வனியும், ஸீதாப் பிராட்டிக்கு ஆச்வாஸகரமான திருச்சார்ங்கத்தின் நாண் ஒலியும் இரண்டுமாகச் சேர்ந்து அவ்விருவருடையவும் ஆர்த்யதிசயத்தை யுடைய தனக்கு ஆச்வாஸகரமாக வேண்டுமென்று ப்ரார்த்தித்தாள்.

'விற்புருவ' இத்யாதி—'**दरनमितमनोज्ञभ्रूलताचापभाजां तरलहृदयलक्ष्ये तादृशस्नेहदिग्धे। कुवलयनयनानां कूणिते लोचनास्त्रे शरणयतु विवेकः कां दिशं कांदिशीकः॥**' (தரநமித மநோஜ்ஞ ப்ரூலதா சாபபாஜாம் தரள ஹ்ருதய லக்ஷ்யே தாத்ருஶ ஸ்நேஹ திக்தே | குவலய நயநாநாம் கூணிதே லோசநாஸ்த்ரே சரணயது விவேகஃ காம் திஶம் காந்திஶீகஃ) என்கிறபடியே இப்புருவத்துக்கும் இவ்வடிவழகுக்கும் இவ் வைலக்ஷண்யத்துக்கும் இலக்கானார் படும் பாட்டை இப்பெண் படுவதே என்கிறாளாகவுமாம். அதுவுமன்றிக்கே, இவ்வளவு விரஹ தசையிலும், '**पांसुप्रदिग्धामिव हेमरेखां**' (பாம்ஸு ப்ரதிக்தா மிவ ஹேமரேகாம்) என்கிறபடியே தன் ஸ்வாபாவிகமான வடிவழகு குறையாமையை யநுஸந்தித்துத் தாயார் வருந்துகிறாளாகவுமாம்.

ஓர்—அத்விதீயமான, இதுகாறும் இவ்விஷயத்தில் ப்ராவண்ய முடையவர்களில் இவ்வளவு அபிநிவேசாதிசயத்தை யுடையவர்களைக் கண்டிலோமே யென்கிறாள். கள்வன் கொல் பிராட்டியும் மாதவன்தன் துணையாய் நடந்

தாள். உண்ணுஞ்சோறுப் பிராட்டியும் ஊரும் நாடு முலகமும் தன்னைப்போல் பூவை பைங்கிளிகள் பந்து துதை பூம்புட்டில்கள் இவற்றில் உபகரணம் முதலிய இத்தலையி லுள்ளவற்றை மறக்கவில்லை. 'அவன் சீர் வள மிக்க அவனூர் வினவி' என்கிறபடியே அருகிலிருந் தாரை வழி கேட்டுக் கொண்டு நடந்தாள். அப்படிக் கில்லாமல் 'नैषा पश्यति राक्षस्यो नेमान् पुष्पफलद्रुमान्। एकस्थहृदया नूनं राममेवानुपश्यति ॥' (நைஷா பஶ்யதி ராக்ஷ ஸ்யோ நேமாந் புஷ்ப பல த்ருமாந்| ஏகஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி ||) என்கிறபடியே இத்தலையி லுள்ளவை யடங்கலும் மறந்து கேவலம் அவனுடைய பாவனையேயாய் இருப்பவள் இவள் ஒருவளே யாயிற்று என்றபடி. அன்றிக்கே, ஓர் மயல்—அத்விதீயமான மயல் என்றந்வயிக்கவுமாம். குணாதிகமுமாய் ப்ராப்தமுமான விஷயத்தில் உண்டான வ்யாமோஹமாகையால் 'வ்யதி தாம்' என்னச்செய்தே 'அநிந்திதாம்' என்றும் 'பரமா பத மாபந்ந:' என்னச் செய்தே 'ஸது நாகவர: ஸ்ரீமாந்' என்றும் சொல்லுகிறபடியே அடிக்கழஞ்சு பெறும்படி யாயிற்று, இம்மயல். 'विपदः सन्तु नः शश्वत् यासु संस्मर्यते भवान्' (விபத: ஸந்து ந: ஶஶ்வத் யாஸு ஸம் ஸ்மர்யதே பவாந்) என்றாள் குந்தியும்.

விலங்கா மயல்—விலங்கு - நிகளம் (சங்கிலி), அதாவது தன்னிஷ்டப்படி ஸஞ்சரிப்பதற்குத் தடையான மயல். 'संरक्षणीयममराधिपते त्वयैव दूरं प्रयातमपि दुस्त्यजगाढबन्धम्। आकृष्टवानिति भवान् अनुकंपमानः सूत्रानुबद्धशकुनिक्रमतः स्वयं मां ॥' (ஸம்ரக்ஷணீய மமராதிபதே த்வயைவ தூரம் ப்ரயாதமபி துஸ்த்யஜ காட பந்தம்| ஆக்ருஷ்டவா

நிதி பவா நநுகம்பமாந: ஸூத்ராநுபத்த சகுநி க்ரமத: ஸ்வயம் மாம் ||) என்கிறபடியே எவ்வளவு தூரம் ஓடிப் பறந்தாலும் கடைசியில் கட்டுத் தறியில் வந்து நிற்கும் பறவையைப் போலத் தமக்கு எந்த விடத்திலும் மனது பொருந்தாமை விவக்ஷிக்கப்படுகிறது. 'அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்கிறபடியே வேறொன்றின்மேற் செல்லாதபடி தம்முடைய திருவுள்ளத்தைத் தன்னிடத்திலேயே கட்டி வைத்திருக்கக்கூடிய யயல் என்று தாத்பர்யம். 'प्रत्यङ्गपूर्णसुषुमासुभगं वपुस्ते दृष्ट्वा दृशौ विबुधनाथ न तृप्यतो मे।' (ப்ரத்யங்க பூர்ண ஸுஷுமா ஸுபகம் வபுஸ்தே த்ருஷ்ட்வா த்ருஶௌ விபுத நாத ந த்ருப்யதோ மே), 'त्वद्बाहुभिः मम दृढं परिरभ्यते धीः' (த்வத் பாஹுபி: மம த்ருடம் பரிரப்யதே தீ:), 'बिंबाधरं विकचपंकजलोचनं ते लंबालकं ललितकुण्डलदर्शनीयम् ॥ कान्तं मुखं कनककैतककर्णपूरं स्वान्तं विभूषयति देवपते मदीयम् ॥' (பிம்பாதரம் விகச பங்கஜ லோசநம் தே லம்பாளகம் லளித குண்டல தர்ஶநீயம் | காந்தம் முகம் கநக கைதக கர்ண பூரம் ஸ்வாந்தம் விபூஷயதி தேவபதே மதீயம்) என்றன்றோ இவர் திருவுள்ளத்தை ஸ்ரீதெய்வநாயகனுடைய வடிவழகு கவர்ந்தபடி. இத்தைக் கணிசித்துப் பின்புள்ளாரும், 'अजातजनसंबाधे हरेराभिमतास्पदे। अहीन्द्रनगरे वस्तुं आकांक्षीत् वत्सरान् बहून् ॥ विहगवरसरित् कृतावगाहो विबुधपतिं प्रणमन् दिनेदिनेसौ। न्यवसदतिसुखं फणीन्द्रपुर्यां निगमकिरीटविचारनीतकालः ॥' (அஜாத ஜநஸம்பாதே ஹரேரபிமதாஸ்பதே | அஹீந்த்ர நகரே வஸ்தும் ஆகாங்க்ஷீத் வத்ஸராந் பஹூந் || விஹக வர ஸரித் க்ருதாவகாஹோ விபுதபதிம் ப்ரணமந் திநே திநேஸௌ | ந்யவஸ ததிஸுகம்

பணீந்த்ர புர்யாம் நிகம கிரீட விசார நீதகாலஃ ||) என்றநுஸந்தித்தார்கள்.

'விலக்கா' என்பது மெலிந்து 'விலங்கா' என்ருகி, அதற்கு ஒருவராலும் நிவர்த்திக்க முடியாத என்றும் பொருளாகக் கடவது. அதாவது ஹிதம் சொல்லுகிற தாய்மார் தோழிமார் முதலியோராலும் விலக்க முடியாத என்று தாத்பர்யம். உம்மை ஆச்ரயித்தவர்களுக்கு 'இருவிலங்கு கழித்து' என்கிறபடியே புண்ய பாபங்க ளாகிற இரு விலங்குகளும் விநஷ்டமானாலும் அவைகளைக் காட்டிலும் ப்ரபலதமமாய் அநிவர்த்தநீயமான மோக்ஷ கமன விரோதியான அர்ச்சாவதார ஸங்கமாகிற விலங்கு உண்டாவதே! என்றுமாகும் 'பக்தாஃ தாவக ஸேவாரஸ பரிதாஃ ஸகல ரக்ஷணைக்ஸைக ருசிநா| கருணநி தரந்தி சிரம் காங்க்ஷித மோக்ஷாऽபி த்வயா ஸ்தாபிதாஃ' என்றது இங் கநுஸந்தேயம். 'நிஜகர்ம நிகள யுகளம் அச்யுத க்ருத்வா மம ப்ரியாப்ரிய வர்க்கெள| கதா கோர களேபர காராக்ருஹ குஹர நிர்க்கதம் கரிஷ்யஸி மாம்' என்று ப்ரார்த்தித்த இவருக்கே அவைகளைக் காட்டிலும் விலக்ஷணமான விலங்கு உண்டாயிற்றே யென்று தாத்பர்யம்.

இத்தால் வ்யாதி நிவ்ருத்திக்காக மருந்து தேட மயல் அதிக மாயிற்று என்று விரோதமும், பகவந் நாமத்தைச் சொல்லக் கேட்டதனல் அவ்விஷயத்தில் அநுராகம் அதிக மாயிற்று என்பதனல் ஸமாதானமும் ஏற்படுகிறபடியினல் இது விரோதாபாஸாலங்காரம். (9)

அவதாரிகை.

இப்படி இவருக்குப் பிறந்த ப்ராவண்யாதிசயமும், அத்தலையில் யதாமநோரதம் ஆலோகன ஆலாபனதிக

ளான ஸம்ச்லேஷங்களைப் பெருமையால் மிகவும் வருந்தினமையும் சொல்லுகிறபடியினால் இப்பாட்டு பரம பக்தியின் பராகாஷ்டையான தசை என்னலாம்படி யாயிற்று. இவ்வளவில் எம்பெருமான், இவர் மநோரதித்தபடி அர்ச்சாவதார ஸமாதியைக் குலைத்துக் கொண்டாவது இவருக்கு அபீஷ்டமான ஸல்லாபாதிகளைச் செய்யாவிடில் இவர் க்ஷண மாத்திரமும் ஆத்மதாரணம் பெருதவராய் நிற்கும்படியைக் கடாக்ஷித்து, இவரோடு ஆலாபனுதிகளைச் செய்யாவிடில் தனக்கு ஸ்வரூப ஹானியாக நினைத்தான். '**भरतस्य वचः कुर्वन् याचमानस्य राघव। आत्मानं नातिवर्तेथाः**' (பரதஸ்ய வசஃ குர்வந் யாசமாநஸ்ய ராகவ | ஆத்மாநம் நாதிவர்த்தேதாஃ) என்கிறபடியே ஆச்ரித ரக்ஷணத்தைச் செய்யாகுகில் தனக்கு ஸ்வரூப ஹானி என்றன்றே அவன் நினைத்திருக்கும். '**मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन**' (மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந) என்கிறபடியே பாவனை பண்ணித் திரிவாரையும் விட முடியாத வாத்ஸல்யத்தை யுடையவன் இவ்வாசார்யன் போல்வாரைக் கண்டால் மேல் விழாமல் இருப்பனே? 'ஸ மஹாத்மா ஸுதுர்லபஃ' என்ப தன்றே சரண்யனுடைய வார்த்தை. இப்படிப்பட்டவன் இவருடைய மனோரதப்படி, '**आख्याहि मम तत्वेन राक्षसानां बलाबलम्**' (ஆக்யாஹி மம தத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்) என்று பெருமாள் ஸ்ரீவிபீஷணுழ்வானைக் குறித்து ப்ரச்நம் பண்ணினைப் போலவும், முக்தனை ஸ்ரீவைகுண்டநாதன் 'கதம் பூதோஸி,' 'கோஸி' என்று ப்ரச்நம் பண்ணுகிறுப்போலவும் இவருடைய சதுரதரமான உக்தி பரம்பரைகளைக் கேட்பதற்காக இவருடைய ஸம்ச்லேஷத்தினு லுண்டான

ப்ரீதி வடிவிலே நிழல் எழும்படி ‘அந்தாமத்து’ ப்படியே தோன்றி நின்று சில ப்ரச்நங்களைப் பண்ண அதற்குத் தாம் உத்தர மருளிச்செய்த ப்ரகாரங்களை யருளிச் செய்கிறார். **‘यतीशरङ्गेशसंलपनरूपम्’** (யதீச ரங்கேச ஸம்லபந ரூபம்), **लक्ष्मीपतेर्यतिपतेश्च दयैकधाम्नो योऽसौ पुरा समजनिष्ट जगद्धितार्थम्। प्राच्यं प्रकाशयतु वः परमं रहस्यं संवाद एष शरणागतिमन्त्रसारः॥’** (லக்ஷ்மீபதேர் யதிபதேஶ்ச தயைக தாம்நோர் யோऽஸௌ புரா ஸமஜநிஷ்ட ஜகத்திதார்த்தம் | ப்ராச்யம் ப்ரகாசயது வஃ பரமம் ரஹஸ்யம் ஸம்வாத ஏஷ சரணாகதி மந்த்ர ஸாரஃ ||) என்பவற்றின்படியே அடியவர்க்கு மெய்யனுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் உண்டான சரணாகதி மந்த்ரத்தின் ஸாரமான ஸம்வாதம் இப்பாட்டு.

நிலமண்டில வாசிரியப்பா.

பெற்றனை நீயே மற்றுள தெல்லாம்
பெறுவது நின்னை யுறுவது கொள்வார்
நின்னா லன்றி மன்னா ரின்பம்
நின்பொ ருட்டுநீ யென்பொருட் டில்லை
நின்னுரு நின்று மின்னுருத் தோன்றும்
நின்தனக் குநிகர் நின்னடி யடைவார்
நின்பா லன்றி யன்பா லுய்யார்
வாரண மழைக்க வந்தகா ரணமே. (10)

(மும்மணிக்கோவை மேல் இருபது பாட்டுக்களும் லுப்தம்.)

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

மும்மணிக் கோவை முற்றிற்று.

## பதவுரை.

வாரணம் - கஜேந்திரம், அழைக்க - ஆஹ்வானம் செய்ய, வந்த - அந்த யானை முதலையால் பிடிக்கப்பட்டு நின்ற குளக்கரையைத் தேடி வந்த, காரணமே - ஜகத் காரண வஸ்துவே, மற்று - உன்னை யொழிந்தவையான, உள தெல்லாம் - இந்த ஜகத்தி லிருக்கும் எல்லாப் பதார்த் தங்களையும், பெற்றனை நீயே - நீயே பெற்றாய், அடைந் தாய் அல்லது ஸ்ருஷ்டித்தாய், உறுவது - ஸ்வரூபோசித மான புருஷார்த்தத்தை, அன்றிக்கே த்ருடமான புருஷார்த் தத்தை, கொள்வார் - அங்கீகரிக்க விரும்புகிறவர்கள், நின்னை - உன்னையே, பெறுவது - அடைவது உசிதம், பெறு கிறார்கள் என்று வினைமுற்றாகவுமாம்; நின்னா லன்றி - ஸித் தோபாயமாகிய உன்னை உபாயமாகக் கொண்டன்றி, இன்பம் - அந்த நிரதிசய ஸுகரூபமான மோக்ஷ புருஷார்த் தத்தையும், மன்னார் - அடைய மாட்டார்கள், பரமைகாந் திகள் என்று சேர்த்துக் கொள்ளவும்; (இப்படி ஆச்ரி தரைக் காப்பாற்றுவதும் தன்னுடைய ப்ரயோஜனத்திற் காக வாதலால் எனக்கு என் அபீஷ்டத்தைக் கொடுத்து நிற்பதும்) நின் பொருட்டன்றி - உன்னுடைய ப்ரயோ ஜனத்திற்காகவல்லாமல், என் பொருட்டில்லை-என்னுடைய ப்ரயோஜனத்திற்காக வில்லை, அன்றிக்கே அநந்ய ப்ரயோ ஜனர்கள் உன்னைக் கொண்டு உன்னைப் பெற விருக்கிற தும் உன்னுடைய ப்ரயோஜனத்திற்காக வாகையினால் இவ்வளவாக உன்னை நான் ப்ரார்த்திப்பதும் உன் ப்ரயோ ஜனத்திற்காகவே யன்றி என் ப்ரயோஜனத்திற்காக வில்லை என்றபடி. நின்னுரு நின்று - உன்னுடைய ரூபத்தி லிருந்

தும் ப்ரளய தசையில் அதாவது உனக்கு சரீரமாய் நின்ற தமஸ்ஸி லிருந்து, மின்னுரு - மின்னலுக்கு ஸத்ருசமாய் அநித்யமான, உரு - ப்ரபஞ்சமான சரீரம், தோன்றும் - உண்டாகும், நின்தனக்கு - இப்படிப் பட்ட ஸ்வபாவங் களை யுடைய உனக்கு, நிகர் - ஸத்ருசமானவர்கள், நின்னடி - உன் திருவடிகளை, அடைவார் - அடைகிறவர்கள், ஆச்ரயித்த ஸாதுக்கள் என்றபடி; (அவர்கள்) நின்பால் - உன்னிடத்தில், அன்பா லன்றி - ஸ்நேஹத்தினு லன்றி மற்றொரு அன்ன பானுதிகளினுல், உய்யார் - ஜீவிக்க மாட்டார்கள், ஆத்ம தாரணம் செய்ய மாட்டார்கள் என்றபடி.

## வ்யாக்யாநம்.

'பெற்றனை' இத்யாதி—அதிமாத்ரம் ப்ரவ்ருத்தமான விரஹ க்லேசம் தீர வந்து முகம் காட்டி முடிய வொட்டாமல் ப்ராண தாரணம் பண்ணும்படி செய்தமையினுல் என்னொருவனைப் பெற்ற மாத்திர மன்றிக்கே ஸர்வ லோகங்களையும் இன்ருகப் பெற்றுப் போலே நினைத்திருக்கின்றுய் நீ என்கிருர். 'அஞ்சிறைய மடநாரா' யில் என்னொருவனைக் காப்பாற்றுவிடில் உன் நாராயணத்வமே விகலமாகப் போய்விடும் என்று ழ்வார் அருளிச் செய்ய, அதன்மேல் அவரோடு ஸம்ச்லேஷித்தமையினுல் எம்பெருமான் அளவியன்ற வேழுலகத்தவர் பெருமான் ஆனது போல், இவரோடு ஸம்ச்லேஷித்ததனுல் மற்றுள தெல்லாம் பெற்றவனுக நினைத்திருக்கத் தட்டில்லை. '**गुहेन सहितो रामः लक्ष्मणेन च सीतया**' (குஹேந ஸஹிதோ ராமः லக்ஷ்மணேந ச ஸீதயா), '**कदान्वहं समेष्यामि भरतेन महात्मना। शत्रुघ्नेन च वीरेण त्वया च रघुनन्दन॥**' (கதாந்வஹம் ஸமேஷ்யாமி

பரதேந மஹாத்மநா| சத்ருக்நேந ச வீரேண த்வயா ச ரகுநந்தந) என்று பெருமாளுக்கு ஸ்ரீகுஹனுடையவும், ஸ்ரீபரதாழ்வானுடையவும் ஸமாகமம் உண்டான பிறகு, எப்பொழுதும் பிரியாமல் இருக்கிற இளைய பெருமாளுடையவும் பிராட்டியுடையவும் ஸமாகமம் கார்யகரமாய்த் தோன்றிற்று. **'त्वयि किंचित् समापन्ने किं कार्यं सीतया मम'** (த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம)—இன்று வந்த குரங்குக்கு ஏதாவது கேடு வரில் பிராட்டியையும் வேண்டேன் என்பதன்றோ அவன் படி. அப்படியே ஸ்ரீ தெய்வநாயகனுக்கு இவ்வாசார்யனுடைய லாபம் உபய விபூதி லாபமாகத் தோன்றுகிறது.

இப்படி இவர் அருளிச் செய்த பாசுரத்தைக் கேட்டு **'आकर्णयिष्यति यथा विबुधेश्वरस्ते प्रेयानसौ पृथुकजल्पितवन्मदुक्ति'** (ஆகர்ணயிஷ்யதி யதா விபுதேஶ்வரஸ் தே ப்ரேயாநஸௌ ப்ருதுக ஜல்பிதவந் மதுக்திம்) என்றிவர் ப்ரார்த்தித்தபடியே முக்தனை சிசுவின் மழலைச் சொல்லைக் கேட்க விரும்பும் பிதாவைப்போல இவருடைய மென்மேலான உக்திகளைக் கேட்க மிகவும் அபிநிவிஷ்டனாய் ஸ்ரீ தெய்வநாயகன், **'वरं वरय तस्मात् त्वं यथाभिमतं आत्मनः। सर्वं संपत्स्यते पुंसां मयि दृष्टिपथं गते॥'** (வரம் வரய தஸ்மாத் த்வம் யதாபிமதம் ஆத்மநஃ| ஸர்வம் ஸம்பத்ஸ்யதே பும்ஸாம் மயி த்ருஷ்டிபதம் கதே ||) என்றாற்போல ஸர்வ பல ப்ரதனை நான் ப்ரஸந்நனாயிருக்க உமக்கு வேண்டியதான பலங்களைப் ப்ரார்த்திக்க வேண்டியிருக்க என்னைப் புகழ்வதென்? என்றருளிச்செய்ய அதற்கு உத்தரம் அருளிச் செய்கிறார், 'பெறுவது' என்பதனால்.

'பெறுவது நின்னை' இத்யாதி—உறுவது கொள்வார்—நம்மாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய வைஷ்ணவாக்ரேஸரர்கள். 'தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான் கொள்சிறப்பே,' **'कदाहमैकान्तिकनित्यकिंकरः प्रहर्षयिष्यामि सनाथजीवितः'** (கதாஹ மைகாந்திக நித்ய கிங்கரஃ ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவிதஃ) என்பவற்றிலும், **'राज्ये गृध्नन्त्यविद्वांसो ममत्वाहृतचेतसः। अहंमानमहापानमदमत्ताः न मादृशाः॥'** (ராஜ்யே க்ருத்நந்த்யவித்வாம்ஸோ மமத்வாஹ்ருத சேதஸஃ| அஹம் மாந மஹாபாந மதமத்தாஃ ந மாத்ருஶாஃ||), 'ஒரு நாயகம்' முதலியவற்றிலும் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி மோக்ஷமே புருஷார்த்த மாகிலும் அந்தப் புருஷார்த்தத்தையே மற்றொருவரை ஆச்ரயித்துப் பெறலாகாதோ? மார்க்காந்தரங்களும் 'சங்கரஸ்ய து யோ பக்தஃ' இத்யாதிகளில் நிரூபிக்கப்பட வில்லையோ? 'பக்த்யாத்வநந்யயா சக்யஃ' இத்யாதிகளில் நிரூபிக்கப்பட்ட கர்மயோக ஜ்ஞாந யோக பக்தி யோகாதிகளைக் கொண்டு பெறலாகாதோ? என்ன வருளிச்செய்கிறார்—'நின்னலன்றி' இத்யாதி. 'உறுவது கொள்வார்' என்று கீழ் அருளிச் செய்திருப்பதை இங்கு அத்யாஹரித்துக்கொள்வது. அப்படிப் பட்ட மயர்வற மதிநல மருளப் பெற்ற ஆழ்வாரும் 'உன்னையல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்' என்றருளிச் செய்தார். உன்னைத் தவிர வேறு அபேக்ஷணீயமாக ஒரு புருஷார்த்தத்தை யாசிக்க மாட்டேன். அதுவும் உன்னை உபாயமாகக் கொண்டு பெறுவேனே யல்லாமல் வேறொருவரையும் பற்றிப் பெறேன் என்பதன்றோ

அவர் படி. அதை யநுஸரித்து இவரும் 'நின்னை லன்றி' என்கிறார். விளம்பித்துப் பலனைக் கொடுப்பவைகளாயும், அசக்யங்களான அங்கங்களோடு கூடியவைகளாயும், ஸாவதானத்தோடு அநுஷ்டிக்கக் கூடியவைகளாயும், அப்படி அநுஷ்டித்தாலும் விக்னங்கள் வரக்கூடியவைகளாயும், அப்படி அநுஷ்டிக்கப்பட்டு முடிந்தும் உன் ப்ரஸாதத்தைப் பலத்துக்கு முக்கிய காரணமாய் எதிர்பார்த்து நிற்பவைகளாயும், முழுவதும் அநுஷ்டிக்க அசக்யங்களாகையாலே 'மாமேவ யே ப்ரபத்யந்தே' என்கிறபடி உன்னுடைய சரணாரவிந்த சரணாகதி யன்றிச் செய்து முடிக்க அசக்யங்களாயும் இருக்கிற உபாயாந்தரங்களில் பரமைகாந்திகளா யிருப்பார் அலைய மாட்டார்கள். அவர்கள் உன் திருவடிகளில் ந்யஸ்த பரர்களாய் உன்னை உபாயாந்தர ஸ்தானத்தில் நிறுத்துகையாலே உன்னையே உபாயமாகக் கொண்டு தாங்கள் அபேக்ஷித்த காலத்தில் ஒரு வித ப்ரதிபந்தகமும் இல்லாமல் உன்னைப் பெற விரும்புவார்கள். 'सत्कर्मनिरताः शुद्धाः सांख्ययोगविदस्तथा । नार्हन्ति शरणस्थस्य कलां कोटितमीमपि ॥' (ஸத்கர்ம நிரதாః ஶுத்தாః ஸாங்க்ய யோக விதஸ் ததா | நார்ஹந்தி ஶரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி ||), 'निष्किंचनत्वधनिना विबुधेश येन न्यस्तस्स्वरक्षणभरः तव पादपद्मे । नानाविधप्रथितयोगविशेषधन्याः नार्हन्ति तस्य शतकोटितमांशकक्ष्याम् ॥' (நிஷ்கிஞ்சநத்வ தநிநா விபுதேச யேந ந்யஸ்தஸ் ஸ்வரக்ஷணபரః தவ பாத பத்மே | நாநா வித ப்ரதித யோக விசேஷ தந்யாః நார்ஹந்தி தஸ்ய சதகோடிதமாம்ஶ கக்ஷ்யாம் ||), 'ஸந்நத ஸூலபம் அச்யுத ஸமாதி ஸோபாந க்ரம விளம்ப விமுகாః | ஶரணம் கத்வா த்வாம் முக்தாః முசுகுந்த க்ஷத்ர

பந்து ப்ரமுகா:||' என்று இவ்வாசார்யர்தாமே அருளிச் செய்துள்ளார். 'மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக வுணர்ந்து ஆம்பரி சறிந்து கொண்டு ஐம்புலனகத் தடக்கிக் காம்பறத் தலைசிரைத்து உன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பரை யுகத்திபோலும்' என்றன்றோ இவர்களுடைய உத்கர்ஷம் சொல்லப்பட்டது.

இப்படியாகில் அபேக்ஷிக்கப்பட்டபடி என்னுடைய அநுபவமாகிற புருஷார்த்தத்தை அடைந்தீரன்றோ என்று பெருமாள் திருவுள்ளமாகக் கொண்டு அதற்கு உத்தரம் அருளிச்செய்கிறார்—'நின்பொருட்டு' இத்யாதி. இப்படி எனக்குப் புருஷார்த்தம் கொடுத்ததும் ப்ரதான பலியான உம்முடைய ப்ரயோஜனத்துக்காக வல்லாமல், என்னுடைய ப்ரயோஜனத்துக்காக வில்லை என்றபடி. '**भोग्यं मुकुन्द गुणभेदमचेतनेषु भोक्तृत्वमात्मनि निवेश्य निजेच्छयैव। पाञ्चालिकाशुकविभूषणभोगदायी संराडिवात्मसमया सह मोदसे त्वं ॥**' (போக்யம் முகுந்த குணபேத மசேதநேஷு போக்த்ருத்வ மாத்மநி நிவேச்ய நிஜேச்சயைவ| பாஞ்சாலிகா சுக விபூஷண போகதாயீ ஸம்ராடிவாத்மஸமயா ஸஹ மோதஸே த்வம்||) என்றிவர் தாமே யருளிச் செய்தார். '**उपादत्ते सत्तास्थितिनियमनाद्यैः चिदचितौ स्वमुद्दिश्य श्रीमानिति वदति वागौपनिषदी**' (உபாதத்தே ஸத்தாஸ்திதி நியமநாத்யை: சிதசிதௌ ஸ்வமுத்திஶ்ய ஸ்ரீமாநிதி வததி வாகௌபநிஷதீ) என்று அபியுக்தரும் ஸங்க்ரஹித்தார்கள்.

பலத்தில் ஆசை யுடையவனாய் உபாயாநுஷ்டானம் பண்ணுகிறவன் பல போக்தாவா யிருக்க, நான் பல போக்தாவா யிருப்பது எங்ஙனம் என்று பகவான் திரு

வுள்ளமாகக் கொண்டு ஸமாதானம் அருளிச்செய்கிறார்— 'நின்னுரு' இத்யாதி. காரண தசையிலும் கார்ய தசையிலும் இந்த ப்ரபஞ்சங்கள் உனக்கு சரீரமாகவே யன்றோ இருப்பது? ஆதலால் சரீரத்தினால் உண்டான ப்ரயோஜனத்தை அநுபவிக்குமவன் சரீரியான நீ யன்றோ என்றபடி. அன்றிக்கே 'அசி தவிசிஷ்டாந் ப்ரளயே ஜந்தூ நவலோக்ய' என்கிறபடியே ப்ரளய தசையி லிருந்த ஜீவாத்மாக்களைப் பார்த்து தயையுடன் கூடிய மனதை யுடையவனாய், 'பொருளென் றிவ்வுலகம் படைத்தவன்' என்றும், 'என்னில் முன்னம் பாரித்து' என்றும் சொல்லுகிறபடியே, கரண களேபர ப்ரதானம் முதலான உபகாரங்களைச் செய்தவன் நீ யன்றோ என்றபடி. அதாவது கரண களேபர ப்ரதானம் முதலாக உபாயாநுஷ்டான மளவான எல்லாவற்றையும் என்னைக் கொண்டு செய்வித்துக்கொண்டவன் நீ யன்றோ? ஆகையால் ஸர்வ நியந்தாவான நீயே ப்ரதான பலி யென்னத் தட்டில்லை. 'நம்மைப் பெறவே கருதிப் பெருந்தகவுற்ற பிரான்' என்றருளிச் செய்திருப்பது இங் கநுஸந்தேயம். ஆகையால் நான் உபாய மநுஷ்டித்ததும் ஸ்வதந்த்ரமாக வநுஷ்டித்தேனோ? நீ அந்தர்யாமியா யிருந்து செய்து வைக்கச் செய்தேனாகையால் ப்ரதான பலியான நீ ப்ரயோஜநகனாகத் தட்டில்லை யென்கிறா ராகவுமாம். 'என் னுணர்வி னுள்ளே இருத்தினே னதுவு மவன தின்னருளே' என்பது இங்கநுஸந்தேயம்.

இப்படி ப்ரதான பலியாய் ஸர்வ நியந்தாவான எனக்கு ஒப்பாகச் சொல்லக் கூடியவர்கள் உண்டோ வென்றெம்பெருமான் திருவுள்ளமாகக் கொண்டு அதற்கு உத்தரம்

அருளிச்செய்கிறார்.—'நின்தனக்கு' என்றாரம்பித்து. '**रामः कमलपत्राक्षः सर्वसत्वमनोहरः। रूपदाक्षिण्यसंपन्नः प्रसूतः**' (ராமః கமலபத்ராக்ஷః ஸர்வஸத்வ மநோஹரః| ரூப தாக்ஷிண்ய ஸம்பந்நః ப்ரஸூதః) என்னு மளவாகத் திருவடியின் வார்த்தையைக் கேட்டு இப்படி லோக விலக்ஷணமாக ஒருவர் இருப்பது ஸம்பவிக்குமோ வென்று பிராட்டி சங்கித்தாளாகக்கொண்டு '**जनकात्मजे**' (ஜநகாத்மஜே) என்று திருவடி 'எம்பெருமானுக்கு நிகராக தேவரீரில்லையோ' என்று விண்ணப்பம் செய்தாற்போல, இவரும் இப்படி வஸ்து ஸ்திதி யுண்டோ? என்று எம்பெருமான் சங்கிக்கிறதாகக் கொண்டு விண்ணப்பம் செய்கிறார், 'நின்னடி யடைவார்' என்று. 'நிரஞ்ஜநః பரமம் ஸாம்ய முபைதி,' 'தன்னையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்க வருள்செய்வர்,' 'அடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக்கீழ் கொள்ளுமப்பன்,' 'ராமஸ்ய ஆத்ம ஸமஸ் ஸகா' முதலிய ப்ரமாணங்களிற்படியே ஆச்ரிதர்கள் அவனுக்கு ஸத்ருசர்கள் என்றருளிச்செய்தபடி.

அந்த அடியார்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களுடைய லக்ஷண மென்ன வென்னில், அருளிச் செய்கிறார்—'நின்பாலன்றி' என் றாரம்பித்து. உன்னிடத்தில் ப்ரீதி செய்தன்றி க்ஷண மாத்திரமும் ஆத்ம தாரணம் பண்ண முடியாத ஸ்வபாவத்தை யுடையவர்கள் என்றபடி. ஸ்ரீமத் கீதா பாஷ்யத்தில் '**साधवः उक्तलक्षणधर्मशीलाः वैष्णवाग्रेसराः मत्समाश्रयणे प्रवृत्ताः मन्नामकर्मस्वरूपाणां वाङ्मनसागोचरतया मद्दर्शनाद्विना स्वात्मधारणपोषणादिकं अलभमानाः क्षणमात्रकालं कल्पसहस्रं मन्वानाः प्रशिथिलसर्व-**

**गात्राः भवेयुः** ' (ஸாதவః உக்த லக்ஷண தர்ம ஶீலாః வைஷ்ண வாக்ரேஸராః மத்ஸமாச்ரயணே ப்ரவ்ருத்தாః மந் நாம கர்ம ஸ்வரூபாணும் வாங்மநஸாகோசரதயா மத்தர்ஶநாத் விநா ஸ்வாத்ம தாரண போஷணுதிகம் அலபமாநாః க்ஷண மாத்ர காலம் கல்ப ஸஹஸ்ரம் மந்வாநாః ப்ரஶிதில ஸர்வ காத்ராః பவேயுః) என்றருளிச் செய்யப்பட்டது. '**यन्मुहूर्तं क्षणं वापि वासुदेवो न चिन्त्यते। सा हानिः तन्महच्छिद्रं सा भ्रान्तिः सा च विक्रिया॥**' (யந்முஹூர்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ நசிந்த்யதே| ஸா ஹாநிः தந் மஹத் சித்ரம் ஸா ப்ராந்திः ஸா ச விக்ரியா ||) என்பதும் இங்கநுஸந்தேயம். ' ஒரு பொருட் கசைவோ ரசைக திருவொடு மருவிய வியற்கை மாயாப் பெருவிற லுலகம் மூன்றினெடு நல் வீடு பெறினும் கொள்வ தெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே ' என்றன்றே மயர்வற மதிநல மருளப்பெற்ற வரின் பாசுரம். அதுவே ஸாதுக்களின் லக்ஷணம்.

இவ்வளவு ஸ்வபாவங்களை நம்மிடத்தில் நீர் கண்ட தெவ்வாறு என்ன வருளிச்செய்கிறுர்—' வாரணம் ' இத்யாதி. அழைத்தது வாரணம், வந்தது காரணம். இத ஞல் தன்னுடைய மேன்மையையும் பக்தனுடைய தண் மையையும் பராமர்சியாமல் வந்த ஸௌசீல்யாதிசயம் விவக்ஷிக்கப் பட்டது. ஸ்ரீகஜேந்திரன் ஜகத்காரண வஸ் துவைக் கூப்பிட்டபோது வேறெருவரும் வர வில்லை. நீ யொருவனுமே வந்து தோன்றினுய். ஆகையால் நீயே ஜகத்காரண மென்றேற்பட உன்னிடத்தில் இந்த ஸ்வ பாவங்கள் இருக்கும்படி யறிந்தேன் என்ருராயிற்று. ' வந்த ' என்பதனுல், '**अतन्त्रितचमूपतिप्रहितहस्तमस्वी**

**कृतप्रणीतमणिपादुकं किमिति चाकुलान्तःपुरं। अवाहनपरिष्क्रियं विहगराजमारोहतः करिप्रवरबृम्हिते भगवतः त्वरायै नमः'** (அதந்த்ரித சமூபதி ப்ரஹித ஹஸ்த மஸ்வீக்ருத ப்ரணீத மணிபாதுகம் கிமிதி சாகுலாந்தஃபுரம் அவாஹந பரிஷ்க்ரியம் விஹகராஜ மாரோஹதஃ கரிப்ரவர ப்ரும்மிதே பகவதஃ த்வராயை நமஃ||) என்றும், **' यम् पश्यन् विश्वधुर्यां धियमसकृदथो मन्धरां मन्यमानः हुंकारास्फालनाङ्घ्रिप्रहृतिभिरपि तं तार्क्ष्यमध्यक्षिपस्त्वम्'** (யம்பச்யந் விச்வதுர்யாம் திய மஸக்ரு ததோ மந்தராம் மந்யமாநஃ ஹுங்கார ஸ்பாலநாங்க்ரி ப்ரஹ்ருதிபி ரபி தம் தார்க்ஷ்ய மத்யக்ஷிபஸ் த்வம்) என்றும் சொல்லுகிறபடியே அரை குலையத் தலைகுலைய முதலை கிடந்த மடுக்கரையைத் தேடி வந்த த்வராதிசயமும், அதனால் ஆச்ரிதர்க ளிடத்திலுள்ள பக்ஷ பாதமும் அருளிச்செய்யப் பட்டதாகிறது.

இது கீழருளிச் செய்யப்பட்ட வர்த்தங்களுக்கு உப பாதக மாகிறது. 'துப்புடையாரை யடைவ தெல்லாம் சோர்விடத்துத் துணை யாவ ரென்றே ஒப்பிலே னாகிலும் நின்னடைந்தேன் யானைக்கு நீ யருள் செய்தமையால்' என்றார் பெரியாழ்வாரும். 'ஒப்பிலேன், ஆகிலும் ஆனைக்கு நீ அருள் செய்தமையால் நான் உன்னை அடைந்தேன். நீ நிச்சயமாக ரக்ஷகனவாய், மற்றவர்கள் ரக்ஷகர்களாக மாட்டார்கள்' என்று இந்த கஜேந்திர ரக்ஷணத்தி லிருந்து அறிந்து கொண்டேன் என்றல்லவோ ஆழ்வார் திருவுள்ளம். அதை யநுஸரித்து இவரும் கீழ்ச் சொல்லிய எல்லா அர்த்தங்களிலும் கஜேந்திர ரக்ஷணத்தை உதாஹரணமாக வருளிச் செய்கிறார்.

அது எங்ஙனே யென்னில்:—தன்னை யாச்ரயித்தவர்களிடத்தில் ஜாதி குணாதி தாரதம்ய மில்லாமல் யாதாமொருவனுக்குக் கேடுவரினும் அதனால் தன்னுடைய விபூதி த்வயத்துக்கும் நஷ்டம் வந்ததைப்போலப் பாவித்து அவனை மேல்விழுந்து ரக்ஷித்து, அதனால் தானும் தன் விபூதியும் ஸத்தை பெற்றது போல் நினைத்திருப்பாய் என்கிற உன் ஸ்வபாவத்தை கஜேந்திர ரக்ஷணத்தில் 'வ்யாகூர்ணந் மால்ய பூஷா வஸந பரிகர'னாகி எல்லா விபூதியுமறிய பெரிய பாரிப்புடன் வந்து ரக்ஷித்தமையால் தெரிந்து கொண்டேன். அந்த கஜேந்திர ரக்ஷணத்தை அபிநிவிஷ்டனாய்ச் செய்தருளினாய். உசித புருஷார்த்தத்தை யறிந்தவர்கள் உன்னையே தான் புருஷார்த்தமாகக் கொள்ளுவார்கள் என்பதையும் அந்த வாரணம் அழைத்தனால் தெரிந்து கொண்டேன். 'பரமாபத மாபந்நோ மநஸா சிந்தயத்ஹரிம்'—பரமாபதம்—தன்னாலும் பிறராலும் நிவ்ருத்தி செய்ய முடியாத ஆபத்தை அடைந்தது. அன்றிக்கே, 'ஆனைக்கும் தனக்குத் தக்க வாதமுண்டே' என்கிற படியே மிகவும் பலிஷ்டமாய் பெரிய சரீரத்தோடு கூடிய தன்னாலும் தாங்க முடியாததான ஆபத்து. அதுவுமன்றிக்கே, பகவானைச் சரண் புகுவதற்குக் காரணமாகையினால் அடிக்கழஞ்சு பெறும்படி ச்லாக்யமான ஆபத்து என்றாகவுமாம். 'விபதஃ ஸந்து நஃ ஶஶ்வத் யாஸு ஸம்ஸ்மர்யதே பவாந்' என்றன்றோ விவேகிகள் அபேக்ஷித்தார்கள். அப்படிப்பட்ட ஆபத்துக் காலத்தில் தன்னைத்தைப் போக்க வேண்டுமென்றன்றோ கஜேந்திரன் அபேக்ஷித்தது. தொழுங்காதல் களிறாகையால், அது தன் துதிக்கையில் வைத்திருந்த தாமரஸ புஷ்பத்தைச்

செவ்வி மாறாதே உன் திருவடிகளில் ஸமர்ப்பிக்க வேண்டு மென்கிற அபேக்ஷையாலே கூப்பிட்டது. ஆக விதனல் விவேகியா யிருப்பவர்கள் உன்னையே யடைய விரும்புவார்கள் என்றறிந்து கொண்டேன். விவேகிகள் உன்னைத் தவிர மற்றொருவராலும் ஸுகத்தை யடைய அபேக்ஷிக்க மாட்டார்கள் என்பதையும், அந்தப் பெரிய ஆபத்திலும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பாமல் உன்னைப் ப்ரத்யக்ஷீகரிக்க வேண்டு மென்று விரும்பிய கஜேந்திரனுடைய உதாரணத்தினல் தெரிந்து கொண் டேன். நீயே ஸர்வ ஜகத்துக்கும் காரணம் என்பதையும் அது காரண வஸ்துவைக் கூப்பிட்ட பொழுது மற்றவர் கள் 'நாஹம் நாஹம் நசாஹம்' என்று கைவாங்கினபடி யாலும், நீயே அங்கு வந்த படியாலும் தெரிந்து கொண் டேன். இப்படி ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதனல் உண்டாகிய ப்ரயோஜனமும் ப்ரதான பலியான உன்னுடையதே என்பதும் கஜேந்திரத்தை ரக்ஷித்து நீ ப்ரீதி யடைந்தமை யால் ஸித்த மாயிற்று. இவ் வர்த்தத்தைத் திருமாலா லருளப் பட்ட சடகோபனும், 'மழுங்காத வைந்நுதியச் சக்கர நல் வலத்தையாய் தொழுங்காதற் களி றளிப்பான் புள் ளூர்ந்து தோன்றினையே' என்றருளிச்செய்தார். அந்த கஜேந்திரனுக்கு உன்னுடைய பரம ஸாம்யத்தைக் கொடுத்தபடியால் உன்னை யாச்ரயித்தவர்கள் உனக்கு ஸத்ருசர்க ளாவர்கள் என்பதும் தெரிவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஸாதுக்கள் உன்னிடத்தில் பக்தி செய் யாமல் இருக்க மாட்டார்கள் என்பதும் அந்த யானை உம் மைக் கண்டல்லது தரிக்க முடியாத ஆவலுடன் கதறின மையால் ஏற்பட்டது. இப்படிக் கீழருளிச்செய்த அர்த்

தங்களை யதா க்ரமம் ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய வ்ருத்தாந்தத்தைக் கொண்டு ஸோபபத்திகமாக நிரூபித்தருளினாராயிற்று.

இந்தப் பாட்டில் 'பெற்றனை நீயே' இத்யாதியால் வாத்ஸல்ய ஔதார்யாதி குணங்களும், 'நின்னுரு' இத்யாதியால் ஜகத் காரணத்வமும், 'பெறுவது' இத்யாதியால் பலத்வமும், 'நின்னலன்றி' இத்யாதியால் உபாயத்வமும், 'நின் பொருட்டு' இத்யாதியால் ப்ரதான பலித்வமும், அத்தால் ஸ்வாதீன கர்த்ருத்வ போக்த்ருத்வ நிவ்ருத்தியும், 'நின் தனக்கு' இத்யாதியால் பரம ஸாம்யமாகிற புருஷார்த்தத்தின் ஸ்வரூபமும், ப்ரபத்திக்கு அநந்தரம் குணாநுஸந்தானத்தினால் உண்டான ப்ரீதி விசேஷமும் அருளிச் செய்யப்பட்டபடியினால் இது த்வயத்தினுடையவும் அதனுடைய விவரணமான சரணாகதி கத்யத்தினுடையவும் ஸங்க்ரஹமான உக்தி ப்ரத்யுக்தி பரம்பரை. (10)

மும்மணிக்கோவை
வ்யாக்யானம்
முற்றிற்று.

மங்களம்.

MADURAI UNIVERSITY LI...
2 . FEB 1969
MADURAI

ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமியின் வ்யாக்யானத்துடன் கூடிய
ஸ்ரீ வேதாந்த தேசிக திவ்ய ஸூக்திகள்.

## பரமபத ஸோபானம் (மூன்றாம் பதிப்பு)

விலை ரூ. 2—8—0

இந்த நூலில் ஸகல வேதாந்த சாஸ்த்ர அர்த்தங்களும் அடங்கியுள்ளன. ஸ்ரீ தேசிகன் இந்த நூலில் ஒரு சேதனன் ஆசார்ய ஸம்பந்தம் பெறுவதுமுதல் ஸம்ஸார பந்தம் நீங்கி உயர்ந்த பதத்தை யடைவது வரையிலுள்ள க்ரமத்தை, கீழே யிருந்து மிகவும் உயர்ந்த ஒரு உப்பரிகையின் மேல் ஏறுவதற்காக வமைந்த ஒரு ஸோபான மார்க்கம் போல் அமைத்து அருளிச் செய்துள்ளார். வ்யாக்யானம் நூலின் அர்த்தத்தை மிகவும் தெளிவாக விளக்குகிறது. இந்த நூலைப்பற்றி ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்திரிகையான ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவிலும், சுதேசமித்திரன் பத்திரிகையி லும் மற்றப் பத்திரிகைகளிலும் மிகவும் போற்றிப் புகழ்ந்து விமரிசனம் செய்யப்பட்டுள்ளது. சிந்தனையாளர்கள் கால க்ஷேபம் பண்ண வேண்டிய நூல் இதுவென்று சொல்லத் தேவையில்லை.

## ஸ்ரீ தேசிகனும் அவருடைய திவ்ய ஸூக்திகளும்

விலை ரூ. 1—8—0

"ஸ்ரீ தேசிகனுடைய உண்மையான சரித்திரத்தை யறிய விரும்புவோருக்கு இது வொரு மஹா நிதியாகும்" என்று ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா இதைக் கொண்டாடுகிறது.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சேட்டலூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஐயங்கார்,
2, கோதண்டராமர் கோவில் தெரு,
மேல் மாம்பலம், மதறாஸ், 17.